Registered as a Newspaper in Srilanka

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் உங்கள் கரங்களில்... வார இதழாக மக்கள் கருத்துக்களுடன்!

# முஸ்லிம் குரல்

Muslim Kural صوت المسلم முஸ்லிம் குரல்

30 மே 2003 - வெள்ளிக்கிழமை ☆ 28 ரபீஉல்அவ்வல் - 1424 ☆ சுவடு - 12 ☆ தருகை - 15 ரூபா

3 தென்னிலங்கை முஸ்லிம்கள் தனியான, சுயாதீனமான அரசியல் தலைமைத்துவம்

5 பேச்சுவார்த்தை என்ற பெயரில் முஸ்லிம்களை ஏமாற்றவில்லையா?

10 மணமாகி 15 தினங்களில் பிணமான மணப்பெண்

ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச முஸ்லிம் குரலுக்கு வழங்கிய பிரத்தியேகப் பேட்டி

# சந்திரிகா - ஜேவிபி கூட்டினால் அரசாங்கத்தை விரைவில் வீழ்த்துவோம்!



ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி உட்பட பொதுக்கருத்தில் உடன்படும் அனைத்துக் கட்சிகள், மக்களை இணைத்து எதிர் வரும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதன் மூலம் அரசாங்கத்தை வீழ்த்துவோம் என ஜே.வி.பி யின் பிரச்சாரச் செயலாளர் தெரிவிக்கின்றார். சந்திரிகா, ஜே.வி.பி உடன்பாட்டின் மூலம் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை வீழ்த்துவது உறுதியாகி விட்டது. இதனைச்செய்வதற்கு நிச்சயமாக எம்மால் முடியும். முடியும் என்பது மாத்திரமல்ல, இது கட்டாயம் செய்யப்பட வேண்டிய விடயமுமாகும். ரணில்-பிரபாகரன்-விதார ஹெல்கீஸன் ஆகியோரது கூட்டின் மூலம் இலங்கை நாடு நாளுக்கு நாள் பாரிய அழிவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. இந்த கூட்டின் பயனை முஸ்லிம்களும் தொடர்ந்தும் அனுபவித்து வருகின்றனர் வாழைச்சேனை மூதூர் வடிவத்தில்.

இன்றைய நிலையில் ரணிலின் அரசாங்கத்தை கீழிறக்குவது மாத்திரமல்ல எமது நோக்கம். அழிவின் விளிம்பிலுள்ள இலங்கை நாட்டை மீட்டு கட்டி எழுப்புவதும் எமது நோக்கமாகும். இத்தகைய திட்டத்தை மையமாக வைத்து ஐந்தாண்டுத் திட்டமொன்றையும் அமுல்படுத்த உத்தேசித்துள்ளோம். இது தொடர்பான சகல விடயங்களையும் தலையில் சுமந்த வாறே நாம் செயற்படுகிறோம். என்கிறார் விமல் வீரவன்ச.

பேட்டியின் முழு விபரமும் ஐந்தாம்பக்கத்தில்

## உங்களுக்கு..!

* உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுவதற்கு விடுதலைப் புலிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனராம். வடக்கு கிழக்கு மாகாணத்தில் இடைக்கால நிர்வாக சபையொன்றை வழங்குவதற்கு முன்பாக - உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுவதை புலிகள் கடுமையாக ஆட்சேபித்திருப்பதாகத் தெரியவருகிறது.

* கொழும்பு மாநகர சபை மேயர் புதிதாக ஊழல் குற்றச்சாட்டில் மாட்டுப்பட்டு நிற்கிறார். பிரதி மேயர் ஆஸாத் ஸாலி தொடர்ந்தும் மேயருக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவது அறிந்ததே! ஊழல் குற்றச்சாட்டு -மேயர் மீது [illegible] இப்போது பரபரப்படைந்திருக்கும் நிலையில் ஆஸாத் ஸாலி [illegible] உடைத்தி [illegible] என கொழும்பு மாநகர சபை வட்டாரம் தெரிவிக்கின்றது.

* முஸ்லிம் காங்கிரஸில் இருந்து பிரிந்த மு. கா. மாற்றுக்குழுவினர் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்தார்கள் அல்லவா? எத்தனை நாட்களுக்குத் தெரியுமா? ஒரே ஒரு நாள்தான். ஏன் என்று கேட்டால் "இது ஒரு அடையாளப் பகிஷ்கரிப்புத்தான்" என்கிறார்கள்.

பகிஷ்கரிப்பதாக அறிக்கைவிட்ட அடுத்த நாளே பாராளுமன்றத்திற்குப் போகாமல் ரணிலின் அலரி மாளிகைக்கே போனார்களாம். இன்ன இன்ன விடயங்கள், எமக்கு இந்த இந்தப் பதவிகள் தரவேண்டும் என்று பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய விசயங்கள் பேசப்பட்டதாகக் கேள்வி. இதில் பலருக்கு பதவிகள், வாகனங்கள் இத்தியாதி... இத்தியாதி... விரைவில் பலருக்கு உறுதிப்படுத்தப்பட்ட பதவிகள் கிடைக்கவிருப்பதாகத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. ஆனால் நமது மக்களுக்கு தொடர்ந்தும் கிடைத்துவருவது ஏமாற்றமும் இருள் சூழ்ந்த எதிர்காலமும்தான்.

இப்படிப் பலமுறை ரணில் உங்களுக்குப் பதவிகள் தருவதாக வாக்குறுதி அளித்து ஒன்றும் தரவே இல்லையே என சம்பந்தப்பட்ட ஒருவரிடம் கேட்டபோது இது முந்திய மாதிரியான நேரம் இல்லை. இப்போது ரணில் தந்தேயாக வேண்டும் என்றாராம். யாரை பாவம் என்பது? நம்ம பிரதம மந்திரியையா? அல்லது நம்மவர்களையா?

* புலிகளை சிங்களத்தரப்பு பேய்க்காட்டவே முடியாது பாருங்கோ. அவர்கள் எப்படி உறுதியாக நிற்கிறார்கள் என்று. 40 வருடமாக ஏமாற்றியது போதும். அது அந்தக்காலம். இனியும் ஏமாற்ற முடியாது. பேச்சுவார்த்தை... பேச்சுவார்த்தை என்று கொண்டு இலங்கை அரசாங்கத்திற்கு பணம் சேகரிப்பதற்காகவா புலிகள் என்று சரியான மறுத்தான் கொடுத்துப் போட்டார்கள். இதுதான் சந்தர்ப்பம். எனக்காத்திருந்த நோர்வேக்காரர்கள் இடைக்கால சபையை அழுத்திப் பிடிக்கும்படி புலிகளுக்கு புஷ் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்களாம்.

* அடுத்த முறை அஸ்வர் ஹாஜியாருக்கு தேசியப்பட்டியல் உறுதி வழங்கப்படவில்லையாம்! புத்தளத்தில் தேர்தலில் நிற்கலாமா என ஒரு வெள்ளோட்டம் பார்க்கிறாராம். தேர்தலில் போட்டியிட்டு எம். பி. யாவது என்பது சும்மா கதைப்பது போலாகிவிடுமா? என்கிறார் புத்தளம் அன்பர் ஒருவர். புத்தளத்து முஸ்லிம்கள் இந்த முறையாவது தங்களுக்கான பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த வேண்டும். இவ் உத்வேகம் அங்கு இப்போது அதிகமாகியுள்ளதாம்.

* மட்டக்களப்பு மாவட்ட காணிப்பிரச்சினை தொடர்பாக புலிகள் தரப்பில் கையளிக்கப்பட்ட ஆவணம் முஸ்லிம் குரல் சுவடு 10 இல் பிரசுரமானதன் பின், பல்வேறு விடயங்கள் இப்போது அம்பலத்திற்கு வந்திருக்கின்றன. பசீர் தரப்பு முஸ்லிம் குரல் ஆவணம் திட்டமிட்ட பொய் என்கிறதாம். மூடி மூடி மறைத்து வைத்தது அம்பலத்திற்கு வந்தவுடன் ஆட்டம்காணத் தொங்கிவிட்டனர்.

ஓட்டமாவடியில் விவசாயிகளை இணைத்து "முஸ்லிம் குரலுக்கு" எதிராக தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என பசீர் சொன்னவுடன் அக்கூட்டத்தில் கலந்துகொண்ட கல்குடா பிரதிநிதிகள் உண்மைக்காக பசீருடன் மல்லுக்கு நின்றனராம். கேட்ட கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல், இவற்றை "பேர்சனலாக" பேசுவோம் என்றாராம். நாங்கள் கேட்பது இதுதான். ஈழ நாடு பத்திரிகையில் 04 ஏப்ரல் 2003 இல் இளஞ்செழியன் எழுதிய கட்டுரை எந்த ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டது? தமிழர் தரப்பு மறுக்குமா நாங்கள் இப்படியொரு ஆவணத்தை முன்வைக்கவில்லை என்று.....

சூரியனைக் கைகளினால் மறைக்க முடியாது.

* புலிகள் மூதூரில் மறவர் படையணி ஒன்றை உருவாக்கி வருகின்றனராம். "கில்மன்" என்ற புலி உறுப்பினர் ஒருவரின் தலைமையில் அமைக்கப்படும் இப்படையணியில் மூதூர் தமிழ் பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பங்களிலிருந்து ஒரு உறுப்பினர் வீதம் கட்டாயம் சேர்க்கப்பட்டு வருகின்றனராம். மூதூர் பகுதியில் புலிகளின் இப்படையணி குறித்து எதிர்வரும் காலங்களில் மூதூர் பிரதேச முஸ்லிம்கள் அதிக கவனமாக இருத்தல் வேண்டும்.

* புலிகளுக்கு இடைக்கால சபையை கொடுப்பதில் எழுந்துள்ள சட்ட சிக்கலை அடுத்து, வடக்கு கிழக்கில் அபிவிருத்தி, புனரமைப்பு, புனர்வாழ்வு நடவடிக்கைக்கென உயர் நிதி நிர்வாக அமைப்பை ஏற்படுத்த அரசாங்கம் புலிகளுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளதாம். அக்கட்டமைப்புக்குள் "ரேப்பியா" நிறுவனமும் வருகிறதாம். பாருங்கோ - இதிலும் நம்மவர்களுக்குத்தான் பாதிப்பு.

## வடக்கு கிழக்கிற்கு இடைக்கால சபை!

மீண்டும் [illegible] அரசியல் பொறிக்குள் முஸ்லிம் அரசியல் தலைமைகள் அகப்பட்டு விட்டன. முஸ்லிம் மக்களின் அரசியல் பொருளாதார சமூக அமைப்புடன் நேரடியாக சம்பந்தப்பட்ட "இடைக்கால சபை" பற்றிய அரசியல் கோரிக்கையும் அதன் மீதான அரசியல் விவாதங்களும் சர்ச்சைகளும் இலங்கையின் அரசியலை கலக்கு கலக்கி வருகிறது. இந்த அதிர்வும் அதிர்ச்சியும் கலந்த அரசியல் சூழலில் நமது அரசியல் தலைமைகளோ இன்னும்

## முஸ்லிம் அரசியல் தலைமைகளின் மௌனம் ஏன் கலையவில்லை?

இவ்விடைக்கால சபை பற்றி வாயே திறக்கவில்லை. அது முஸ்லிம் காங்கிரஸ் தரப்பாகட்டும். ஐக்கிய தேசியக்கட்சி தரப்பாகட்டும். நுஆ தரப்பாகட்டும். எந்த முஸ்லிம் அரசியல் தலைமைகளும் இது வரை தங்களது மௌனத்தை கலைக்கவில்லை.

விடுதலைப் புலிகள் டோக்கியோ நிதி வழங்கும் மாநாட்டில் தமது தரப்பு கலந்து கொள்வதாக இருந்தால் வடக்கு கிழக்கில் பூரண அதிகாரமுடைய ஆளுகைக்கு உட்பட்ட இடைக்கால சபை ஏற்படுத்தப்படல் வேண்டுமென உறுதியாக கோரி நிற்கின்றனர். இக்கோரிக்கை புலிகள் தரப்பால் முன்வைக்கப்பட்ட கணத்திலிருந்தே தொடரும் சமாதானப்பேச்சு வார்த்தையின் எதிர்காலம் குறித்து ஐயங்கள் எழத்தொடங்கி விட்டன. மேற்கு நாடுகளின் ஆலோசனைகள், ஆசிர்வாதத்துடன் ரணில் விக்ரம சிங்கவின் அரசாங்கம் விடுதலைப் புலிகள் கோரும் இடைக்கால நிருவாக சபையை- தனது அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மையை குலைக்காத வகையில் வழங்குமுன்வந்துள்ளதாக கொழும்பு அரசியல் செய்திகள் தெரிவிக்கின்றன. சமாதானப் பேச்சுவார்த்தை என்ற பெயரில் பெருந்தொகை நிதி நன் கொடைகளை ரணில் விக்ரம சிங்கவின் அரசாங்கம் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதற்காக விடுதலைப் புலிகளுடன் அரசியல் பேச்சுவார்த்தையை தொடர வேண்டிய நிலை ரணில் விக்ரம சிங்கவுக்கு உள்ளது. இந்த வகையில் இடைக்கால நிருவாக சபை ஏற்படுத்தப்படுவது தொடர்பாக அரசாங்கம் தனது நிலைப்பாட்டை இப்போது முன் வைத்துள்ளது. ஜனாதிபதியும் பொது ஜன முன்னணியும் இடைக்கால நிருவாக சபை அமைப்பதை மிக வன்மையாக எதிர்ப்பதாக தெரிவித்திருக்கின்றன. ஜே.வி.பி யோ தனது நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளது. இந்நிலையில் இது வரை முஸ்லிம் அரசியல் தலைமைகள் எதுவும் இடைக்கால சபை தொடர்பாக தங்களது மக்கள் சார்ந்த, நமது மக்களை பாதுகாக்ககூடிய ஏற்பாடுகள் பற்றி பேசவே இல்லை. மௌனம்! மௌனம்!!

இவ்விடைக்கால சபை விவகாரம் முஸ்லிம்களை பாதிக்காது அல்லது அதில் முஸ்லிம்கள் சம்பந்தப்படவில்லை என இத்தலைமைகள் நினைத்துக்கொண்டிருக்கிறதா? என்ற கேள்வி எழுப்பப்படுவது தவிர்க்கமுடியாததாகிறது. தொர்ந்தும் மௌனமாக இருப்பதும் எல்லாம் நடந்து முடிவதற்கு உள்ரங்கில் பூரண ஒத்துழைப்போடு துரோகத்தனமாக செயற்பட்டு விட்டு மக்களை நடுத்தெருவில் விடுவதும். பேச வேண்டிய சந்தர்ப்பத்தில்- அரசியல் நிலைப்பாடுகளை முன் வைக்க வேண்டிய நேரங்களில் - நமது தலைமைகள் காணாமல் போவதும் பின்னர் நமது மக்கள் பாதிக்கப்படும் போதும் அடக்கப்படும் போதும் *"குருடன் யானை பார்த்த கதை 'சொல்வதும்"* வழக்கத்திலும் வழக்கமாகி விட்டது.

இந்த முஸ்லிம் அரசியல் தலைமைகளின் கையறு நிலை தொடரவதற்கான வாய்ப்பை மக்களாகிய நாமே தொடர்ந்தும் நமது அரசியல் தலைமைகளுக்கு வழங்கி வருகிறோம். நமது மக்களுக்கு கடந்த காலங்களில் நமது அரசியல் தலைமைகள் வழங்கிய வாக்குறுதிகள். ஏன் நாம் இவர்களுக்கு வாக்களித்தோம் என்ற மறதி நிலை மக்கள் மத்தியில் தொடர்கிறது. ஒருவித கட்சி, குழு, பிரதேசவாத மயக்க நிலையில் நமது மக்கள் சிக்கவைக்கப்பட்டுள்ளனர். தனக்கு சகுனப்பிழை என்றாலும் தங்களது கட்சி, குழு, பிரதேசத்தை சாராத ஏனைய முஸ்லிம் மக்களுக்கு கண் போனாலும் பரவாயில்லை என்ற மனோ நிலை உள்ளார்ந்த வகையில்-கட்சி அரசியல் மாயையின் காரணமாக- நமது மக்கள் மனங்களில் நிலைகொண்டு விட்டதா? அப்படியில்லையேல் நம்மை சூழும் அரசியல் ஆபத்துக்கள் பற்றிய எதிர்வினை இன்றி ஏன் நாம் செயலற்றுக் கிடக்கிறோம்? இன்றைய சமாதான கால கட்டத்தில் கூட புரிந்துணர்வு உடன்படிக்கையில் நமது மக்கள் ஏமாற்றப்பட்டனர். பிரபா-ஹக்கீம் கூட்டறிக்கையில் நமது அரசியல் நிலைப்பாடுகளுக்கு அநீதி செய்யப்பட்டது. மாளிகாவத்தை எரிந்தது. மூதூர் வாழைச்சேனையில் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது.

முஸ்லிம்களுக்கெதிரான அடக்குமுறை, ஆணவத்தோடு நமது மக்களை நசுக்கியது. மக்களைக்காப்பாற்ற நமது அரசியல் தலைமைகள் முன்வரவில்லை. வெறும் வாய் வார்த்தைகள் பத்திரிகை அறிக்கைகளுடன் நமது மக்களுக்காக போராடும் இத்தலைமைகளின் கடமை முடிந்தது.

இந்நிலையில் மக்களாகிய நம் முன் இரண்டு வழிகளே உள்ளன. ஒன்று நமது அரசியல் தலைமைகளை நமது மக்களின் பொருளாதார அரசியல் நிலைப்பாடுகளின் அடிப்படையில் போராட நிர்ப்பந்திப்பது. முடியாதுவிடின் மக்களாகிய நாம் வீதிக்கு இறங்குவது. மக்கள் பிரதிநிதிகள் நமது மக்களுக்காக போராட முன் வராத போது மக்களாகிய நாமனைவரும் நேரடியாக வெகு ஜன போராட்டத்தில் இறங்குவது தவிர்க்க முடியாததாகும்.

இலங்கை முஸ்லிம்களின் சொந்தக்குரல் [illegible] ...வாங்கிப் படியுங்கள், எழுதுங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சாரு

எழுதுவது... லைலா அஷ்ராவி

## "மின்னல்" அரசியல் சாக்கடைகளின் சங்கமமும் மீன் பிடிக்கும் றங்காவும்

மின்னல் பொறிக்குள் நம் அரசியல் வாதிகள் சிக்கும் அவலம் இப்போது அடிக்கடி இடம்பெறுகிறது. தமிழர் ஊடகங்கள் முஸ்லிம்களின் அனைத்து வித உரிமை சார் பிரச்சனைகளையும் எப்படி எப்படி கையாள்கின்றன, புறமொதுக்குகின்றன என்பதனை எத்தனை தரம் நிறுவினாலும் யாரும் கேட்பதாக இல்லை. மீண்டும் மீண்டும் விளம்பரம் தேடும் முனைப்பில் பலர் படையெடுக்கிறார்கள். ஏற்கனவே நாறிக் கொண்டிருக்கும் நமது கட்சி அரசியலை மேலும் நாரடித்துக் கொண்டிருக்கிறார்கள். நூர்தீன் மசூரும், இர்ஷாதும் சக்தி மின்னலில் நாறியதை நீங்கள் அறிவீர்கள். போதாததுக்கு வவுனியாவிலும் சண்டை பிடித்தார்கள். அதையும் அப்படியே படம் பிடித்து ஒளி பரப்பியது ஒரு ஊடகம். எங்களால் முகம் கொடுக்க முடியாமல் போனது. அது பற்றிய விமர்சனங்கள் பல வந்துகொண்டிருக்கின்றன. பின்னர் என்ன மாய மந்திரம் நடந்ததோ இந்த இருவரும் கூட்டிப்பிடித்து சமரசமாகிக் கொண்டார்கள் என இன்னொரு போட்டோ காட்டியது. இப்படி சண்டை பிடித்தாலும் விளம்பரம்தான், சமரசமானாலும் விளம்பரம்தான். 25 ம் திகதி மின்னலில் அதாவுல்லாவும், சிவாஜிலிங்கமும் கலந்துகொண்டிருந்தார்கள். சேகு இஸ்ஸதீனும், பசீரும் கலந்துகொள்ள இருந்தார்களாம். நல்லவேளை வரவில்லை. சிலவேளை அடுத்த வார மின்னல் ஒரு போர்க்களமாக இருக்கக்கூடும். அந்தக் குறித்த நேர நிகழ்ச்சியில் எப்படியும் எதையும் சரியான முறையில் முன்வைக்க முடியாதென்பது நன்கு தெரிந்த ஒரு விடயம். அதற்கு ஸ்ரீ றங்காவும் விடமாட்டார். முஸ்லிம் விடயங்கள் பேசப்படும்போது கதையை வேறு பக்கம் திருப்பிவிடுவதில் கைதேர்ந்தவர். அதாவுல்லா வடகிழக்கு மாகாண அமைச்சுக்களில் முஸ்லிம்களின் உயர்பதவிப்பிரதி நிதித்துவம் இல்லாததையும் கிழக்கு மாகாணத்தில் சில முஸ்லிம் கிராமங்கள் பற்றிய புலிகளின் அண்மைய கருத்துக்கள் பற்றியும் சொல்லிக் கொண்டிருக்கையில் அவரை இடைமறித்து எங்கோ கொண்டுபோய்விட்டு திசை திருப்பிய கைங்கரியம் வெறுமனே ஓர் ஊடகவியலாளரின் செயற்பாடல்ல. உள்நோக்கம் கொண்ட குணாம்சம் அது. சந்திரிகா ஆட்சி கவிழவும், ரணிலின் அரசு அமையவும் முதன்மைக்காரணியாய் அமைந்தது முஸ்லிம் காங்கிரஸ்தான் என்பது அப்பட்டமான உண்மையாக இருக்க அதுபற்றி குதர்க்கமான கேள்விகளை ஊடகவியலாளராக அல்லாது ஓர் இன மேலாதிக்க வாதியாக ஸ்ரீ றங்கா கேட்டது சரியான கோபத்தைத்தான் தருகிறது. அதைவிட எல்லோரினதும் கோபமும் நமது அரசியல்வாதிகளின் மீதுதான்.

### மனிதாபிமானம்.

கிண்ணியாவைச் சேர்ந்த உள்ளூர் பிரமுகர் ஒருவரைச் சந்திக்கக் கிடைத்தது. பேச்சுவாக்கில் எம். பி. மஹ்ரூபுக்கு அடிவிழுந்தது பற்றி கிண்ணியா மக்களின் மன நிலை எப்படியிருக்கின்றது என்று கேட்டேன். பிரதேசவாத அரசியலிடம் தாங்களோ, மக்களோ சிக்க விரும்பவில்லை. அதில் கவனமாக இருந்தோம். மூதூர் மக்களுக்காக கிண்ணியாவிலுல் உள்ளவர்கள் மனமுவந்து உதவ முன்வந்தார்கள். உதாரணத்திற்கு நாங்கள் மூதூர் மக்களுக்காக வீடுவீடாகச் சென்று பொருட்கள் சேகரிப்பில் ஈடுபட்டிருந்தோம். அப்போது மிக எழிமையான வீடொன்றை அவர்களிடம் தர ஒன்று மிருக்காது என்ற நினைப்பில் கடந்து சென்றோம். இதைக்கண்ட அந்த வீட்டுப் பெண்மணி "ஏன் தம்பி எங்களக்கேக்காமப் போறீங்க?" என்று கேட்டா அதற்கு நாங்கள், நீங்கள் தரும் நிலையில் இல்லை போலிருக்கிறது, நாங்கள் தான் ஏதாவது உங்களுக்குத் தரவேண்டும் போலவும் இருக்கிறது என்றோம். அதற்கவர் நாங்கள் எப்படியிருந்தாலும் பரவாயில்லை தம்பி அவங்கட கஷ்டத்துல நாங்களும் பங்கெடுத்துக்கிறம் இந்தா இத வச்சிக்கோ" என்று பத்து ரூபாவை நீட்டினார். என்று சில சம்பவங்களைச் சொன்னார். உண்மையில் இதைக் கேட்ட எனக்கு கண் கசிந்துவிட்டது! இது நம்மூட மனிதாபிமானம்.

இஸ்ரேலின் பலஸ்தீனம் மீதான ஆக்கிரமிப்புக்கு எதிரான குரல்கள் உலகெங்கும் ஒலிப்பது எமக்குத் தெரியும். பலரும் பல விதத்திலும் எதிர்த்து வருகின்றார்கள். அதில் ஒன்றுதான் தங்களையே மனிதக் கேடயங்களாக்கி இஷ்ரேலின் அட்டூழியங்களை எதிர்ப்பது. இப்படி தன்னையே மனிதக் கேடயமாக்கி உயிரிழந்திருக்கிறார் 23 வயதான ரஷேர்ல் கொர்ரி என்கிற அமெரிக்கப் பெண். அமெரிக்கப் பெண்ணா? அழியட்டும் என்ற வரட்டுத்தனம் நமக்கு வராதிருக்கட்டும். (இடைக்குறிப்பாகச் சிலது சொல்ல வேண்டும். இப்போது நமது மௌலவிமார்கள் ஒட்டுமொத்தமாக அமெரிக்காவை அழித்துவிடு என்று பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறார்கள் மறு புறத்தில் சிலர் இப்படிப் பிரார்த்திப்பது கூடாதென்றும், எல்லோருக்கும் நேர்வழி காட்டும்படியே பிரார்த்திக்க வேண்டும் என[illegible] கூறுகின்றார்கள். இது பற்றிய பத்வாவை யாராவது தரட்டும்.

இப்பெண் காஸாப் பள்ளத்தாக்கில் இஸ்ரேலிய இராணுவ புள்டோசரால் நசுக்கப்பட்டுக் கொல்லப்பட்டாள். பலஸ்தீனர்களின் வீடுகளை இடித்தத் தரை மட்டமாக்குவதைத் தடுக்க தன்னை புல்டோசரின் முன்னால் கேடயமாக்கிய போதே இப்படிக் கொலை செய்யப்பட்டிருக்கிறாள்!

இவர் பலஸ்தீனில் இருந்தபோது எழுதிய கடிதங்கள் ஆவணப்படுத்தப்பட்டிருக்கின்றன. (முடியும்போது வாசகர்களுக்குத் தருகிறேன்) அவற்றில் ஒன்றில் இப்படிக் குறிப்பிடுகிறார். "நான் இப்போது மாபெரும் மனிதப் படுகொலைகளுக்கு நடுவே இருக்கிறேன். ஒரு விதத்தில் இதற்கு நானும் மறைமுகப் பங்களிக்கிறேன் போலுள்ளது. ஏனென்னால் எனது அரசாங்கத்திற்குத்தான் இந்த அழிவுகளில் பெரும் பங்கு போய்ச் சேரும்.

# ஏமாளிகள் இருக்கும் வரைக்கும் ஏமாற்றுபவர்களும் இருக்கவே செய்வர்.

*(புத்தளம் செய்தியாளர்)*

புத்தளம் பிரதேசத்தில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மொழி மூல பாடசாலை எனும் பெயர் பெற்ற கரைத்தீவு முஸ்லிம் மகா வித்தியாலயம் எதிர்வரும் ஜூன் மாதம் 2ம் திகதியுடன் 90 வருடங்களைப் பூர்த்திசெய்கின்றது. 1913 ஆம் ஆண்டு 14 மாணவர்களுடன் ஆரம்பமான இப்பாடசாலையில் தற்போது 800 ற்கும் அதிகமான மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். 33 ஆசிரியர்கள் தேவையான நிலையில் இங்கு 13 ஆசிரியர்கள் மாத்திரமே உள்ளனர். 20 ஆசிரியர்களுக்கு கடும் பற்றாக்குறை பல வருடங்களாக நீடித்து வருகின்றது. குறிப்பாக ஆங்கிலம், விஞ்ஞானம், தமிழ் முதலான பாடங்களுக்கு சுமார் 5 வருடங்களாக ஆசிரியர்கள் இன்றி பாடசாலை மாணவர்கள் பெரும் சிரமப்படுகின்றனர். கா. பொ. த. (சா. த) வகுப்புக்கள் கற்பிக்கவே தற்போதுள்ள ஆசிரியர்கள் பெரும்பாலும் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். இதர வகுப்புக்களுக்கு வரும் மாணவர்கள் ஓரிரு பாடங்களை மாத்திரமே கற்கும் வாய்ப்பு காணப்படுகின்றது. புத்தளம் பிரதேசத்தில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட முஸ்லிம் பாடசாலைகளுக்கு இந்த விதி என்றால் ஏனைய பாடசாலைகளைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை. புத்தளம் கல்வி வலையத்திலுள்ள 58 தமிழ் மொழிமூல பாடசாலைகளில் சுமார் 800 ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுகின்றன. கடந்த பல வருடங்களாக நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு பாரிய முயற்சிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. புத்தளம் பிரதேச முஸ்லிம்கள் கல்விக்கு இரண்டாம் இடம் கொடுத்து செயற்படும் காலமெல்லாம் இந்நிலை நீடிக்கும். வியாபார நோக்கும், பொழுதுபோக்கும் புத்தளம் பிரதேச முஸ்லிம்கள் மத்தியில் முதன்மைப்படுத்தப்படும் நிலை தொடருமாயின் கல்வி கற்ற சமூகமாகவன்றி வெறும் வியாபார சமூகமாகவே புத்தளம் பிரதேச முஸ்லிம்கள் இருக்க நேரிடும். இதன் விளைவு இப்பிரதேசத்தில் அவர்கள் ஆள்பவர்களாக அன்றி வெறுமனே ஆளப்படுவதற்காகவே இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் தொடரும். கல்வியில் புத்தளம் பிரதேச முஸ்லிம்கள் ஈட்டும் வெற்றிகளே அவர்களது அனைத்து வகையான எதிர்கால விமோசனத்திற்கும் வழி சமைக்கும். இதே வேளை ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்த்துவைப்பதில் புத்தளத்து அரசியல் தலைமைகள் காட்டும் கரிசனை கிஞ்சித்தும் திருப்திகரமாக இல்லை. அவர்கள் தமது அரசியல் அதிக நாட்டம் கொண்டுள்ளனர். ஏமாளிகள் இருக்கும் வரை ஏமாற்றுபவர்கள் இருக்கவே செய்வர் இதனை புத்தளம் பிரதேசத்து முஸ்லிம்கள் முதலில் உணர்ந்துகொள்ள வேண்டும்.

## பக்கம் சாராது நடுக்கோணாது "முஸ்லிம் குரல்" வெளிவர வேண்டும்.

முஸ்லிம் குரலின் பத்தாவது இதழைப்படிக்க இன்று கிடைத்தது. நீண்டகாலமாக தமது சமுதாயத்தின் தேவையொன்று இப்பத்திரிகையின் வரவால் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது. தூய தமிழ், அழகிய அச்சு, பொருத்தமான கட்டுரைகள் அனைத்துமே மனதைக் கவர்ந்தன. ஒரே மூச்சில் முழுப்பக்கங்களையும் படித்து முடித்து விட்டு உங்களைப் பாராட்டுவதற்காக உடனே இதனை எழுதுகிறேன்.

பக்கம் சாராது நடுக்கோணாது "முஸ்லிம் குரல்" வெளிவர வேண்டும். நான் படித்த இந்த பத்தாவது இதழ் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸையும் அதன் தேசியத் தலைவரையும் சாடையாக சீண்டியிருப்பது போல தோன்றுகிறது. எப்படி "முஸ்லிம் குரல்" நமது சமூகத்தின் சொத்தாக மதிக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டுமோ அதுபோன்றே கட்சியும் தலைமையும் பாதுகாக்கப்பட வேண்டும். மேல்வரும் காலங்களில் கட்சியின் குறைகளை மட்டுமன்றி அதன் நிறைகளையும் எழுதுங்கள். தலைமைக்கு புத்திமதி கூறுங்கள்.

தமிழ், முஸ்லிம் சமுதாயங்களின் முரண்பாடுகள் தீர்க்கப்படக் கூடியதாக கட்டுரைகள் முஸ்லீம் குரலில் வெளியாக வேண்டும். முற்று முழுதாக தமது மக்களின் நடத்தைகளை மட்டும் நியாயப்படுத்தி எழுதிக் கொண்டிருந்தால் அது தர்மமாகாது. வாழைச்சேனை மூதூர் சம்பவங்கள் இந்த அடிப்படையில் சிந்தித்தற்பாலது.

பொதுவாக "முஸ்லிம் குரல்" நமது சமூகத்தால் வளர்த் தெடுக்கப்பட வேண்டிய ஒரு குழந்தை. நமக்கு விடிவையும், சுபீட்சத்தையும் காட்டக்கூடிய ஒரு கலங்கரை. அது தொடர்ந்து மலர்ந்து மணம் பரப்ப ஆசிக்கின்றேன்.

*ஏ.எச்.எம். மஜீட் J.P.,*
*ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர்*
*செயலாளர்*
*அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல் சம்மேளனம்*
*மருதமுனை 02.*

## நிழல் குடித்த கழுகுகள்

எங்களிடம் ஒரு ராஜாளி இருந்தது
விருட்சமொன்றை விதைத்தது அது
அடியில் சென்று ஆழப்புதைந்து
மண்புழுக்கள் சில வீரியமூட்டின வேருக்கு!

துளுத்து கிளை விட்டு -
திட்டுத்திட்டாய் நிழல் பரப்பி
ஓங்கி நின்றது விருட்சம்
உச்சாணிக்கொப்பில்
கண்களை சுழற்றியபடியே
காவல் இருந்தது ராஜாளி
முக மூடி அணிந்த சில கழுகுகளும்
ராஜாளியாகி அமர்ந்தன கிளைகளில்

முயல், மான், அன்னப்பட்சிகளும்
ஒதுங்கின நிழலின் கீழே
விரண்டுபோன வேங்கைகளும்
விலகியே நின்றன விருட்சத்தை விட்டு

ஒரு நாள்
அமரத்துவம் அடைந்தாயிற்று ராஜாளி
கழுகு[illegible] ஒன்று முடி சூடிக்கொண்டது



அஞ்சாத வாசம் செய்து வந்த
பச்சை நிற மரம் கொத்தி ஒன்று
விருட்சத்தில் கொத்தி துளையிட்டு
எங்கிருந்தோ பறித்து வந்த
இலந்தைப்பழங்கள் சில வற்றை
இறைத்துவிட்டுப் போனது.
இரண்டு கழுகுகள் -
துளையில் கைவிட்டு
சொத்தை பழங்களை பங்கிட்டன -
சுவையானவற்றை தாமே
சுருட்டிக்கொண்டன
கோபம் கொண்ட கழுகுகள் சில
கிளைகளை ஒடித்துக்கொண்டு
வேறிடம் நாடின
நிழலிடம் ஒதுங்கியிருந்த
முயல், மான், அன்னப்பட்சிகளும்
விரண்டோடத்தொடங்கின
விருட்சத்தை விட்டே
எஞ்சியிருந்த நிழலையும்
மிஞ்சியிருந்த கழுகுகளே
குடித்து விட்டதனால் !!!

வாழைச்சேனை இப்னு ஹஸன்.

# இலங்கை நாடு எந்த இனத்திற்குச் சொந்தம்?

பிரதியமைச்சர் பஷீர் சேகுதாவூத் தலைமையில் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தச் சென்றவர்களிடம் புலிகள் ஆவணக்கட்டு ஒன்றை வழங்கியதாகவும், அந்த ஆவணங்களில் பாரம்பரியமான தமிழ்ப் பிரதேசங்கள், திட்டமிட்டு முஸ்லீம்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன என்ற விபரங்கள் அடங்கியிருக்கின்ற தகவலுடன் அந்த விபரங்களும் கடந்த "முஸ்லிம் குரல்" பத்தாவது இதழில் பிரசுரிக்கப்பட்டிருந்தன. இது சிலருக்கு ஆச்சரியமானதாக இருந்தாலும் எம்மைப் போன்றவர்களுக்கு, இது ஆச்சரியமான விடயமல்ல. ஏனெனில் கடந்த காலங்களிலும் கல்முனைப் பிரதேசத்தில், லட்சக்கணக்கில் நல்ல பெறுமானத்திற்கு முஸ்லீம்களுக்கு தமது காணிகளை விற்று லாபமீட்டிய தமிழ்ச் சகோதரர்கள், சமயம் கிடைக்கின்றபோது அக்காணிகளை முஸ்லிம்கள் ஆக்கிரமித்து அபகரித்ததாக கதை சொல்வார்கள். இன்று சற்று வித்தியாசமாக ஆவணமாகக் கையளித்திருக்கின்றார்கள். இது எதில் போய் முடியும் என்று திட்டவட்டமாக் கூற முடியாவிட்டாலும் எமக்கும் சில சந்தேகங்கள் இருக்கின்றன.

* 1. அதாவது முஸ்லிம், தமிழ் உறவுகள் பாதிக்காத வகையில் எமது நடவடிக்கைகள் அமைய வேண்டும் என புத்திமதி கூறிவருவோர், மேற்படி தமிழ்க் கிராமங்களை முஸ்லீம்கள் திட்டமிட்டு ஆக்கிரமித்து, அபகரித்த கதைகளுக்கான பதிலைத் தெரிவிக்க வேண்டும்!

* 2. ஒரு மொழி பேசும் தமிழ், முஸ்லீம்களுக்காகவே நாங்கள் போராட்டத்தை நடத்துகிறோம். அதற்காகவே சமாதானப் பேச்சுவார்த்தை நடாத்துகிறோம் என அடிக்கடி அறிக்கை விடுக்கும் விடுதலைப் புலிகள் தமிழ்க் கிராமங்களை முஸ்லீம்கள் ஆக்கிரமித்த கதைகளைக் கூறும், உண்மையான நோக்கம் என்ன?

*3. ஒரு மொழி பேசும் தமிழ் முஸ்லீம்களுக்காகவே எமது போராட்டம் எனக்கூறும் தமிழ்த் தலைவர்களும், விடுதலைப் புலிகளும் தமிழ் மொழியே தாய்மொ[illegible]யாகவும், வடக்கு கிழக்கை த[illegible]து தாயகமாகவும் கொண்ட முஸ்லிம் மக்களை உடுத்த துணியுடன் சொந்த இடங்களைவிட்டே விரட்டியடித்து, இனச்சுத்திகரிப்புச் செய்த தங்கள் செய்கைகளுக்கு கூறுகின்ற விளக்கங்கள் தான் என்ன?

*4. இலங்கையில் வாழ்கின்ற சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கே இலங்கை நாடு சொந்தமானது. இலங்கைப் பிரஜைகள் இலங்கைத் தீவினுள் எங்கும் வசிக்க இலங்கை அரசியல் யாப்பு வழி வகைகள் செய்திருக்க குறிப்பிட்ட பிரதேசங்கள் எங்களுக்கே சொந்தமென தனியொரு இனம் மட்டும் உரிமை கொண்டாட யார் அனுமதியளித்தார்கள்?.

* 5. இன்று தமிழ் மக்கள் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் சிதறி வாழுகின்ற நிலையில் குறிப்பிட்டதொரு பிரதேசத்தை விடுதலைப் புலிகள் தாங்கள் ஆளவேண்டுமென நினைப்பது போல் முஸ்லிம்கள் ஒரு பிரதேசத்தை தமது வாழ்விடமாக உறுதி செய்ய நினைப்பது மட்டும் எப்படி சாத்தியமில்லாத விடயமாகக் கருத முடியும். தமிழ் மக்களுக்கு ஒரு நீதியும், முஸ்லிம் மக்களுக்கு வேறு ஒரு நீதியுமா?

* 6. இன்று காலம் காலமாக முஸ்லிம்கள் வாழ்ந்த காணிகளை அபகரித்து விரட்டியடிக்க ஆரம்ப நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அதற்கேற்றாற்போல் பேச்சுவார்த்தைகளும் அமைந்திருக்கின்றன. எனினும் வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் எதிர்காலம் பற்றி சிந்திப்பவர்கள் யார்? அதிகாரம் கிடைக்க முன்னரே வட மாகாண முஸ்லிம்கள் விரட்டியடிக்கப்பட்டனர். கிழக்கில் தற்போது ஆரம்பமாகியுள்ளன. இந்த நிலையில் இவர்களுக்கு அதிகாரம் கிடைத்தால் அவர்கள் கூறுவதுபோல் பிட்டும் தேங்காய் துருவலும், அதாவது தமிழர்களுக்கு முஸ்லிம்கள் சம்பல். இன்னும் தெளிவாகச் சொன்னால் பிட்டு அவர்கள் துருவல் நாங்கள். இப்படியொரு நிலையை நாங்களே வலிந்து வரவேற்க வேண்டுமா?

* 7. இலங்கை நாடு எந்த இனத்திற்குச் சொந்தம்? இன்றைய கணக்கெடுப்பில் ஒரு கோடியே இருபது லட்சம் சிங்களவர்களும் முப்பத்தி ஐந்து லட்சம் தமிழர்களும் பதினைந்து லட்சம் முஸ்லிம்களும் வாழுகின்ற எமது நாட்டில் ஒரு குறிப்பிட்ட பிரதேசம் எமது தாயகம் எனத் தமிழ்ச் சமூகம் உரிமைகொண்டாடுவதை நாம் விமரிசிக்கவில்லை. எனினும் முஸ்லீம்களை ஆக்கிரமிப்பாளராக உருவகப்படுத்துவதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

* 8. இலங்கைத் தீவு இறைவனால் படைக்கப்பட்ட போது வடக்கு கிழக்கிலே வாழுகின்ற தமிழ் மக்கள் அனைவரையும் சேர்த்துப் [illegible] வைத்தான். அப்படியானால் முஸ்லிம்கள் வந்தேறு குடிகளா? மேலும் முஸ்லிம்கள் இன்று வடக்கு கிழக்கிலே சுமார் ஆறு லட்சத்திற்கும் அதிகமாகும். இவர்களின் பூர்வீகம் என்ன? முஸ்லிம்களின் மூதாதையர்கள் எங்கிருந்து வந்தார்கள்? எத்தனைபேர் வந்தார்கள்? இங்கே யார் யாரை மணஞ்செய்து தமதினத்தைப் பெருக்கினர். அப்படியிருந்தாலும், வந்தேறிய முஸ்லிம்கள் நிச்சயமாக இங்குள்ள தமிழ்ப் பெண்களையே தமது மார்க்க முறைப்படி மணமுடித்து தமதினத்தைப் பெருக்கியிருப்பர்.

* 9. அப்படியானால் தமிழ் மக்களுக்கு இருக்கும் அதே வாழ்விடத் தாயக உரிமை முஸ்லிம்களுக்கும் உண்டல்லவா? அதிலும் முஸ்லிம்கள் எங்கெங்கு வாழ்கிறார்களோ ஆங்காங்கே அவர்கள் இலங்கைப் பிரஜைகளாக வாழ்வதற்குத் தகைமை கொண்டவர்களாவர். இவர்களை விரட்டவோ அல்லது அடக்கியாளவோ முற்படுவது எந்த விதத்தில் ஜனநாயக முறையாகலாம்? இலங்கை நாட்டில் மட்டுமல்ல உலகிலுள்ள அனைத்து முஸ்லிம்களின் வரலாறுகளைப் பார்க்குமிடத்து அவர்கள் எந்த ஒரு நாட்டையோ, அல்லது கிராமத்தையோ ஆக்கிரமித்ததாகவோ, அபகரித்ததாகவோ சரித்திரங்களில்லை. முஸ்லிம்களை சீண்டியவர்கள் நிம்மதியாக வாழ்ந்ததாகவும் வரலாறுகள் இல்லை. ஆணானப்பட்ட அமெரிக்காவே சாதாரண பின்லேடனைக்கண்டு அஞ்சும்போது ஏனையவர்கள் எம்மாத்திரம்.

**எம். எல். எம். முஸ்தபா,**
**மருதமுனை.**

**வார வாரம் தொடர்ந்து வெளியிடுவது சிரமம் என்றால் மாதத்திற்கு ஒன்றாக வெளியிடலாம்.**

முஸ்லிம் குரல் பத்திரிகை வாரத்தைக் கடந்து வருவது அவ்வளவு நல்லதல்ல வார வாரம் தொடர்ந்து வெளியிடுவது சிரமம் என்றால் மாதத்திற்கு ஒன்றாக வெளியிடலாம். காலம் தவறி வெளிவருவது வாசகர்களை ஏமாற்றும் ஓர் செயலாகும். இருந்தும் முஸ்லிம் குரலுக்கு வாசகர் படை ஒன்று இருப்பது எனக்கு தெரிகிறது.

சளைக்காமல் வெளியிடுங்கள். எமக்கொரு கிள்ளுக்கிள்ளினால் அதை சர்வதேசம் முழுவதும் வெளிப்படுத்த இப்போதைக்கு முஸ்லிம் குரலிருப்பது மனதில் பெரும் திருப்தி. முஸ்லிம் குரலை என் தோளில் அமர் த்திக் கொள்ளவும் நான் தயாராக உள்ளேன்.

இன்னும் புதுமையாக வெளிவரட்டும் ஆயிரம் ஆயிரம் மனங்கள் படிக்கட்டும்

முகமட் அபார்,
478, பள்ளி வீதி, கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிலங்கை முஸ்லிம்கள்

## தனியான, சுயாதீனமான அரசியல் தலைமைத்துவம்!

முஸ்லிம் குரல் பத்திரிகையின் மார்ச் மாத இதழ்கள் சிலவற்றில், கொழும்பு முஸ்லிம்களுக்கு சுயாதீனமான, தனியான அரசியல் தலைமைத்துவம் இல்லை என்ற தலைப்பில் விவாதங்கள் நடைபெற்றிருந்தன. முஸ்லிம் குரல் பத்திரிகை வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் விடயங்களுக்கு மாத்திரம் முன்னுரிமை கொடுக்காது வடக்கு கிழக்குப் பிரதேசத்திற்கு வெளியில் வாழும் முஸ்லிம்கள் அரசியல் மற்றும் சமூக பொருளாதார விடயங்களுக்கு முக்கியத்துவம் அளித்து விவாதங்களைத் தொடங்கியமை உண்மையில் வரவேற்புக்குரிய விடயமாகும்.

கொழும்பு முஸ்லிம்களுக்கென தனியான அரசியல் தலைமைத்துவம் குறித்த மேற்படி விவாதத்தை, கொழும்பு முஸ்லிம்கள் என்ற குறுகிய எல்லைக்குள் இருந்து விடுவித்து, தென்னிலங்கை முஸ்லிம்களுக்கான தனித்துவமானதும் சுயாதீனமானதுமான முஸ்லிம் அரசியல் தலைமைத்துவம் என்ற விரிந்த தளத்தில் பார்க்க வேண்டும் என்ற நோக்குடன் சில குறிப்புக்களை இங்கு முன்வைக்க வேண் டியுள்ளது.

இனப் பிரச்சனைக்குத் தீர்வுகண்டு அனைவரும் சமாதானமாகவும் சமத்துவமாகவும் வாழ்வது என்ற போக்கு கடந்த இரண்டு மூன்று வருடங்கள் தீவிரமடைந்த ஒரு காலகட்டத்தில்தான் (அதாவது சமாதானம் பற்றிய உணர்வுகள் எங்கும் மேலோங்கியிருப்பதாகச் சொல்லப்பட்ட காலகட்டத்தில்) தென்னிலங்கை முஸ்லிம்கள் மாவனல்ல, மாளிகாவத்தை, புத்தளம், போன்ற பகுதிகளில் சிங்கள இனவாதத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்டனர். இந்த நிகழ்வுகள் நமது பார்வையை வேறு ஒரு யதார்த்த நிலை நோக்கிச் செலுத்துமாறு நிர்ப்பந்திக்கின்றது. அதாவது தென்னிலங்கை முஸ்லிம்கள் தனித்துவமான சுயாதீனமான அரசியல் தலைமைத்துவத்தை கொண்டிருக்க வேண்டிய காலகட்டம் நெருங்கிவிட்டது என்பதே அந்த உண்மையாகும். வடக்கு கிழக்கிலுள்ள தமிழ், முஸ்லிம் மக்களுக்கான அரசியல் தீர்வு நெருங்க நெருங்க, தென்னிலங்கை முஸ்லிம்களுக்கென தனியான முஸ்லிம் அரசியல் தலைமைத்துவம் மற்றும் தனியான அரசியல் தாபனத்தின் அவசியம் என்ற நிலையும் தீவிரமடைகின்றது.

"சிங்கள கட்சிகளுடன் கூட்டமைத்து பாராளுமன்றத்தில் எம்பிக்களாக வருவதுதான் அரசியல் தலைமைத்துவம்" என்ற குறுகிய விளக்கத்தை நாம் முதலில் தலைமுழுகிவிட வேண்டும். உண்மையான முஸ்லிம் தலைமைத்துவம் என்பது எது? இன்னாருக்கு வாக்களியுங்கள் இன்னாருக்கு வாக்களிக்காதீர்கள் என்று அறைகூவல் விடுத்தால், தென்னிலங்கை முஸ்லிம்களில் மிகப் பெரும்பாலானவர்கள் அதனை ஏற்றுக் கொண்டு செயற்படும் நிலையைத் தோற்றுவிக்கக் கூடியதும் அரசியல் உரிமைகளுக்காக மக்களை அணிதிரட்டிப் போராடக்கூடிய சக்திவாய்ந்த தலைமைத்துவமே உண்மையான முஸ்லிம் அரசியல் தலைமைத்துவமாகும். இந்த நிலை தோற்றுவிக்கப்படல் வேண்டும். அந்த அர்த்தத்தில்தான் சுயாதீனமான தனித்துவமான முஸ்லிம் அரசியல் தலைமைத்துவம் என்பது இங்கு குறிப்பிடப்படுகின்றது. வெறும் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் என்று குறுகி நிற்காது தென்னிலங்கை முஸ்லிம்கள் அனைவரையும் ஒரே *"உம்மா"* அணிக்குள் ஒருங்கிணைத்து அவர்களின் அரசியல், சமூக, பொருளாதார தளங்களில் நெறிப்படுத்திச் செல்லக் கூடிய அதிகாரம் கொண்டதே உண்மையில் தென்னிலங்கை முஸ்லிம் அரசியல் தலைமைத்துவம் ஆகும்.

வரலாற்று ரீதியாகப் பார்ப்போம் எனின், இனத்துவ அடிப்படையில் இலங்கையிலுள்ள அனைத்து முஸ்லிம்கள் தனித்துவமானவர்கள் என்ற அம்சம் நீண்டகாலத்திற்கு முன்பே உறுதிப்படுத்தப்பட்டு விட்டது. தமிழ், சிங்கள ஆதிக்க அரசியல், சமூக, கலாசார அடக்குமுறைகளின் காரணமாக, அதுவரை உள்ளார்ந்த அம்சமாக இருந்து வந்த முஸ்லிம்களின் இனத்துவ அம்சம் அரசியல் தளத்தில் மேலெழுந்து தன்னை உறுதியாக நிலைநிறுத்திக் கொண்டது.

தனியான இனத்துவக் குழுமமாக இலங்கை முஸ்லிம்கள் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் அரசியல் தளத்தில் நிலைநாட்டப்பட்டாலும் (இராமநாதனின் முஸ்லிம்களும் தமிழர்களே என்ற ஆதிக்க நிலைப்பாட்டைத் தகர்த்து ஈட்டப்பட்ட அரசியல் வெற்றியையே இங்கு குறிப்பிடுகின்றோம்) அதற்கு பின் வந்த முஸ்லிம் அரசியல் தலைவர்கள் இலங்கை முஸ்லிம்களின் அரசியலை இரு பிரதான சிங்கள அரசியல் கட்சிகளுக்குள் ஒன்று கலக்கச் செய்திருந்தனர். வடக்கு கிழக்கு முஸ்லிம்களுக்கு என முஸ்லிம் கொங்கிரஸ் தோற்றம் பெற்ற பின்னரும் கூட இந்தவகையான தாக்கம் குறிப்பிடத்தக்க அளவிற்கு வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் நிலவுவதை எவரும் மறுக்க இயலாது. இது தனியான ஆய்விற்குரியது. சிங்களக் கட்சிகளுடன் கலக்கும் இப்போக்கினால் குறிப்பிட்ட முஸ்லிம் தலைவர்களது சொந்த நலன்கள் பேணப்பட்டது. அதேசமயம் ஒட்டுமொத்த முஸ்லிம்களின் அரசியல்,பொருளாதார நலன்கள் பல அடுத்தடுத்து பறிபோயின என்பதை வரலாற்றி னூடாக அவதா னிக்கலாம். இந்தப் பாதிப்பு தென்னிலங்கை முஸ்லிம்களுக்கும் வடக்கு கிழக்கு முஸ்லிம்களுக்கும் சேர்த்துத்தான் ஏற்பட்டது.

வடக்கு கிழக்கு முஸ்லிம்களை சிங்கள இனவாத ஆதிக்கமும், தமிழ் இனவாத ஆதிக்கமும் ஒருசேர அடக்குமுறைக்குள்ளாக்கியதன் விளைவாக வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் தமக்குரிய அரசியல் தலைமையை 80 களின் நடுப்பகுதியில் மிக விரைவாகவே நிறுவிக் கொண்டனர். தென்னி லங்கை முஸ்லிம் களின் அரசியல் தலைவர்களோ தொடர்ந்தும் இரு பிரதான சிங்கள கட்சிகளின் கால்களில் விழுந்து கிடந்தனர். சிங்கள இனவாத அடக்குமுறைகள் தென்னிலங்கை முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட போதெல்லாம், தென்னிலங்கை முஸ்லிம்களைச் சாந்தப்படுத்தும் கைங்கரியத்தை செய்து கொண்டு அதற்குரிய கூலிகளைப் பெற்றுக் கொண்டு வந்தனர்.

சிங்கள இனவாத ஆதிக்கம் புதிய சிங்கள சமூக சக்திகளின் பலத்தில் புதிய வடிவம் பெற்றுத் திரள்கின்ற இன்றைய கால கட்டத்தில், தென்னிலங்கை முஸ்லிம்களின் அரசியல் போக்குகளில் தவிர்க்க முடியாத மாற்றங்கள் ஏற்பட வேண்டியுள்ளது. அதாவது, தென்னிலங்கை முஸ்லிம்கள் பிரதான சிங்களக் கட்சிகளைச் சார்ந்து நிற்காது ஒரு சுயாதீனமான முஸ்லிம் அரசியல் தலைமைத்துவத்தை உருவாக்க வேண்டிய கட்டம் வந்து விட்டது. இதில் முஸ்லிம்கள் அதிகம் செறிவாக வாழ்கின்றது கொழும்பு, கண்டி, புத்தளம் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த முஸ்லிம்கள் முன்னணிப் பாத்திரம்



வகிக்க வேண்டியுள்ளனர்.

இரு பெரும் பிரதேசப் பரப்புகளில் அதாவது, தென்னிலங்கை மற்றும் வடக்கு-கிழக்கு ஆகிய பிரதேசங்களில் வாழும் முஸ்லிம்களுக்கு இரு விதமான அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சனைகளும் இதன் காரணமாக, இருவேறு அரசியல் போக்குகளும், அவற்றுக்கான வேறுபட்ட தீர்வுகளும் அவசியம் என்பது திட்டவட்டமாக கோட்பாட்டு ரீதியிலும் அரசியல் தாக்கங்கள் மூலமும் யதார்த்தமான ஆதாரங்கள் மூலமாகவும் அண்மைக்காலமாக தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறெனின், வடக்கு கிழக்கு தவிர்ந்த இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் முஸ்லிம்களின் (தென்னிலங்கை முஸ்லிம்கள் என்று அழைப்போம்) அரசியல் தலைவிதியும் அவர்களுக்கென சுயாதீனமான தனித்துவமான அரசியல் தலைமையும் மிக விரைவில் தாபிக்கப்பட்டாக வேண்டிய கட்டம் வந்து கொண்டிருக்கின்றது என்பதை புறநிலைமைகள் உறுதிப்படுத்துகின்றன.

இவ்வாறான சுயாதீனமான அரசியல் தலைமையையும், சுயாதீன அரசியல் இயக்கத்தையும் நிறுவும் முயற்சிகளில் ஏற்படும் உடனடித் தடைகள், இடையூறுகள் யாவை என்று நோக்கினால்,

1- ஐதேக, சுதந்திரக் கட்சியிலுள்ள முஸ்லிம் அரசியல் தலைவர்களின் திட்டமிட்ட எதிர்ச் செயற்பாடுகளும் காட்டிக் கொடுப்புகளும்.
2- அரச உளவுப் பிரிவினரினதும் அரச ஆயுதப்பிரிவுகளினதும் கடுமையான கெடுபிடிகளும் அடக்குமுறைகளும்.
3- இலங்கை முஸ்லிம்கள் அனைவருக்கும் தாமே ஒரே தலைமை என்று தம்மை அழைத்துக் கொள்ளும் முஸ்லிம் கொங்கிரஸ் சக்திகள்.
4- சிகல உறுமய, ஜேவிபி போன்ற சக்திகளின் அடக்குமுறை, அராஜக செயற்பாடுகள்

இவ்வளவு இடை ஞ்சல்களையும் கெடுபிடிகளையும் மீறி தென்னிலங்கை முஸ்லிம்களுக்கென ஒரு சுயாதீனமான அரசியல் தலைமைத்துவம் சாத்தியமா? என்ற கேள்வி எழுகின்றது. இதற்கு உதாரணமாக ஒரு சில வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் தோற்றம் பெற்ற, கணேசன் தலைமையில் அமைந்த *"மேல்மாகாண மக்கள் முன்னணி"* என்ற அரசியல் தாபனத்தை எடுத்துக்கொள்வோம். இதன் உருவாக்கத்தில் பல்வேறு குறைபாடுகள், விமாசனங்கள் இருந்த, போதிலும், அது மேல்மாகாண தமிழர்களின் நலன்களுக்காக குரல் கொடுக்கின்றது. செயற்படுகி ன்றது. இத்தாபனம் மேல்மாகாணத் தமிழர்களுக்காக என்ற நிலையில் இருந்து தற்போது தென்னிலங்கையில் வாழும் அனைத்து தமிழ் மக்களினதும் (புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு அடங்களாக வேறு பிரதேசங்களிலுள்ள தமிழரதும் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்தை எதிர்கொண்டுள்ளது.

தென்னிங்கையில் குறிப்பாக கொழும்பில் சுயாதீனமான அரசியல் நிறுவனமாக அண்மைக்காலங்களில் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி (MULF) செயற்பட்டு வந்துள்ளது. இருந்தும் அதன் செயற்பாடுகளும் அதன் அணிச்சேர்க்கைகளும் மிகக் குறைந்த எல்லைக்குள் இருந்தது. ஆனாலும் அதன் அனுபவங்கள் கருத்தில் எடுக்கப்பட வேண்டிய அம்சங்களைக் கொண்டுள்ளது. தென்னிலங்கை முஸ்லிம்களுக்கான தனியான அரசியல் தலைமைத்துவமும் அரசியல் நிறுவனமும் கவனத்தில் கொள்ள வேண்டிய மேலும் சில அம்சங்களாவன:

+ தென்னிலங்கை முஸ்லிம்களுக்கான அரசியல் நிறுவனமானது தமது தனித்துவத்தை பேணுகின்ற அதேசமயம், வடக்கு கிழக்கு முஸ்லிம் அரசியல் நிறுவனங்களுடன் நெருக்கமான அரசியல் உறவுகளைப் பேண வேண்டும்.
+ தென்னிலங்கை முஸ்லிம்களுக்கென தனியான அரசியல் தலைமையும் அரசியல் தாபனமும் நிறுவப்படுவதில் ஏற்படும் எதிர்ப்புகளையும் இடையூறுகளையும் முறியடிப்பதற்கு சர்வதேச முஸ்லிம் நாடுகளின் அரசியல் சக்திகளுடன் தென்னிலங்கை முஸ்லிம் சக்திகள் நெருக்கமான தொடர்புகளைப் பேண வேண்டும்.
+ சுதந்திரக் கட்சி - ஜேவிபி கூட்டணி முயற்சிகள் சுதந்திரக் கட்சியின் முஸ்லிம் தலைவர்களையும் அவர்களின் ஆதரவாளர்களையும் வெளியேற்றும் அல்லது வெளியேறச் செய்யும் பௌசி அவர்கள் ஒரு அடையாளத் தொடக்கப்புள்ளியாக அமைகின்றார்.
+ ஐ.தே.கட்சியானது தமிழ் தரப்புடன் முரண்பாடுகளுடன் கூடிய இணக்கப்பாடுகளை நோக்கி நெருங்கும்போது ஐ.தே.கயும் நிச்சயம் முஸ்லிம்களின் நலன்களைக் குழிதோண்டிப் புதைக்கும். அப்போது ஐ.தே.கவிலுள்ள முஸ்லிம் தலைவர்களின் முடிவற்ற மௌனமும் காட்டிக் கொடுப்பும் அல்லது வெளியேற்றம் நிகழ்வதற்கான சூழல் விரைந்து ஏற்படும்.

தென்னிலங்கை முஸ்லிம்களுக்கான அரசியல் தலைமை என்ற தலைப்பில் விவாதங்கள் தொடரட்டும். புதிய மாற்றங்களுக்கு வழி சமைக்கட்டும்!

-ஸலாமத்

# கோடரிகள் கொக்கரிக்கின்றன!



மெக்டோனல்ட்ஸ்க்குப் போ. ஒரு பிடி பிடி
Coca cola குடி.
k.f.c க்குப்போ chicken ஐக் கடி. pepsi
cola குடி. அமெரிக்காவையும்
இஸ்ரேலையும் வாய் வலிக்கத் திட்டித்தீர்
எங்கள் எதிரிகளுக்குக் கல்லெறிவதும் நீ;
காசு கொடுப்பதும் நீயே.
என்னால் உன்னைப் புரிந்து கொள்ள
முடியவில்லை. நிஜமாகவே நீயென்ன
ஜாதி ?
"யானைப்படை அழித்த அபாபீல்கள்
எங்கே?"
ஆண்டவனைக் கேட்டேன். தியாகத்தீயில்
குளிக்கும் பீனிக்ஸ்கள் எங்கே ?
ஆண்டவன் கேட்டான்.
வரம் வாங்கமட்டும் வந்திருக்கிறாய்.
ஆனால் தவம் செய்வதற்குத் தயாரில்லை
நீ
அதிசயங்கள் நடக்குமென்று ஆகாயம்
பார்க்காதே. வானவர்கள் வருவார்கள்
என்று வர்ணக்கனாக் காணாதே.
நீ பிரார்த்தனையில் பிரமிட்;
பிரயாசையிலோ மம்மி
வெற்றுப் பிரார்த்தனை வெற்றிக்கு வழி
கோலாது. நேர்மைப் பிரார்த்தனை
தோல்வியை தொடாது.
ஆயிரம் தடவை கையேந்துகிறாய். ஒரு
தடவையாவது கை ஓங்குகிறாயா.
கேவலம்! ஒரு சிறு கல்லெறிவதற்குக்
கூட தயாரில்லை நீ. அதையும்
அபாபீல்கள்தான் செய்ய வேண்டுமென்று
அவாவுகிறாய்; 'துவா'வுகிறாய்.
கடலளவு கண்ணீர் சிந்துகிறாய்.
கையளவு ரத்தம் சிந்தத்தயாரா ?
ஆன்மீக ஆர்வம் மட்டும் போதுமா ?
உன்னிடம் உண்டா விஞ்ஞான வீர்யம் ?
வைரியின் வல்லமை அவனது அறிவியல்
ஆளுமை .
தொடைதட்டும் வைரிகளை தொடை
நடுங்கச் செய்யலாம். ஆனால்... நவீன
தொழில் நுட்பத்தில் உச்சாணிக்
கொப்பில் உட்கார்ந்திருக்க வேண்டும்.
அதை அந்த ஆண்டவனே குர்ஆனில்
கூறுகிறானே. உங்கள்
குதிரைப்படைகளை எக்கணமும் உசார்
நிலையில் வைத்திருங்கள். அதன் மூலம்
அல்லாஹ்வின் எதிரிகளையும் உங்கள்
எதிரிகளையும் அச்சப்பட வைக்கலாம்.
(8:60)
நீ ஆயுதப்புலியாயிருந்தால் அமெரிக்கா
கூட அஞ்சி நடுங்கும். கேவலம் நீயோ
வெறும் காகிதப்புலியாய் இருக்கின்றாய்
கத்தரிக்காய் கூட உன்னைக்கண்டு
நகைக்கும்.
எங்கே உன் ஏவுகணைகள் ?
எங்கே உன் அணு ஆலைகள் ?
எங்கே உன் நீர் மூழ்கிகள் ?
எங்கே உன் போர் விமானங்கள் ?
தகுந்த படி தயாராய் இருக்கின்றாயா நீ?
குர்ஆன்கூறும்
குதிரைப்படைகள் உன்னிடம் உண்டா
உசார் நிலையில்
மூர்க்கம் மிக்க முப்படைகள் உண்டா
நம்மிடம் ?
முதுகில் குத்தும் ஐந்தாம்படை உண்டு
எம்மிடம் ?
பார் பாடம் படி! வட கொரியாவிடம்
வாலாட்டா அமெரிக்கா உன்னை மட்டும்
உருட்டியுருட்டிக் கடித்துக் குதறுகிறதே!
காரணம் என்ன?
வட கொரியா - நிஜப்புலி
நீயோ வெறும் நிழற்புலி
இல்லா ஆயுதம் இனிச்செய்யலாம்
இருக்கும் ஆயுதத்தையாவது
பக்குவமாகப் பயன்படுத்துகிறாயா?
பெற்றோல் - பேராயுதம்!
அது அல்லாஹ்வே ஈந்த அற்புதம்.
ஆயிரம் அணு குண்டுகளுக்குச் சமானம்.
மறந்து விடாதே. உலகப் பந்தை
உருட்டிக் கொண்டிருப்பது
மத்தியகிழக்கின் மசகெண்ணெய்தான்.
அதை ஆயுதமாக்கின் சுற்றும் பூமி கூடச்
சும்மா நின்றுவிடும்.
ஏன்?
உலக வல்லரசு கூட உன் முன்
மண்டியிட்டு உயிர்ப்பிச்சை கேட்கும்
ஆனால் பெற்றோலியக் குண்டு
பேடிகளின் கையில். பேடிகளோ
அமெரிக்கா கேடிகளின் கையில்.
மூர்க்கம் மிக்க முப்படை உண்டா
நம்மிடம்?
முதுகில்குத்தும் ஐந்தாம்படைதான்
உண்டு எம்மிடம்.
சகல படைகளும் எம்
சத்துருகளிடமுண்டு பீரங்கிப் படையில்
இருந்து. பிரச்சாரப்படை வரை
செய்மதி யுகத்தில் வாழுகிறாய்!
செய்திப்படை உண்டா உன்னிடம்.
தூசு படிந்த துப்பாக்கி. முனை மழுங்கிய
பேனா. இன்னும் எத்தினை நாளைக்கு?
உன் துப்பாக்கியை நீ எப்போது தூசு
தட்டித் துடைக்கப் போகிறாய்? உன்
பேனா முனையை என்றைக்கு நீ செப்பம்
செய்யப் போகிறாய்?
அவனிடமோ ஆயுதப் படையிலிருந்து
காகிதப் படை வரை கனச்சித்தமாய்
உண்டு.
செய்மதி யுகத்தில் வாழுகிறாய். செய்திப்
படை உண்டா உன்னிடம்?
எங்கே உன் ஊடகங்கள்? தகவல்
படையை தயார் நிலையில்
வைத்திருக்கிறாயா நீ
சொல்! குர்ஆன் கூறும்
குதிரைப்படைகள் உன்னிடம் உண்டா
உசார் நிலையில் ?
நம்பத்தகு நலாம்படைகள் உண்டா
நம்மிடம்
முதுகில்குத்தும் ஐந்தாம்படைதான்
உண்டு நம்மிடம்!
முதல் உலக மகாயுத்தம் உஸ்மானிய
பேரரசை உடைத்துப்போட்டது.
அப்போது துருக்கி துண்டாடப்பட்டது.
அதுவோ மேற்கால்
கொண்டாடப்பட்டது.
அன்றைய துருக்கி வெள்ளை
நரிகளை ஆட்டிப்படைத்த வேங்கை
இன்றைய துருக்கியோ வெள்ளை
நரிகளின் வேலிதாண்டா வெள்ளாடு.
ஏகாதிபத்தியவாதிகளின் பிரித்தாளும்
தந்திரம் Divide and Empera அவர்கள்
மந்திரம்.
அன்றைய அறபகம் ஒற்றைப் புலி
இன்றைய அறபகமோ
இருபத்திரெண்டு பூனைகள்.
அன்று வல்லரசாய் இருந்த போது
வணங்கப்பட்டோம்! இன்றோ
சிற்றரசுகளாய்ச் சிதைந்து
வதைக்கப்படுகிறோம். முஸ்டியாயிருந்த
போது முதல் மரியாதை! விரல்களாய்ப்
பிரிந்தபின் அவமரியாதை.
எங்கள் நிஜ எதிரிகளை நீ தெரிந்து
வைத்திருக்கின்றாயா?
அமெரிக்காவும் இஸ்ரேலும்
இங்கிலாந்தும் எமது பகிரங்க
விரோதிகள். பயமேயில்லை.
எமக்குள்ளேயிருக்கும்
எட்டப்பர்கள்தான் படுமோசமான
துரோகிகள்.
அரபு ஆடை. முஸ்லிம் முகமூடி. நய
வஞ்சக நாய்கள் நமக்குள்ளிருக்கும்
நபும் சகப் பேய்கள்.
தன் தாயை அமெரிக்கனுக்குத் தாரை
வார்த்து விட்டு அதைப்பார்த்து
ரசிக்கும் அறபு மன்னர்கள்
பன்றிகளின் பரம்பரையில் வந்தவர்கள்.
மூர்க்கம் மிக்க முப்படை உண்டா
நம்மிடம்
முதுகில் குத்தும் ஐந்தாம் படை
உண்டு எம்மிடம்
எமது காடுகளைக்கற்பழிக்கும்
கோடரிகளைக் கோபிக்கிறாய்!
காம்புகளை மறந்து விட்டாயா.?
இந்த யுகம் எமக்கு ஒரு தற்காலிகத்
தோல்விதான். ஆயினும் அது நம்மை
ஒரு நிரந்தர வெற்றிக்கு அழைத்துச்
செல்வது நிச்சயம்.
இந்த யுகம் அரபு நாடுகளில்
இஸ்லாமிய புரட்சிக்கான வீர்யம் மிக்க
வித்துக்களை விதைத்துவிட்டது.
இன்றைய அரபகம் நீறு பூத்த நெருப்பு.
ஈராக்கில் சிந்தப்படும் இரத்தம் அந்த
நெருப்பை மூட்டும் நெய்.
இன்றைய இஸ்லாமியம் உறங்கும்
எரிமலை. உறங்கும் எரிமலை
உசும்பும்போது உலகம் தாங்காது.
கேள்! கவனமாகக்கேள்!! காது
கொடுத்துக் கவனமாகக்கேள் !!
சவுதி ராஜாக்களின் கோட்டை
கொத்தளங்களின் சரியும் சத்தம்
கேட்கிறது எனக்கு. வளைகுடா
சுல்தான்களின் சிம்மாசனம் சிதையும்
சத்தம் கேட்கிறதா உனக்கு ?
ஈரானிய இஸ்லாமியப்புரட்சி பழமை
வாய்ந்த மயிலாசனத்தையே மண்
கவ்வ வைத்து விட்து.
இந்த ஈராக்கிய யுத்தம் அரேபிய
இதயங்களில் இஸ்லாமியப்
புரட்சிகளின் அக்கினி விதைகளை
அவசர அவசரமாக விதைத்து விட்டது.
இது விதைக்கும் காலம் வியர்வை
சிந்துவோம் கண்ணீர் சிந்துவோம்.
செந்நீர்சிந்துவோம்.
அறுவடைக்காலம் வரும்போது
அமெரிக்கா அடிவருடும் மலட்டு
மன்னர்களின் சிரசுகள் கொய்து
சிந்தை மகிழ்வோம் அப்போது.
எங்கள் காடுகளை கற்பழிக்கும்
கோடரிகளைக் கோபிக்கின்றாய்
காம்புகளை மறந்து விட்டாயா ?
கோடரிகள் கொக்கரிக்கின்றன.
காம்புகளை காவு கொள்வோம்.
காம்புகளை காவு கொண்டால்
கோடரிகள் கொட்டம் அடங்கும்
கோடரிகள் கொட்டம் அடங்கின்
எமது பச்சைக்காடு விண்ணின்
விளிம்பு தொடும்.

உஸ்மான் மரிக்கார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டிலுள்ள பள்ளிவாசல் - தக்கியா - ஸாவியாக்களின் வரலாறுகள் எழுதி - நூலுருவாக வேண்டும்

இலங்கைத் தாயகத்தில் முஸ்லிம்கள் 2 ஆவது சிறுபான்மை இனத்தவர்களாக வாழ்ந்து வருகின்றனர். முஸ்லிம்கள் "கிழக்குலகின் சுவர்க்கமாகிய நம் இலங்கைக்கு வந்தது நேற்றோ முந்தாம் நாளோ அல்ல. சென்ற ஆண்டுமல்ல. சென்ற நூற்றாண்டுமல்ல. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்துக்கு முன்பிருந்தே. அராபிய மூதாதையர்கள் நம் இலங்கையுடன் வர்த்தக வாசல்கள் மூலம் வந்து போயினர் - தொடர்பு பூண்டிருந்தனர் என்பதற்கான வரலாற்றுத் தடயங்கள் இருக்கவே செய்கின்றன.

இந்த வரலாற்றுத் தடயங்களுக்கு மௌன சாட்சியங்களாக, நாடெங்கும் பள்ளிவாசல்களும் - தக்கியாக்களும்-ஸாவியாக்களும் எழுந்து நிற்கின்றன. முஸ்லிம்கள் இலங்கையின் எந்த ஒரு மூலையிலும் ஒதுங்கி, ஓரமாகி -தூரமாகி வாழாமல், நாடெங்கும் பரவியும் நாட்டின் நன்மை தீமைகளில் விரவியுமே வாழ்ந்து வருகின்றனர். என்பதற்கு, சரித்திரச்சாலைகளில் எத்தனையோ உதாரண மைல் கற்களை சுட்டிக்காட்ட முடியும்.

முஸ்லிம்கள் இந்நாட்டில் பரவியும்-விரவியும் வாழ்ந்த - வாழ்ந்து வரும் நிகழ்வுகளுக்கு ஒவ்வொரு ஊரிலும் கம்பீரமாக எழுந்து நிற்கும் இறையில்லங்களான பள்ளிவாசல்களும், மறை மணம்கமழும் தக்கியாக்களும் ஸாவியாக்களுமே மௌன சாட்சியங்களாகும் என்பதை மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

சன்மார்க்க நெஞ்சங்களே-இந்த சாட்சியங்கள் அனுஷ்டித்து வரும் மௌனத்தை இன்னும் நம் சமூகம் அனுமதிக்கவோ-அங்கீகரிக்கவோ முடியாது; கூடாது. ஏனெனில் நாளிலும் பொழுதிலும் எம்மை சுற்றி எரியும் பிரச்சினைகள், மௌனம் கலைய வேண்டிய அவசியத்தையும், அவசரத்தையும் சொல்லாமல் சொல்கின்றன. ஆம்... சாட்சியங்கள் பூண்டிருக்கும் மௌனம் கலைந்தாக வேண்டும் என்பது, காலத்தின் கட்டளையாகும்.

மௌனம் கலைவதென்றால் அது என்னவென்று யோசிக்கிறீர்களா....?

ஆம்! நாடெங்கும் பரவியிருக்கும்-பள்ளிவாசல்-தக்கியா- ஸாவியாக்களை "பேச"விட வேண்டும். அவற்றை உசுப்பி விட்டால், அவை கடந்து வந்த பாதையிலே நடந்து போன விசயங்களை எல்லாம் கதை கதையாகச் சொல்லும். அந்தக் கதைகளை எல்லாம் சமூகம் ஆவணப்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டும். முல்லா பீடிகை போட்டுச் சொல்வது, சமுதாய நெஞ்சத்திற்கு புரிகிறதா? மேற்படி பள்ளிவாசல்-தக்கியா-ஸாவியாக்களின் வரலாறுகளை எழுத்தாக்க வேண்டும் எழுதப்பட்ட வரலாறுகளை நூலுருவாக்கி வெளியீடு செய்ய வேண்டும். பொது நூலகங்கள்-பல்கலைக்கழகங்கள் - சமூக நிறுவனங்கள் - அரபுக் கல்லூரிகள் போன்றவற்றிற்கு இலவசமாக அனுப்பி, மக்கள் பார்வைக்கு எளிதாக்கி வைக்க வேண்டும்.

இப்படிச்செய்வதன் மூலம் இந்நாட்டின் முஸ்லிம்கள் வாழ்ந்த கதையை சம காலத்தவர்க்கு நினைவூட்டி, எதிர்கால சந்ததிக்கு சரித்திர நூலாக விட்டுச் செல்வதன் மூலம்பிற இனத்தவர்முன்னே முஸ்லிம்களின் இருப்பை உறுதி செய்ய வேண்டும் இந்த் உறுதிப்பாடு சரித்திர பார்வைகளையும் சந்தேக சிந்தனைகளையும் நீக்கிவிடுவதுடன் சத்திய சரித்திரங்களையும் உருவாக்கி விடும்.

பள்ளிவாசல் என்பவற்றின் சரிதைகளை எவ்வாறு எழுதலாம்? என்பது குறித்த சில சிந்தனைகளை வாசக உள்ளங்களுடன் பரிமாறிக்கொள்ள முல்லா அவாவுறுகிறேன்.

ஒவ்வொரு ஊரிலுமுள்ள பள்ளிவாசல் நிருவாக சபைகளும் ஸாவியா -தக்கியாக்களை பரிபாலனஞ் செய்யும் குழுவினர்களும் இந்த விடயத்தில் தலைமைப்பொறுப்பை ஏற்க வேண்டும். ஊரிலுள்ள பெரியவர்களையும், கல்விமான்களையும் சமூக நல அமைப்பின் உத்தியோகத்தர்களையும் ஒன்றிணைத்து, ஒரு சரித்திர வாக்கக் குழுவை உருவாக்க வேண்டும்.

பிரஸ்தாப சரித்திர வாதக்குழு,தாம் எழுதப்போகும் பள்ளிவாசல் பற்றிய விடயங்களை சேகரிப்பதற்கு, ஒருகேள்விக் கொத்தினை தயாரித்து, அச்சிட்டு, ஊர் மக்களிடையே விநியோகம் செய்து, ஜமாஅத்தார் இது பற்றி அறிவிக்க வேண்டும். இது குறித்து பள்ளிவாசல் விளம்பரப்பலகையிலும் எழுதி, மக்கள் பார்வைக்கு வைக்கவேண்டும். ஜமாஅத்தார்கள் அவற்றை நிரப்பித்தரும்படி கேட்டுக் கொள்ள வேண்டும். இப்படி பிரச்சாரம் செய்வதன் மூலம், குறித்த பள்ளியின் வரலாறு தொடர்பான ஒரு ஜன ரஞ்சக தன்மை ஏற்படுத்தலாம். சமுதாயத்தின் பார்வையை அதன் பால் திருப்பலாம். எல்லா ஊர்களிலுமே முஸ்லிம் பாடசாலைகள் இருக்கின்றன. பிரஸ்தாப பாடசாலை, அதிபர் - ஆசிரியர்களுடன், ஊர் கல்விமான்களையும் இணைத்துத் தரப்படும் கேள்விக்கொத்தின் தகவல்களை அலசி ஆராய்ந்து அவற்றின் நம்பகத்தன்மையை ஊர் பெரியவர்கள் - முதியவர்கள் -மூதாட்டிகள் மூலம் உறுதி செய்து கொள்ள வேண்டும் அதன்பின் எழுத்தாற்றல் உள்ள அறிஞர்களைக் கொண்டு வரலாற்றினை எழுதும் பணியை துவக்க வேண்டும்.

முஸ்லிம் சமய, கலாச்சார அலுவல்கள் அமைச்சு, தேசிய மீலாத் விழாவையொட்டி ஆண்டு தோறும் மீலாத் விழா நடைபெறும் மாவட்ட முஸ்லிம்களின் வரலாற்றினை எழுதவைத்து, நூலாக்கி வெளியிடும் பயனுறு பணியை செய்து வரவே செய்கிறது. இவ்வமைச்சு நாட்டிலுள்ள பள்ளிவாசல்கள் உள்ளிட்டு, ஸாவியா - தக்கியாக்களின் வரலாற்றினை எழுதி நூலாக்கும் இந்த முயற்சியையும் வாழ்த்தி வரவேற்க வேண்டும். என்பதை சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அத்தோடு பரவலாக எல்லா ஊர்களிலுமே மேற்கொள்ளப்படும் இவ் வரலாற்று நூலாக்க முயற்சியை செவ்வனே செய்து முடிக்க, அமைச்சு மூலமாக ஒரு நிதி உதவியைச் செய்ய முன்வரவேண்டும். நாட்டிலுள்ள எல்லா இறை இல்லங்களினதும் பதிவு, அமைச்சிடம் இருந்து வருகின்றது. இப்பதிவினை அடியொட்டி, பள்ளிவாயல்-ஊர்-ஜமாஅத் நிலைமையை சீர் தூக்கிப்பார்த்து, ஒரு கணிசமான தொகையை அமைச்சு வழங்கினால் அது ஊரின் உன்னத முயற்சிக்கு உதவிக்கரம் நீட்டியதாக அமையும்

இதற்காக அமைச்சு ஒரு நிதியத்தினை (fund) அங்குரார்ப்பணம் செய்யலாம். நாட்டிலுள்ள முஸ்லிம் தனவந்தர்களிடம் மேற்படி நிதியத்தின் ஆரோக்கியத்திற்கு உதவும் படி கோரலாம்.

சன்மார்க்க உடன் பிறப்புக்களே-முல்லா, இப்பள்ளிவாசல்-தக்கியா-ஸாவியாக்களின் சரிதை நூல் முயற்சியை இவ்வளவு ஆர்வத்துடனும் அக்கறையுடனும் "முஸ்லிம்குரலில் "ஒலிப்பதன் உள்ளர்த்தம் புரிகிறதா ? சமுதாயத்தின் சமகால-எதிர்கால நிலவரங்களில், இம்முயற்சி பல நன்மைகளை தரும் என்பதை சமூக பிரக்ஞையுடன் சிந்திப்போர் நிச்சயம் உணரவே செய்வர்.

அது மட்டுமா ஒவ்வொரு பள்ளி வாசலும்- தக்கியாவும்-ஸாவியாவும் தன்னுள் பல பல ரகசியங்களை மூடியே வைத்திருக்கின்றன என்பதை முல்லா நன்கறிவேன், அவற்றுள் பல நம் சகோதரர்களுக்கே தெரியாது-புரியாது என்றால், நம்புவீர்களா?

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்




*முஸ்லிம் சமூகத்தின் அரசியல் - சமூக - சமய - கலை கலாசாரம் முதலான அனைத்து கோணங்களுக்கும் நமது 'முல்லா' விஜயம் செய்து கோணங்களில் கோலாட்சி புரியும் கோலங்களை இங்கே துப்பாய்வு செய்து விமர்சிப்பார். சமூக நலனை மட்டுமே அடிநாதமாகக் கொண்டிருக்கும் 'முல்லா' வின் விமர்சனப் பார்வை. சிலரை சுடலாம். சிலருக்கு அடியாகக் கூட படலாம். எனினும் தனிப்பட்ட முறையில் எந்த தனிமனிதரையும் தாக்கவோ காரணமின்றி தூக்கவோ 'முல்லா' முன்வரமாட்டார். இதோ... முல்லாவை சந்தியுங்கள் அவரது வரிகள் குறித்து சிந்தியுங்கள். 'முல்லா'வின் பார்வை தொடர்பான ஒட்டிய கருத்துக்கள் - வெட்டிய சிந்தனைகள் - விமர்சனங்கள் யாவும் வரவேற்கப்படும்.*

தனது இறுதி ஹஜ்ஜை முடித்துக் கொண்டு ஆற்றிய அறிவுரையை சற்று அசை போட்டுப்பாருங்கள். அவ்வுரையில்.... உம்மத்துக்கள். "இந்த இஸ்லாத்தினை நானிலத்தின் நாலா திக்குகளுக்கும் சென்று எத்திவையுங்கள்...." என்ற ஏந்தல் நபியின் வார்த்தையை சிரமேற்கொண்டு, நாயகத் தோழர்கள் உலகின் எண்டிசையும் நோக்கிப் போனார்கள்.... அப்படி தீன்-பணிக்காக திக்விஜயம் மேற்கொண்ட ஒரு தோழர் நம் இலங்கைக்கும் வந்து இங்கேயே வபாத் ஆனாராம். அவரது அடகஸ்தலம் அம்பாரை மாவட்டத்தின் "வரிப்பத்தான் சேனை" என்ற இடத்தில் இருப்பதாக முல்லா அறிய வந்துள்ளேன். இத்தகவல் ஆராயப்பட வேண்டாமா ? அரங்கேற்றப்பட வேண்டாமா ?

சிலாபம் நகரிலுள்ள "மலாயர் பள்ளித் தோட்டத்தில்"(Maly Moseque Garden) ஒரு தக்கியா உள்ளது அதில் அடங்கப்பட்டவர் "குஞ்சலி மரைக்கார்" என மலையாள மொழியில் எழுதப்பட்டுள்ளது. யார் இந்தக் குஞ்லசி மரைக்கார்? தென்னிந்தியாவிலே வீர பாண்டிய கட்ட பொம்மனுக்கும் முன்னே, வெள்ளையர்களை எதிர்த்த முதல் சுதந்திரப் போராட்ட வீரராகிய - மலையாள முஸ்லிம் கடலோடியான குஞ்சலி மரைக்கார். பிற்காலத்தில் வெள்ளை அரசினால் நாடு கடத்தப்பட்டாரே.....

அவர்-அந்த முஸ்லிம் போராட்ட வீரர் நம் இலங்கை கரையில் ஒதுங்கினாரா? சிலாபத்தில் குடியேறினாரா? அவரா இவர்? இத்தகவல் ஆராயப்பட வேண்டாமா? அரங்கேற்றப்பட வேண்டாமா?

கொழும்பு மாநகரின் இதய இடம் வாழைத்தோட்டம் ஆகும். பல வரலாற்றுச் சம்பவங்களின் பூந்தோட்டம் இது. 20 ம் நூற்றாண்டின் ஆரம்ப காலப் பிரிவில் மகாத்மா காந்தி - கவிக்குயில்- சரோஜினி நாயுடு - இந்தியாவின் முதல் கல்வி அமைச்சரான அபுல் கலாம் ஆஸாத் போன்ற இந்தியத்தலைவர்கள் இலங்கையில் வந்தபோது, இந்த வாழைத்தோட்டத்தின் "பிரைஸ் பார்க்" (இன்று ஏ.ஈ குணசிங்க மைதானம்) திடலில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டங்களில் உரையாற்றியிருக்கின்றனர். அவ்வாறு வாழைத்தோட்டம், வந்த சமயத்தில் அபுல் கலாம் ஆஸாத் ஒரு நேரத் தொழுகைக்கு வாழைத்தோட்ட பள்ளிக்கு (இன்று அல்-மஸ்ஜிதுன் நஜ்மி ஜும்மா பள்ளி வாயசல்) வந்தாரா? முல்லா செவி கேட்ட செய்தி இது! இது ஆராயப்பட வேண்டாமா அரங்கேற்றப்பட வேண்டாமா ?


இவ்வாறு எத்தனையோ வரலாற்று சம்பவங்கள் புதையல் ரகசியங்களாக, நம் பள்ளிவாசல் முற்றத்தில் சிதறிக்கிடக்கின்றன. அவற்றை எல்லாம் ஒன்று திரட்டும் நற் பணியில் இன்றே இப்போதே அடியெடுத்து வைக்க முல்லா சமுதாய நெங்சங்களுக்கு அழைப்பு விடுக்கிறேன்.

---

# வடக்கு முஸ்லிம்களின் துன்பம் கலந்த வாழ்க்கை

## எங்கே செல்கின்றன நமது பாதைகள்

விடத்தல் தீவு றுஸ்தா





வடக்கு முஸ்லிம்களின் தேசிய அடையாளத்துக்கும், வாழ்தலுக்கான ஒருமைப்பாடுகளோடு எதிர்பார்ப்புகளின் நியாயப்பாடுகளுக்கும் இன்றைய அதிசிக்கல்மிகு சூழலில் கொடுக்கப்பட்டுள்ள விலைதான் என்ன?

வெறும் அதிஸ்டமில்லாத வாழ்வின் துயர் நிலைகளில் மௌனத்தின் உள் வலிகள் சூழ்ந்து பகையேறி விடிவில்லாத பூகோள அமைப்பொன்றின் மூலையில் விடப்பட்டுள்ளதா?

தேசியம் என்ற சொல்லில் மறைந்துபோன மானிடத்துயரோடு உயிர்வாழ்தலுக்கு ஏற்றதான எந்த சூழலையும் விட்டுவைக்காமல் இனப்பிரச்சினை கொழுந்துவிட்டெரிந்துகொண்டிருந்த காலப்பகுதியில் தனித்துவமும், சமுதாய உரிமைகளும் தாய் மண்ணில் வியாபித்திருந்த இஸ்லாமிய ஆளுமைகளையும் பரம்பரை இருப்பையும் சுருட்டிக் கட்டிக் கொண்டு நிலபுல நேயங்களும், விருப்புகளும் வெறுங்கனவாக "ஓடுங்கள்" என்ற கடும் அதட்டலோடு கூடிய வன்மத்தின் கடும் உச்சத்தில் அடக்கு முறைப்படுத்தப்பட்ட ஒரு இனம் இன்னுமொரு சிறுபான்மை இனத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இனச்சுத்திகரிப்பானது இற்றைக்கு சுமார் 13 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்தேறிய "நிலபுல பறிப்பு" வரலாற்றில் இன்னும் கண்ணீராலேயே எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இலங்கை வரலாற்றில் ஒரு தேசிய இனத்தினது சகல வளங்களும் பலாத்காரமாய் பறித் தெடுக்கப்பட்டு பெரிய தன்மான துரோகமும், அதிகார மறுப்பும் செய்யப்பட்டு நடுத்தெருவில் வைத்து ஓடச்சொன்னது அங்கிருந்த எங்களுக்கு எப்படி இருந்திருக்கும்?

அன்றைய மத்திய அரசிலிருந்த தடுமாற்றப் போக்கு ஆயுதக்குழுக்களிடம் இருந்த வன்முறைப்படுத்தப்பட்ட வலை விரிப்புகள் சந்தேகத்திற்கு இடமான ஆள் நடமாட்டங்கள் போன்றன வட புல இஸ்லாமியர்களை நிம்மதி கொள்ளச் செய்யாத செயற்பாடுகளால் தாய் தேசத்திலேயே அநாதையாக்கப்பட்ட துன்பியல் சம்பவமானது சன நாயகம் பேசுகிற எங்களின் அரசியல் சித்தாந்தங்களுக்கு முன்னால் உயிரோடு தோல் கிழிக்கப்பட்ட உயிரினமாய் வேதனையில் வலியெடுத்து இருப்புக்காய் வடித்த சத்தம் எம் செவிப்பறைக்குள் விட்ட நேரம் சமுதாயத்தின் நிம்மதியின்மை அப்போதே உக்கிரமடைந்தது.

எமது உம்மாவும் உனது அம்மாவும் வேறுபடுத்திப்பார்க்கப்பட்டபோது வானம் [illegible]மல்ல, வரலாறும் அழுத்து. அம்மாக்கள் தோள் மீது கிடந்து இன்றும் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கும் தொட்டில் கால உறவுகள் கூட தேம்பித் தேம்பி அழுதன. மொழி அழத் தொடங்கிய போது விலாசங்களும் எங்களைவிட்டு விடைபெறலாயின.

தூரத்தில் தெரிந்த நம்பிக்கைகள் ஒரு கைக்குழந்தையின் பலத்துடனேயே ஒரு சிலருக்கு இருந்திருக்க வேண்டும். தோழமையோடு கூடிய தமிழ்ப் பண்புகள் சுயமாக ஏற்றிய தழும்புகளோடும் ஒருங்கிணைந்தும் ஏற்றிய ஏமாற்ற வெளிப்பாடுகளோடும் இன, மத, பேதமற்ற வரலாற்று கௌரவங்கள் எல்லாம் கேள்விக் குறியாய் எங்களின் முன்னால் விஸ்வரூபம் எடுத்து நின்றன.

காக்காவைத் தேடிப்போன தம்பியை காணவில்லை. கடைக்குப் போன வாப்பா, தங்கச்சிகளின் அழுகையைத் தேற்ற வழிதெரியாத விரக்திப் பார்வைகள், சகோதர வாஞ்சைகளின் புன்முறுவல்கள்.

அனுமதி தரப்பட்ட சொற்ப சுமைகள், நிரந்தர அவமானங்கள், இனிவரும் காலத்தின் அவதாரங்களை தேடி சோகம் பூத்த கரி நாள் ஒன்றில் உடன் பிறப்புக்கள் வடக்கின் நில புல அசையும், அசையா சொத்துக்களை விட்டும் விரட்டப்பட்ட ஞாபக வலிகள் உட்காயமெடுத்து ஆட்டிப்படைக்கும் துயரின் உச்சத்தை என்னவென்பதாம்.

வாழ்க்கையே எங்களை மன்னித்துவிடுங்கள், வரம்புகளே எங்களுக்கு வழிவிடுங்கள், காகங்களே எங்களுக்காக கத்தித் தீருங்கள், கடைசி சுவாசத்தையும் பறித்தெடுத்து வசந்தத்தை ஆயுதங்களால் சிறைப் பிடித்த எந்தப் பூமரங்களுக்கும் இத்தியாதி வேண்டுகோள்களை நாங்கள் அன்று விடவில்லை. நிலவும், நட்சத்திரங்களும் எங்கள் எல்லைகள் மீது ஒளி பொழிந்ததையும், தென்றலும், மழையும், சூரியனும், தரைக்கூடலும் ஏமாற்றப்படக்கூடாது என்பதற்காகவும் எமது வரலாறுகள் சர்வதேசிய ஊடகங்களாலும், மனிதாத்மாக்களின் சுய வேண்டுதல்களோடும் பேசப்படவும், எழுதப்படவும் நியாயம் கிடைத்து தவறிப்போன மனித தர்மம் மீள உயிரெடுத்து இவ்வற்றிப்போன பிரதேசத்தின் செழுமை எழில்பெற முடியுமா என்ற மகத்தான கேள்விகளோடு எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. நியாயபூர்வமான கேள்விகள் கணேஷுக்கு ஒரு மாதிரியாகவும், காதருக்கு இன்னொரு மாதிரியாகவும் அமையுமாயின் அது அடிப்படை மனித உரிமை மீறலாகவும், அடாத்தாய் தடுக்கப்பட்ட மனிதாபிமான துரோகமும் ஆகும். காலத்தால் மீண்டும் மீண்டும் பேசப்பட்டு நியாயம் கோரப்படவேண்டிய இந்த முக்கிய விடயம் சந்தர்ப்பவாத போக்குகளால் கிள்ளுக் கீரையாக்கி மறக்கடிக்கப்பட்ட நிகழ்வுகள் வேதனை தருகின்றன.

மனிதாத்மாக்களின் நல்லிதயங்கள்

### வரலாற்றுத் துயரின் முதல் அறிவிப்பு!

வெட்கித் தலைகுனிய அந்தத் திடீர் அறிவிப்பு காட்டுத் தீயின் கோரத்தை விடவும் மிகவும் வேகமாய்ப் பரவுகிறது. அதன் சாரம் இருப்பதையெல்லாம் தந்துவிட்டு வெறும் கையாய் ஓடுங்கள் என்பதுதான்.

வாழ்க்கையை ஒரு கையிலும் வாலாற்றை மறுகையிலுமாக இறுகப் பிடித்தபடி இறைவனே என இருகரம் ஏந்தி அழுதவர்களும், மஸ்ஜிதுகளில் குழுமியவர்களின் ஏக்கம் கலந்த கலவரங்களும், நசிபட்டுத் துடிக்கும் ஒரு மண்புழுவின் வேதனையாய் மனம் நெகுழும்போது வரலாற்றின் வசீகரத்தில் ஏறி வசந்தத்தின் மையக்கல்லை தொட முடியுமா என ஏங்கியவர்களில் இருந்ததெல்லாம் அந்நேரத்தில் எந்தப் பக்கத்தால் ஓடி வேரோர் கரையை அடைய முடியமோ அதைக் கெதியாக செய்துவிட வேண்டும் என்பதுதான்.

விடிந்தால் நிச்சயிக்கப்பட்ட திருமணத்திற்காய் மணக்கோல கற்பனைகளோடு காத்திருந்த கன்னிகள், வியாபாரிகளின் எழுதமுடியாமல் போன வரவு, செலவுக்கணக்குகள், தாய் மண் தாலாட்ட அழுது, தொழுத மண், தொப்புள் கொடியறுத்து தொட்டில் தந்த ஆஸ்பத்திரிகள், சன நெருக்க நகரங்கள், அக்காக்களின் ஆரத்தழுவல்கள் இப்படிக் கண்ணீரும் கம்பலையுமாய் காட்சி தந்த "புறப்படல்" என்னும் துன்பியல் தொடர் ஆரம்பமானபோது மரப்பூக்கள் கோலம்போடும் கிராமத்துத் தெருக்களில் கால் மாறிய செருப்புக்களை போட்டபடி நேற்றுவரை பண்பிபடைத்தவராய் வலம் வந்தவர் இன்று யாரும் கவனிப்பாரற்று தனக்கிங்கே நிகழ்ந்துகொண்டிருக்கும் அநியாய தீர்ப்புக் குறித்து அஞ்சியபடியே எதிர்காலத்தை இனி எவ்வாறு எதிர்கொள்வதென்ற மிகப்பெரிய கேள்வியோடு தனது வரலாற்றுப்பயணம் ஆரம்பமாயிற்று.

இப்படி எங்குபார்த்தாலும் பரிதாபத்தின் கோரக்காட்சியால் வட மாகாணத்தில் இள இதயம் தன்னுடைய இனிய சுவாசத்தை இழக்கப்போவதாய் எதிர்வு கூறியதாய் ஆங்காங்கே கண்ட சகோதர இனங்களின் ஆரத் தழுவல்களும் ஒத்தாசை, உதவிகள் புரிந்த அந்த நல்லாத்மாக்களையும் ஒரு கணம் எண்ணிப்பார்க்கிறேன்.

தம்பி இந்தக் கைக்கடிகாரத்தை என் ஞாபகமாய் வைத்துக் கொள்ளுங்கள் என வாய்விட்டு அழுத தாமோதரன் அண்ணனையும், அமளி துமளியான அந்நேரத்திலும் சதைமீனாய் பொரித்து வாய்க்குள் ஊட்டிவிட்ட அன்னம்மா ஆச்சியையும், உயிர் நண்பர்களும், பேர் மறந்து போன முகங்களையும், பேருதவிகளையும், கொண்டுபோக அனுமதிக்கப்பட்ட சொற்ப சுமையான முடிச்சு பைகளையும் தோளிலேற்றி துயரத்தின் தாண்டவத்தை உடல்களிலிருந்து கழுவிடுமாப்போல் அப்பப்பா கொட்டுகிறது மழை. மழையென்றால் அந்த மாதிரி மழை. ஐந்தடிக்கு முன்னால் யார் வருகிறார்கள் என்பதுகூட தெரியாது பயமுறுத்தும் மழை.

வயோதிபர்கள், நோயாளிகள், பெண்களென (சிலரை) முதலில் ஊர்களை விட்டும் அனுப்பிவைத்த ஊர் பெரியவர்களின் சமயோசிதம் பாராட்டத்தக்கது. இனி எக்காலத்துக்கும் பிற்பாடு சொந்த ஊர் திரும்புவோமோ என்ற ஆதங்கம் அழுகையோடு வாகன சில்லுகளும் மெல்ல மெல்ல புறப்படுகின்றன.

எமக்காக அழுவதற்கு வீதியோரங்களில் நின்று கையசைத்து கர்த்தரே! சிவனே! என அழுத ஜீவன்களை இன்னும் இதயங்களிலேயே வைத்திருக்கிறோம். இது எதனை எமக்கு காட்டுகிறதென்றால் நமது பலாத்கார வெளியேற்றம் என்பது பலருக்கு துக்கத்தையும், துயரத்தையும் கொடுத்தது என்பதுதான். எங்களில் சிலர் அதனை நீலிக்கண்ணீர் எனச் சொல்லலாம். இல்லை நான் அறுதியிட்டுச் சொல்வேன் "அவர்களும்" விட்ட கண்ணீர் அது இதயத்திலிருந்து வந்த கண்ணீர் என்பதை நானறிவேன்.

*(இன்னும் வரும்...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுவார்த்தை என்ற பெயரில் முஸ்லிம்களை ஏமாற்றவில்லையா?

*+. நிகழ்கால அரசியல் அரங்கில் J.V.P யினர் முக்கியமான அரசியல் சக்தியாக உள்ளனர். சந்திரிக்கா J.V.P யிற்கிடையிலான கூட்டு ஒப்பந்தம் இன்று எந்த அளவில் உள்ளது என்று கூறுவீர்களா !*

சந்திரிக்காவுடன் எமது கட்சி புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றிற்கு வந்ததன் பிரதான காரணத்தை, அவ்வாறு வருவதற்கு எம்மை தூண்டிய சூழலை நீங்கள் அறிவீர்கள் என நினைக்கிறேன். விடுதலைப்புலிகள் என தம்மை அடையாளப்படுத்தி நாட்டைத் துண்டாடுவதில் குறியாக இருக்கின்ற புலிகளும், ரணிலின் அரசும், மேற்கின் அடி வருடிகளும் எமது நாட்டில் நோர்வே ஊடாக புகுந்து மேற்குலகின் சகல ஏகாதிபத்தியங்களும் சேர்ந்து எமது நாட்டை பாரிய அபாயமொன்றின்பால் இட்டுச்செல்லும் நிலையில், அதன் மூலம் எமது இலங்கைத்தீவு எதிர்கொள்ளவிருக்கும் மிகப்பயங்கர அழிவிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதும் அதனைப்பாதுகாப்பதும் மீள அதனை கட்டி எழுப்புவதுமான நோக்கங்களின் நிமித்தமே நாம் இத்தகையதோர் உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டோம். இதன் மூலம் நாட்டுப்பற்றுடன் செயற்படுவதே எமது நோக்கமாகும். பேச்சுவார்த்தையில் ஏற்கனவே பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டு முடிவும் பெறப்பட்டு விட்டது. எனினும் இன்னும் சில விடயங்கள் பேச்சு வார்த்தைக்கு உட்படவே உள்ளன. இவ்விடயம் தொடர்பாகவும் வெகு விரைவில் கலந்துரையாடி சிறந்த முடிவுகளை நாம் பெற உத்தேசித்துள்ளோம்.

சகல இனமக்களும் சம அந்தஸ்துடனும் உரிமையுடனும் கூடிய சுதந்திரமான தமது செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான அடித்தளங்களுடன் கூடிய மிகப்பொருத்தமான தீர்வுகளை முன் வைப்பதே எமது இலக்காகும். இதுவே ஆட்சிக்கு வரும் எந்த ஒரு அரசும் மேற்கொள்ள வேண்டிய பிரதான விடயமுமாகும்.

அமெரிக்காவின் கையாளாக இலங்கையில் இயங்கும் பாசிசப் புலிகளின் கொடூரப் பிடியிலிருந்து எமது தாய்நாட்டைப் பாதுகாப்பது, சகல மக்களும் ஒற்றுமையாக ஒரே குடையின் கீழ் வாழ வழியமைப்பது போன்றவற்றை விட்டுவிட்டு ஒரு அங்குலம் கூட எம்மால் மேல் நகர முடியாது. அத்தகைய நகர்வால் எத்தகைய நிரந்தரத் தீர்வும் கிடைக்கப்போவதுமில்லை. தீர்வுகளை முன்வைப்போம் அல்லது முன் வைக்கிறோம் என்ற போர்வையில் மென்மேலும் அடிமைப்படுவதில் எந்தவொரு பிரச்சினைக்கும் முடிவு காண முடியாது. இந்நாட்டின் உரிமையாளர்களான சகல இன மக்களும் அதனை அனுபவிக்கும் உரிமையினை இழந்துள்ளோம். நாட்டின் முன்னெடுப்புக்கு இந்நாட்டின் குடிமக்களாகிய நாமே தீர்வை முன்வைக்க வேண்டும். ஆனால் ஏக போக உரிமையாளர்களாக மேற்குலகத்தினரே இருந்து வருகின்றனர். இந்நிலை மாற்றப்படுவது அவசியமாகும்.

இத்தகைய நிலையிலிருந்து எமது நாட்டை மீட்டெடுக்கும் பாரிய பொறுப்பை எமது தோள்களில் சுமந்தவர்களாகவே நாம் சந்திரிக்காவுடனான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகிறோம். இப்பேச்சுவார்த்தை வெகு விரைவில் நிறைவுபெறுவதன் மூலம் எமது இலக்கை அடைய முடியுமென நாம் நினைக்கிறோம்.

*+. சந்திரிகா.ஜே.வி.பி. கூட்டணியானது சிறுபான்மை மக்களை ஓரம் கட்டும் செயல் என பலர் கருதுகின்றனர். இது பற்றி உங்களது கருத்து என்ன?*

அவ்வாறு கருதுபவர்களிடம் இலங்கையிலுள்ள சிறுபான்மைக் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் இன்றைய தலைவர்கள் தமது சிறுபான்மை இனத்துக்காக இது வரை என்ன செய்தார்கள் என நான் கேட்க விரும்புகிறேன். தமிழ் முஸ்லிம் மக்களின் நலன் குறித்து இதுவரை என்ன செய்யப்பட்டுள்ளது? எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன? ஹக்கீம் இன்று முஸ்லிம் மக்களின் உரிமைகளை அவர்களது உடமைகளை புலிகளுக்கு விற்றுவிடவில்லையா? அவருக்கு கிடைத்த நலன்களை எந்தளவு தூரம் முஸ்லிம்களுக்கு சாதகமாக பயன்படுத்தியுள்ளார். பேச்சுவார்த்தை என்ற பெயரில் முஸ்லிம்களை ஹக்கீம் ஏமாற்றிவிடவில்லையா. தோட்டப்புற தமிழ் மக்களின் பிரதிநிதியான தொண்டமான்,சந்திர சேகரன் போன்றோர் ஆளும் கட்சிக் கூட்டணியாக இருந்தும் கூட அப்பகுதியில் சிறு வீடுகளில் தினமும் கஷ்டப்படும் மக்களின் நலன்களுக்காக இதுவரை செய்ததுதான் என்ன. இம்மக்கள் அனுபவிக்கும் சுகங்கள் யாவை?

தமது இனத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதி ஒருவர் பாராளுமன்றத்தில் இருக்கிறார் என்ற ஆத்ம திருப்தி மாத்திரமே அவர்களுக்குள் எஞ்சியிருக்க முடியும். மக்கள் அன்றாடம் அனுபவிக்கும் வறுமை, பட்டினி, தொழிலின்மை, வாழ்வாதார பிரச்சினை, பாதுகாப்பு போன்றவற்றுக்கான தகுந்த தீர்வுகள் இத்தகைய தலைவர்களால் முன்வைக்கப் பட்டுள்ளனவா? ஆங்காங்கே சிலருக்கு தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருக்கலாம். இதனை சாதாரண ஒரு பொதுமகனும் கூடத்தான் செய்துவருகிறான். காரணம், தமக்கு அவ்வப்போது உதவுபவர்களை கவனிப்பது அதற்காக உதவுவது மனித இயல்பே ஆகும். இது அரசியல் வாதிகளுக்கு மாத்திரம் உரித்தான ஒன்றல்ல. ஆனால் நமது கடமை என்ற வட்டத்துக்குள் நின்று இவர்கள் செய்துள்ள சேவைகள் எத்தனை. சிறுபான்மை பெரும்பான்மை மக்களின் பிரதிநிதிகள் என தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட சகலரும் வறிய மக்களை ஏமாற்றி வியாபாரக் குழுக்களின் உதவியுடன் தமது வயிற்றை நிரப்பிக் கொண்டனர். ஆனால் இந்நாட்டு மக்கள் பிரதிநிதிகளாகிய நாம் குறிப்பிட்ட சாராரை திருப்திப்படுத்தும் நிலையில் இல்லை. ஒரு தனிப்பட்ட இனத்துக்காக, குழுவுக்காக நாம் செயற்படப் போவதில்லை. மக்களை தமது வாழ்வில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளிலிருந்து விடுவிப்பது அவசியம். தொழில்களை மாத்திரம் கொடுப்பதனால் இப்பிரச்சினை தீரப்போவதில்லை. மிக ஆழமாக இவ்விடயம் குறித்து சிந்தித்து தீர்வை முன்வைப்பது அவசியம். கல்வி, தொழில் அடிப்படை வசதிகள் உட்பட வாழ்வியல் தேவைகள் நிவர்த்தி செய்யப்படுவதன் மூலம் அவர்கள்



மாத்திரமல்ல அவர்களின் எதிர்கால சமுகமும் நிலையான சுபீட்சத்தை அனுபவிக்க முடியும். மக்களுக்காக முன்வரும் அரசியல் பயணமாகவே எமது இந்தப் பயணம் காணப்படுகிறது. சிறுபான்மை பெரும்பான்மை வாதங்களால் மேலும் பிரச்சினைகள் அதிகரிக்குமே ஒழிய குறையப்போவதில்லை.

*+.ம.வி.மு. பாராளுமன்றத்தைக் கலைக்காமல் புதிய அரசொன்றை உருவாக்குவதற்கு உடன்படுகிறதா, அல்லது புதிய தேர்தல் ஒன்றை நடத்துவதன் மூலம் மக்கள் அனுமதியுடன் கூடிய புதிய அரசொன்று நிறுவப்படுவதை ஆதரிக்கிறதா?*

இவ்விடயத்தில் பல உத்திகளை எம்மால் கையாள முடியுமாக உள்ளன. மக்களின் ஆசிர்வாதத்துடனும் அனுமதியுடனும் புதிய அரசாங்கம் தெரிவு செய்யபடுவதையே நாம் விரும்புகிறோம். இந்த அரசு அரசியல் யாப்புக்கு முரணாகவே பல சந்தர்ப்பங்களில் செயற்பட்டு வந்துள்ளதை நாம் கண்டுள்ளோம். ரணில், தான் விரும்பிய பிரகாரம் பிரபாவுடன் எத்தகைய விடங்கள் குறித்தும் பேச்சு நடத்தவோ கைச்சாத்திடவோ யாப்பியல் ரீதியான அதிகாரம் கிடையாது. பிரபாவுடனான ஒப்பந்தம் ஜனாதிபதி கூட அறிந்து கொள்ளாத இரகசிய அடிப்படையிலேயே கைச்சாத்திடப்பட்டது. இது ஒரு சட்டப்பிரச்சினை. நீதி மன்றத்தில் இதுகுறித்து தீர்ப்பு இன்னமும் வழங்கப்படாமல் இருக்கிறது. ஆகவே அரசு யாப்புச்சட்டதிட்டங்களை மீறி வடக்கு கிழக்கு மாகாணத்தில் பூரண அதிகாரம் கொண்ட பிரபாகரனின் பயங்கரவாத ஆட்சியொன்றை உருவாக்க முயல்கிறது. யாப்பிலும் சட்டத்திலும் இடமில்லாத, அவற்றுக்கு முரணாக வழங்கப்படாத அதிகாரங்களின் மூலம் செயற்படும் ஆட்சியிலிருந்து நாட்டையும் மக்களையும் பாதுகாக்க எது சிறந்த முறையோ அதை பயன்படுத்த வேண்டும். அது முடியாவிடின் வேறு ஏதும் பொருத்தமான முறைகள் இருந்தால் அதனை பயன்படுத்த வேண்டும். அல்லது அதில் ஏதாவதொன்றையோ பலதையோ ஏககாலத்தில் பயன்படுத்தலாம்.

*5) கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை நீக்கப்படவேண்டும் என உங்களது கட்சி பலமாக வலியுறுத்தி வந்தது என்பதை நாம் அறிவோம். அது இன்னமும் நீக்கப்படாத நிலையில் உள்ளது. இன்று ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகார முறை ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கு பெரும் சவாலாகவும் ம.வி.மு.வுக்கு சாதகமாகவும் அமைந்திருக்கிறது. இது பற்றி உங்களது கருத்து என்ன?*

நாம் அன்றும் இன்றும் நிறைவேற்று அதிகார முறை ஒழிக்கப்படவேண்டும் என்றே கூறி வருகிறோம். அதனை எதிர்த்தும் வருகிறோம். இன்றோ நாளையோ இம்முறை திருத்தப்படவேண்டும் என்றே நாம் விரும்புகிறோம். ஆனால் நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் (எமது விருப்பத்துக்கு ஏற்பவல்லவே சகலதும் இன்று நடைபெறுகிறது) நிறைவேற்று அதிகார முறை அமுலில் இருந்து வருகிறது. மக்களால் சட்டரீதியாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி ஒருவர் இருந்தே வருகிறார் என்பதனை எவரும் மறுத்து விட முடியாது. ஆகவே நாம் ஏற்படுத்தியிருக்கும் கூட்டமைப்பின் பிரதான நோக்கமும் இம்முறையை நீக்குவதேயாகும். அதேநேரம் இம்முறை இன்றுவரை நீக்கப்படமால் இருந்தாலும் கூட அது இருக்க வேண்டிய ஆரோக்கியமான,நல்லதோர் நிலையிலேயே இருந்து வருகின்றது. தனியானதோர் கட்சியின் கையில் இரண்டு பலங்களும் குவிக்கப்படும் பட்சத்தில் என்ன நடக்கும் என்பதனை ஜே.ஆர். , பிரேமதாச ஆகியோர்களின் காலகட்டத்தில் நடைபெற்ற கசப்பான சம்பவங்கள் இன்றும் எமக்கு சிறந்ததோர் பாடமாகவும், சான்றாகவும் திகழ்ந்து கொண்டிருக்கின்றது. தற்பொழுது நாம் விரும்பியோ, விரும்பாமலோ நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை அமுலில் இருப்பதனால் அம்முறை எவ்வாறு இருக்க வேண்டும் என நோக்குவது அவசியம். நிறைவேற்று அதிகாரம் ஒரு கட்சியிடமும் பாராளுமன்ற அதிகாரம் இன்னுமொரு கட்சியிடமும் இருப்பது அவசியம். அப்பொழுதுதான் இரண்டுக்கும் இடையில் ஒரு சமநிலை பேணப்படும். பாராளுமன்றத்தின் அதிகாரத்தை பெற்றுள்ள ஐ.தே.மு. நாட்டை படுகுழிக்குள் தள்ளிவிட்டுள்ள நிலையில், மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிறைவேற்று அதிகாரத்தை கொண்ட, ஜனநாயக இலங்கையின் தலைவி அந்நாட்டை மீட்டெடுப்பது அதனை பாதுகாப்பது அவரின் கடமையாகும். இதற்குரிய பலமும், அதிகாரமும் மக்கள் ஆதரவும் அவருக்குள்ளது. ஆகவே நாம் இன்று அமுலில் உள்ள நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையால் கடந்த காலங்களில் தீங்குகளே நடைபெற்றன. அதன் அந்திம காலத்திலாவது இந்நாட்டின் உரிமையாளர்களான சகல இனமக்களுக்கும் நல்லதை செய்யுமாறு நாம் கேட்டுக் கொள்கிறோம். இது எமது கொள்கை ரீதியான கோரிக்கை அல்ல. தற்போதைய சூழ்நிலையில் எமக்கு வரமுடியுமான ஒரு தீர்வே இது.

*6) இனப்பிரச்சினை மூலம் தமிழ், முஸ்லிம் மக்கள் கடந்த காலங்களில் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதனை தாங்கள் நன்கறிவீர்கள். ஆகவே இலங்கை போன்ற ஒற்றையாட்சி முறையில் இனப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வர முடியுமா?*

இந்நாட்டில் இனப்பிரச்சினையையும் வரலாற்றையும் நாம் எடுத்து நோக்கினால் அதன் மூலம் முஸ்லிம், தமிழ் மக்கள் மாத்திரமல்ல, சிங்கள, கிறிஸ்தவ சகல இன மக்களும் பாதிக்கப்பட்டுள்ளதை நாம் கண்டு கொள்ள முடியும். ஆகவே இது ஒரு பொதுப்பிரச்சினை. ஒரு சமூகத்துக்கு மாத்திரம் உரிய தனிப்பிரச்சினை அல்ல. இதனால் சகல இன மக்களும் இன்றும் கூட பாதிக்கப்பட்டு வருகின்றனர். இதிலிருந்து விடுபட வேண்டும் என்பதில் இரு கருத்துக்கள் கிடையாது. ஆனால் இவ்விடயம் குறித்து நாம் பேசுகின்ற போது பாரிய தவறொன்றை செய்து வருகிறோம். அதாவது நாம் இவ்விடயம் குறித்து எடுக்கின்ற முடிவுகள் எம்மை இனரீதியாக, பிரதேச ரீதியாக துண்டுதுண்டாக்கும் பாரிய அழிவுக்கே இட்டுச்சென்று விடும். தமிழ் மக்கள் எமது இனம் தனித்துவம் மிக்க இனம், எமது கலாசாரம் தனித்துவம் மிக்க கலாசாரம் ஆகவே எமது தனித்துவத்தை பேண எமக்கென தனியான பிரதேசமொன்று தேவை என கோருகின்ற அதேநேரம் சிங்கள, முஸ்லிம், கிறிஸ்தவ மக்களும் தமது தனித்துவ ரீதியில் சிந்தித்து தமக்கென தனியானதோர் பகுதியை கோரினால் எமது சிறிய இந்த தீவு நான்கு அல்லது ஐந்து துண்டுகளாக சிதறிவிடும். ஆகவே நாட்டை துண்டாக்கும் இத்தகையதோர் தீர்வையல்ல நாம் முன்வைக்க வேண்டும். எமது தனித்துவம் எதுவானாலும் சரி தனித்துவம் எமது தேசிய ஒற்றுமைக்கு பங்கம் விளைவிக்காமலும், எமது தனித்துவம் பாதிக்கப்படாமலும் இந்நாட்டின் குடிமக்கள் என்ற ரீதியில் ஒரே குடையின் கீழ், சமபலம், சம உரிமை, சம அந்தஸ்து, பெற்ற மக்கள் பிரிவினராக வாழும் ஒரு சிறந்த தீர்வே இன்று எமக்கு தேவை. அடுத்தவர்கள் முன்வைக்கும் தீர்வுக்கும் எமது தீர்வுக்கும் இடையில் ஆழமான வித்தியாசம் காணப்படுகிறது. எமது கருத்து, இந்நாட்டில் வாழும் சகல இனமக்களும் இந்நாட்டின் தலைவிதியை நிர்ணயிப்பதில் பங்குதாரர்களாக கருதப்படவேண்டும். எத்தகைய இடையூறுமற்ற நிலையில் தமது ஜனநாயக, கலாசார தனித்துவ உரிமைகளை பேணி வாழ்வதோடு தமது பிரதிநிதிகளை எத்தகைய தடைகளும் இன்றி சுதந்திரமாக தெரிவு செய்யும் உரிமையும், சமபலமும் மிக்கவர்களாக கருதப்படவேண்டும். இதன் மூலமே இனப்பிரச்சினைக்கு நிலையான தீர்வொன்றை எடுக்க முடியும். இந்நாட்டில் உள்ள சகல மக்களும் கல்வி பெறுதல், தொழில்வாய்ப்புக்களை பெறுதல் உட்பட சமூக, பொருளாதார விடயங்களில் சம அந்தஸ்துடன் ஈடுபடுதல் இந்த உரிமையும் மிக முக்கியமானதாகும். அம்மக்களின் இனம், மதம், மொழி என்பன எதுவானாலும் அவர்களின் கல்வி தகைமை அடிப்படையில் வாழ்வியல் முன்னேற்றத்துக்கான சகல வழிகளும் உருவாக்கப்படுவது அவசியம் இத்தகைய ஜனநாயக, சம அந்தஸ்து உரிமைகள் என்பது வழங்கப்படாமல் இத்தகைய பிரச்சினைகளை தீர்ப்பது சாத்தியமற்ற விடயமே. உண்மையில் இவையல்லவா தீர்க்கப்பட வேண்டிய அடிப்படை பிரச்சினைகள்? இவற்றை தீர்த்த பிறகல்லவா மேற்கொண்டு ஏனைய விடயங்கள் குறித்து யோசிக்க வேண்டும். அந்த பிரச்சினைகளை ஓரங்கட்டிவிட்டு வேறு பிரச்சினைகளில் கவனம் செலுத்துவது பிரச்சினையை மேலும் வளர்த்து விடுவதோடு நாடு துண்டாடவும் பட்டுவிடும். ஈற்றில் பலவீனப்பட்ட இராஜ்யமாக மாறி யுத்த மேகம் புடை சூழ இன, மத, வர்க்க ரீதியாக நிரந்தரமாக பிளவுபட்டுவிடும் அபாய நிலமையும் தோன்றிவிடும். ஆகவே பிரச்சினையின் தோற்றம் எங்கு ஆரம்பித்ததோ அவ்விடம் போய் நாம் தீர்வு காண்பது அவசியம். சுதந்திரம் கிடைத்து கடந்து விட்ட 50 வருட காலத்துக்குள் ஏதாவது ஒரு துறையிலாவது ஒன்றுபட்ட ஒரு நிலையை எம்மால் உருவாக்கப்பட முடிந்ததா, இல்லை உதாரணமாக இன்று இன ரீதியாக மொழி ரீதியாக, மத ரீதியாகவே மனித சமூகத்தின் அடி நாதமாய் அமையும் கல்வி கூட பிரிக்கப்பட்டுள்ளது. 3 இன மக்கள் பிரிவினரின் பிள்ளைகள் ஒரு பாடசாலை கட்டட தொகுதிக்குள் இரு மொழிகளையும் கற்கும் பாடசாலைகளை அமைக்கும் முறையில் கூட நாம் தோல்வியடைந்துள்ளோம். இத்தகைய நிலைமை ஏற்படுத்தப்பட்டால் அல்லவா எதிர்கால சமூகம் சகல மதங்களையும் மொழிகளையும், இனங்களையும், விட்டுக்கொடுப்புடன் ஒற்றுமையாக செயற்படும் ஒரு ஆரோக்கிய சூழலை உருவாக்க முடியும். இத்தகைய நிலைமைகள் தோற்றுவிக்கப்படாததனால் இனமுறுகல் நிலை தொடர்ந்தும்

இருந்தே வருகின்றது. ஆகவே இத்தகைய பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல் இனப்பிரச்சினையை தீர்ப்பதென்பது சாத்தியமற்ற விடயம். நோய்க்கு மருந்து வழங்காமல் வலிக்கு மருந்து வழங்குவதனால் வலி தற்காலிகமாக நீங்கிவிடும் ஆனால் நோய் குணமாகமாட்டாது.

*+. தற்போதுள்ள முஸ்லிம் தலைவர்கள் குறித்து உங்களது கருத்தென்ன ?*

இங்கு அவர்கள் பற்றிய எனது கருத்தைவிட அவர்கள் பற்றிய முஸ்லிம்களின் கருத்தே முக்கியமானதாகும். எனது கருத்தின் படி அவர்கள் சமூக பொறுப்புக்களையும் கடமைகளையும் சரிவர நிறைவு செய்கிறார்கள் இல்லை. அவர்களுக்கும் ஏனைய தலைவர்களை போல தமது சுய அரசியல் இலாபம் போன்ற விடயங்களில் குறியாக இருப்பதோடு தமது வயிறை வளர்க்கும் செயல்களிலேயே தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றார்கள். இது முஸ்லிம் தலைவர்களுக்கு மாத்திரம் உரித்தான சாபக்கேடல்ல. பொதுவாக இது ஏனைய தலைவர்களுக்கும் உரித்தான விடயமுமாகும். முஸ்லிம் , தமிழ், சிங்கள, எந்த இனத்தை சார்ந்த மக்களானாலும் அவர்களின் தலைவர்களில் தியாகச் சிந்தனையுடனும், ஈடுபடும் சுய இலாபம் எதிர்பார்க்காத அரசியல் தலைமைகளே இன்று தேவைப்படுகிறார்கள். ஆகவே இத்தகைய தலைவர்கள் யார் என்பதனை மக்கள் நன்கு அறிவர், ஆனால் தற்போதைய இத்தகைய தலைவர்களால் அம்மக்களின் எதிர் பார்ப்புக்கள் நிறைவு செய்யப்படப் போவதில்லை.

*+. உங்களது அரசியலில் இனப்பிரச்சினை தொடர்பாக குறிப்பாக தமிழ், முஸ்லிம் மக்களுக்காக நீங்கள் முன் வைக்கும் தீர்வு என்ன?*

இன, மத, மொழி பேதமின்றி சகல மக்களும் சம அளவில் வழங்கும் தீர்வையே நாம் குறிப்பிடுகின்றோம். சகல மக்களும் நாட்டின் உரிமையாளர்கள் என்ற அடிப்படையில் தேசிய அபிவிருத்தியில் பங்கு வகிக்கும் உரித்தாளர்களாக அவர்களை உருவாக்க வேண்டும். அவர்களது பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் உரிமை வழங்கப்பட வேண்டும். இதன் மூலம் முஸ்லிம், தமிழ், சிங்கள சகல மக்கள் பிரிவினதும் வரலாறு, கலாசாரம், பாரம்பரியம் என்பன சமகாலத்தில் உலக அரங்குக்கு கொண்டு செல்லப்படுவது அவசியம். ஆகவே சம நிலை சிந்தனையுடனே அன்றி பிரிவினைவாத மனநிலை அடிப்படையில் தீர்வுகாண முயல்வதன் மூலம் தீர்வுகிட்டப்பட மாட்டாது. இதுதான் எமது நிலைப்பாடு.

*+. இறுதியாக இந்த சமாதான முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தால் விடுதலைப் புலிகள் மீண்டும் ஒரு யுத்தத்தை தொடுப்பார்கள் என்பதில் ஐயம் இல்லை. ஆகவே ஜே.வி.பீ என்ற வகையில் இவ்விடயத்தில் நீங்கள் முன்னெடுக்கும் நடவடிக்கை எத்தகையது?*

நாம் விடுதலைப் புலிகளுக்கு கூறுகின்றோம், இந்த பிரச்சினையை நீங்கள் சமாதான முறையில் தீர்க்க விரும்புவதாக இருந்தால் அதில் எத்தகைய தவறுகளும் கிடையாது. இவ்விடயத்தில் நாம் மாத்திரம் அல்ல எந்த ஒரு அரசும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு சிறிய இடமாவது இருக்கும் பட்சத்தில் அதனையும் பயன்படுத்தி சமாதானத்தை நிலைபெறச் செய்ய முயற்சிப்பது அவசியம். அதற்காக சமாதானம் என்ற பெயரில் நாட்டை அடகு வைப்பதற்கோ தலை குனிந்து காலில் மண்டியிட்டு தன்னை இழிவு நிலைக்கு உட்படுத்தவோ கூடாது. ரணில் செய்தது எல்லாம் இது தான். அதனால்தான் மென்மேலும் கீழ்ப்படிய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. எமது தேசிய அரசு ஆட்சிபீடம் ஏறினாலும் பேச்சு வார்தையின் கதவுகள் திறந்தே இருக்கும். அது மாத்திரம் அல்ல தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அமைப்புகளு கட்சிகளும் உரிய வாய்ப்பும் அந்தஸ்தும் வழங்கப்படும். எல்.ரி.ரி.ஈ யினர் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள், உரித்தானவர்கள் என்று எவரும் எப்பொழுதும் எங்கும் பூரண அதிகாரங்களை அவர்களுக்கு வழங்கி விடவில்லை. அவர்களுடன் பேச்சு வார்த்தைகளை நடாத்தும் அதே நேரம் அது மாத்திரமே ஏக தீர்வு என்ற தவறான கருத்தில் நாம் இருந்து விடத்தேவையில்லை. காரணம் பேச்சு வார்தை மூலம் தீர்வு கிட்டும் என்பது எம்மில் மாத்திரம் அல்ல அடுத்த சாராரிலும் தங்கியுள்ளது. அடுத்த சாரார் உம்மை தாக்குவோம் என்று கூறும் போது இல்லை நான் சமாதானத்தின் மூலம் மாத்திரமே தீர்வு காண்பேன் என்பது மடமையாகும். ஏனெனில் நாம் முடியாது என்றாலும் அடுத்த சாரார் எம்மை அடிக்கவே செய்வர். இந் நிலையில் நாம் எடுக்க வேண்டிய முடிவு என்ன? ஆகவே அவர்களின் தாக்குதலுக்கு முகம் கொடுக்கவும் நாம் தயாராக வேண்டும். அதனை நாம் விரும்பவோ கேட்கவோ இல்லை. ஆனால் எமது எதிரியின் முடிவு அதுவாக இருக்கும் பொழுது நாம் வேறு என்ன முடிவுக்கு வர முடியும்? சதாமை அமெரிக்கா தாக்கியது. சதாம் யுத்தவாதி என்பதாலா? இல்லை, மாறாக அமெரிக்கா யுத்தவாதிகள் என்பதனால். சதாமோ இறுதிக் கட்டத்தில் ஐ.நா சபையின் பிரதிநிதிகளை கொண்டு வந்து பிரச்சினையை பேச்சு வார்தை மூலம் தீர்க்க முயற்சித்தார். ஆனால் இதனை விரும்பாத அமெரிக்கா சதாமை தாக்க ஆரம்பித்தது. சதாம் நாயை போன்று அமெரிக்காவுக்கு கட்டுப்படவில்லை. மாறாக நீ என்னை விட எல்லா வகையிலும் பலவானாக இருக்கலாம். நவீன ஆயுதங்கள் மூலம் என்னை தாக்கலாம், ஆனால் நான் உனக்கு கட்டுப்படப் போவதில்லை எனது நாட்டை உன் காலடியில் மண்டியிட செய்யப்போவதும் இல்லை என்றே கூறினார். இதுவே சிறந்த பண்பு. தற்காலிகமாக சதாம் யுத்த ரீதியாக தோல்வியுற்றாலும் அரசியல் ரீதியாக தோல்வியுற வில்லை. ஆனால் ரணிலோ புலிகளிடம் முழுமையாக சரணடைந்து தன்னை அடிமைப்படுத்திய நிலையினிலேயே தீர்வு காண முயல்கிறார். ஆகவே எந்த பிரச்சினையையும் தீர்ப்பதாக இருந்தால் முழுமையாக அடிபணிந்து போக வேண்டியதில்லை. மற்றவர்களை அடிமைப் படுத்தவும் வேண்டியதில்லை. சமாதானத்துக்கான வாயில்கள் திறக்கப்பட்டுள்ளன, அதே நேரம் அதனை ஏற்காது போனால் யுத்த பலத்தின் மூலம், பயங்கர வாதத்தின் மூலம் நாட்டை ஆட்டிப்படைக்க முயல்வார்களாயின் அதிலிருந்து எமது தாய் நாட்டை பாதுகாப்பது அவசியம். அதற்கான நடவடிக்கைகளை எடுப்பது அவசியம். அதனை தன்னம்பிக்கை, தைரியம், தியாகம் போன்ற உயர் பண்புகள் மூலமே அடைய முடியும். இறுதியாக எமது வாழ்வில் நாம் தினமும் எண்ணற்ற பல அசௌகரிகங்களை விரும்பியோ விரும்பாமலோ சந்தித்துக் கொண்டு இருக்கின்றோம். ஆகவே அத்தகைய அசௌகரிகங்களில் ஒன்றாக இதனையும் கருத வேண்டியுள்ளது.

*சந்திப்பு : எஸ்.என்.எம் மௌலானா, ஷிராஸ்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் மக்களின் வரலாறு

இலங்கையில் முஸ்லிம்கள் குடியேற்றத்தின் வரலாறு - வரலாற்று ஆசிரியரின் போதிய கவனத்தைக் கவர்ந்ததாகத் தெரியவில்லை. இத்துறையில் ஆராய்ச்சி நடாத்தபட்டால், இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றைப் பற்றி வழக்கில் இருக்கும் அநேகத் தவறான அபிப்பிராயங்கள் அகல இடமிருக்கிறது.

இஸ்லாத்தின் தோற்றத்திற்கு முன்பே அராபியர்கள் இலங்கையுடன் வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்தனர் என்பது பலராலும் ஒப்புக் கொள்ளப்படுகிறது. எனினும், இலங்கையுடன் அராபியர் எக்காலத்திலிருந்து தொடர்பு கொண்டனர் என்பது நிச்சயிக்கப்படவில்லை. கி.மு. 5 ஆம் நூற்றாண்டிலிருந்து விஜயனின் கீழ் ஆரியர் வருகையுடன் இலங்கை வரலாறு ஆரம்பமாகிறது.

அன்று தொடக்கம் இன்று வரையிலுள்ள சுமார் 2500 வருடகால எல்லைக்குள் எந்தக் கட்டத்தில் முதலில் அராபியரும், பின்பு முஸ்லிம்களும் இலங்கையில் அதிகமாகக் குடியேறினர் என்பது ஆராயப்பட வேண்டிய விடயமாகும்.

இஸ்லாத்திற்கு முன் மத்திய கிழக்கிலிருந்து வந்த அராபியர்களைப் பற்றி எமது நாட்டு நூல்களில் குறிப்பாக மகா வம்ச, தீப வம்ச, சூல வம்ச ஆகிய இலங்கையின் பழம் வரலாற்றுக் கிரந்தங்களில் அதிகம் காண்பதற்கில்லை. இந்நிலையில் முஸ்லிம்களின் தோற்றம், முன்னைய வரலாறு ஆகியவற்றைப் பற்றி வெற்றிகரமாக ஆராய்ச்சி நடத்தப்பட வேண்டுமாயின் பழம் அராபிய, பர்ஷிய நூல்களில் நம் கவனம் செல்ல வேண்டும்.

### ஈழத்திற்கு முஸ்லிம்கள் வந்ததெப்போது

இலங்கையின் வரலாற்று ஆசிரியர் அண்டிரியஸ் நெல் கி.மு. 377 ஆம் வருடம் ஒரு அரச குமாரன் அனுராதபுரத்தில் தனது ஆட்சியை நிறுவிய பொழுது அன்னிய நாட்டினர் வசிக்க நகரில் ஒரு பகுதியை ஒதுக்கியதாகவும் அவ்வன்னியருள் அதிக அராபியர் இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் பழம் சிங்கள நூல் ஒன்றில் அரச குமாரர்கள் குதிரையில் சவாரி செய்தார்கள் என்றும், அக்குதிரைகள் பர்ஷியக் குடாப் பிரதேசங்களிலிருந்து கொண்டு வரப்பட்டதாகவும் குறிக்கப்பட்டுள்ளது. இவை போன்ற ஆதாரங்களைக் கொண்டு கி.மு. நான்காம் நூற்றாண்டில் அல்லது ஆரியர் வருகைக்கு 1 நூற்றாண்டுக்குப் பின் அராபியர் இலங்கைக்கு வந்ததாக நிச்சயமாகக் கூறுவது பொருந்தாது.

சேர். எமர்ஷன் டெனன் கூறுவதுபோல் இலங்கையுடன் அராபியர் தொடர்பு அநேகமாக கி.பி. முதலாம் நூற்றாண்டில் தான் ஆரம்பித்திருக்க வேண்டும். ஹிப்போலோஸ் என்ற கிரேக்கரால் பருவப் பெயர்ச்சிக் காற்று கி.மு.முதலாம் நூற்றாண்டில் கண்டுப்பிடிக்கப்பட்டதிலிருந்தே இந்து சமுத்திரத்தில் வர்த்தகப் போக்குவரத்து அதிகரித்தது. தென்மேற்குப் பருவப் பெயர்ச்சி காற்று கப்பல்கள் கிழக்குச் செல்லவும், வடமேற்குப் பருவப் பெயர்ச்சிக் காற்று கப்பல்கள் திரும்பிவரவும் உதவின. கிரேக்க, ரோம இராஜ்யங்கள் இக்கண்டுப்பிடிப்பின் பின்பு கீழைத் தேசத்தரோடு வர்த்தகம் ஆரம்பிக்கப்பட்டன. இவர்களுக்கு முன்பு கீழைத் தேச வர்த்தகம் அராபியரிடம் இருந்ததற்கு ஆதாரங்கள் இருப்பினும் கி.பி. முதலாம் நூற்றாண்டிலிருந்து அராபியர் கீழ் நாடுகளுக்கு அதிகமாக வந்திருக்க வேண்டும். அராபியரின் "செரந்தீப்" என்ற பெயராலேயே அன்று இலங்கை பிறநாடுகளில் குறிக்கப்பட்டதாம். முதற்கால ஆங்கிலேய எழுத்தாளராகிய பிலினி என்பவர் இவற்றை விரிவாகக் குறிப்பிட்டு கி.பி. முதலாம் நூற்றாண்டிலிருந்து அராபியர் இலங்கையில் காணப்பட்டதாகக் கூறுகின்றார். இவர்களின் வழித்தோன்றல்கள் தான் முஸ்லிம்கள் என்று கொள்ளப்பட்டால் சிங்களவர் தமிழர்களைப் போல் முஸ்லிம்களும் இலங்கையில் பூர்வீக குடிகள் என்பதில் சந்தேகமில்லை.

பல்வேறு கருத்துக்கள் கி.பி. முதலாம் நூற்றாண்டின் பின் அராபியர் தொடர்பு படிப்படியாக அதிகரித்து, இஸ்லாத்தின் பின் முஸ்லிம்கள் இலங்கையில் அதிகமாகக் குடியேறவும் துவங்கினர். தமது நாடுகளில் ஏற்படுத்தப்பட்ட இஸ்லாமிய ஆட்சிகளின் கீழ் அராபியரும், பாரசீக மக்களும் தமது வியாபார குடியேற்ற நடவடிக்கைகளை மேலும் விருத்தி செய்தனர் என்பதற்கு பல ஆதாரங்கள் இருக்கின்றன. கி.பி. 9 ஆம் நூற்றாண்டிலிருந்து 14ஆம் நூற்றாண்டு வரையும் பெருந்தொகையான முஸ்லிம்கள் இலங்கையில் குடியேறியதாகவும் குருநாகலில் அரசாண்ட பராக்கிரம பாகுவுக்குப் பின், 13 ஆம் நூற்றாண்டில் கப்பலில் வந்து அப்பகுதியில் குடியேறிய பிறநாட்டார் அராபியர் என்றும், பேருவளையில் அன்று 500 குதிரை வீரர்களைக் கொண்ட அராபிய மன்னன் அரசாண்டதாகவும், குறிப்பிடுகிறார்கள். திரு. அன்டிரியஸ் நெல், சேர். அலெக்சாண்டர் ஜோன்யிடனும் இலங்கையில் முஸ்லிம்கள் அதிகமாக 9 ஆம் நூற்றாண்டிலிருந்து குடியேறி இருக்க வேண்டும் எனவும் குறிப்பிடுகிறார். இதேபோன்று இன்னும் அநேக எழுத்தாளர்கள் எழுதியிருக்கிறார்கள். இலங்கையில் 6 ஆம் நூற்றாண்டின் பின் முஸ்லிம்களைப் பற்றி ஆங்கில, பாரசீக, அராபிய நூல்களில் அதிகம் எழுதப்பட்டிருக்கிறது.

மத்திய கிழக்கின் அநேக எழுத்தாளர்களும், யாத்திரிகர்களும் இலங்கையைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்களுள் சுலைமான் ஜாஜிர், அபூ ஸைத் இப்னு குரோத்தபா, இப்னு மஸூதி, இப்னு ஹௌகல், மக்தீஸி, அல் பிரூனி, இப்னு பதூதா, யாகூத், கஸ்வினி, அபூலிதா ஆகியோர் சிலராகும். இவர்களின் சில நூல்களின் ஆங்கில மொழி பெயர்ப்புகளிலிருந்து குறிப்புகள் வரலாற்று ஆசிரியர்களால் கொடுக்கப்பட்டிருக்கின்றனவேயொழிய அவற்றைப் பற்றி ஆராய்ச்சி எதுவும் நடைபெற்றிருப்பதாகத் தெரியவில்லை.

எங்கிருந்து வந்தனர் இலங்கைக்கு வந்த அராபியரும், முஸ்லிம்களும் அராபியாவைச் சேர்ந்தவர்களா? பாரசீக குடாவை அடுத்த நாடுகளைச் சேர்ந்த பாரசீகம், வட ஆபிரிக்காவைச் சேர்ந்த எகிப்திய மொரோக்கோவை அல்லது செங்கடலையடுத்த ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்களா என்பதிலும் ஆராய்ச்சியாளரின் கவனம் செல்ல வேண்டும். இத்துடன் முஸ்லிம்கள் இலங்கையில் நேராகவே வந்து குடியேறினார்களா? அல்லது முதலில் இந்தியாவில் குடியேறிப் பின்பு இலங்கைக்கு வந்தார்களா? என்பதும் ஆராயப்படல் வேண்டும். இவ்விரு பிரச்சினைகளைப் பற்றியும் பலத்த அபிப்பிராய பேதங்கள் இருக்கின்றன.

ஆங்கில வரலாற்றாசிரியர்களின் கூற்றுப்படி இலங்கைக்கு வந்த முஸ்லிம்கள் அராபியர் என்றும் அவர்கள் இங்கு நேராகவே வந்து குடியேறினார்கள் என்றும் கொள்ள வேண்டியிருக்கிறது. ஒல்லாந்து வரலாற்றாசிரியர்கள், அவர்கள் கடல் கொள்ளைக் கூட்டத்தினர் என்றும், அநேகமாக அவர்கள் இந்தியாவிலிருந்து வந்தார்கள் என்றும் கூறுகிறார்கள். சே. டெனன்ட் இவ்விரு கட்சியினரின் அபிப்பிராயங்களையும் நிராகரித்து முஸ்லிம்கள் மத்திய கிழக்கிலிருந்து வந்தார்கள் என்றும், ஆனால் அவர்கள் முற்றாக அராபியராக இருக்காது. அநேகமாக பாரசீக மக்களாக இருக்க வேண்டும் எனவும் கூறுகிறார்.

இலங்கைக்கு அராபியர் நேராகவே வந்து சிங்களப் பெண்களை மணந்ததால் ஏற்பட்ட சந்ததியினரே முஸ்லிம்கள் என்ற அபிப்பிராயம் குறிப்பாக அரசியல்வாதிகளால் கொடுக்கப்படுகிறது. பொதுவாகக் கூறினால் மத்திய கிழக்கின் பல பாகங்களிலிருந்தும் அராபியர்கள் முற்பகுதியில் வந்திருக்க வேண்டும். இஸ்லாத்துக்கு முன் அராபியா குறிப்பிடத்தக்க நாகரீகத்தைத் தோற்றுவித்து வளர்த்ததாக வரலாற்றில் காண்பதற்கில்லையென்றாலும், வர்த்தகத்திலீடுபட்டிருந்த யெமன், கிரேக்கம் போன்ற அராபிய இராச்சிய மக்கள் இலங்கைக்கு வந்திருக்கலாம். பாரசீகக் குடாவில் யூப்ரடீஸ், தைக்ரீஸ் நதிப்பள்ளத்தாக்கிலும், ஆபிரிக்காவில் நைல் நதிப் பள்ளத்தாக்கிலும் மிகப் பழமையான நாகரீகங்கள் நிலவின.

எனவே ஆபிரிக்க, பாரசீக மக்களே அநேகமாக இலங்கைக்கு வந்திருக்க வேண்டும் எனவும் கொள்ளலாம். ஆனால் இவர்கள் இலங்கைக்கு நேராகவே வந்து சிங்களப் பெண்களை மணந்து நிரந்தரமாகக் குடியேறினார்கள் என்பதற்கு வரலாற்றில் போதிய ஆதாரங்கள் இல்லை.

இஸ்லாத்துக்கு முன் இலங்கைக்கு வந்த அராபியர்கள் தொகை மிகக் குறைவாகும். இஸ்லாத்தின் பின், அதுவும் ஒன்பதாம் நூற்றாண்டின் பின்னேயே இலங்கையில் முஸ்லிம்கள் பெருந்தொகையாக குடியேறினார்கள் என வரலாற்றில் காணக்கிடக்கிறது. இவர்களில் பெருந்தொகையானோர் இந்தியாவிலிருந்து வந்தனர் என்பதற்குப் பல ஆதாரங்கள் இருக்கின்றன. குறிப்பாக பதின் மூன்றாம் நூற்றாண்டு மத்தியில் மத்திய கிழக்கின் பக்தாத் நகரம் மங்கோலியர்களால் அழிக்கப்பட்ட பின், அப்பகுதி முஸ்லிம்களின் வருகை குறைந்து இந்தியாவிலிருந்தே முஸ்லிம்கள் செல்வாக்கு இலங்கையினுள் புகுந்தது. மேலும் புதுடில்லியில் முஸ்லிம் இராச்சியம் நிறுவப்பட்டு தென் இந்தியாவரை முஸ்லிம் செல்வாக்கு வியாபித்தவுடன், இந்திய முஸ்லிம்களுக்கும் இலங்கையருக்கும் தொடர்பு மேலும் அதிகரித்தது. இந்தியாவின் டெக்கான் முஸ்லிம் அரசர்களின் வேண்டுகோளின் பேரில் கொழும்பில் வியாபார மத்திய ஸ்தலம் அமைக்கப்பட்டதாகவும், அந்நேரத்தில் பெரியதொரு முஸ்லிம் சனத்தொகை கொழும்பில் குடியேறி வாழ்ந்ததாகவும் வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு சமூகத்தின் சாதி அடிப்படை, அவர்கள் பேசும் மொழி, அங்க உடல் அமைப்பு, தோற்றம், நிறம், உடை, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றிலிருந்தே நிர்ணயிக்கப்படல் வேண்டும். இந்த அடிப்படையில் ஆராயுமிடத்து இலங்கை முஸ்லிம்களில் பெரும்பாலானோர் இந்தியாவிலிருந்தே வந்திருக்க வேண்டும் என்ற முடிவு தவிர்க்க முடியாததாகும்.

ஜே.எம்.எம்.றாஜி

# இலங்கை முஸ்லிம்களின் அரசியல் சக்தி மீண்டும் முருங்கை மரம் ஏறிவிட்டதா?

இன்று புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைத் தீர்வில் இலங்கைத் தீவில் வாழும் சகல இன மக்களின் தம் பங்கு என்ன என்பது குறித்து ஆராய்வதில் மிக ஆர்வத்துடன் செயலாற்றிக் கொண்டிருக்கின்ற காலகட்டமிது. ஒவ்வொரு சமுதாயத்தினரும் ஒவ்வொரு கட்சியும் இது பற்றி ஆராய்ந்து அவரவர் பாணியில் ஆய்வு நடாத்தி அவர்களால் சொல்லக்கூடிய செய்யக்கூடிய விடயங்களைத் தெரிவித்தும் போராடியும் வருகின்றனர். அதேபோன்றே ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸும் இந்த இனத்தீர்வில் தமது பங்கை செவ்வனே ஆய்வுகள் நிகழ்த்தி சீரான ஓர் ஆய்வுத் திட்டத்தை தொகுத்து அதன் அடிப்படையில் செயலாற்றுவார்கள் என்றே முஸ்லிம்களில் பலரும் நம்பியிருந்தனர். ஆனால் இன்று நடந்து கொண்டி ருப்பது என்ன? ஒவ்வொரு முஸ்லிம் அரசியல் தலைவரும் தமது அரசியல் ஆசனங்களைக் காப்பாற்றிக் கொள்வதிலேயே மிகுந்த அக்கறை காட்டி வரு வது கண்கூடாகத் தெரிகிறது. இந்த நிலைமை வடக்குக் கிழக்கிலே வாழும் இலட்சக் கணக்கான முஸ்லிம் மக்களி டையே பெரும் அச்சத்தையும் அதிருப்தி யையும் ஏற்படுத்தியுள்ளது.

இப்படியான நிகழ்வுகளை எதிர்கால முஸ்லிம் சமுதாயம் சந்தித்தேயாக வேண்டும். என்பதை தமது தீர்க்க தரிச னத்தினால் அறிந்திருந்ததினால் அனுபவ பூர்வமாக உணர்ந்து சிந்தித்து வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் அரசியலில் விடிவு காணும் ஒரே நோக்கில் தனித்துவக் கொள்கையுடைய ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் எனும் மாபெரும் மக்கள் இயக்கம் மர்ஹூம் (எம். எச். எம். அஷ்ரஃப் எனும்) மாமனிதனினால் தோற்று விக்கப்பட்டது. இதை இந்நாடு மட்டுமல்ல இந்த அவனியே அறியும். ஆனால் இந்த நாட்டில் அந்தக் கட்சி உருமாற்றம் பெற்று எடுப்பார் கைப்பாவையாக மாறியுள்ளதை எண்ணி முஸ்லிம் சமூகத்தின் புத்திஜீவிகளும் விடய மறிந்த வட்டாரங்களும் கவலை கொண்டுள்ளனர். இலங்கைவாழ் முஸ் லிம்கள் இதை எக்கோணத்தில் பார்க்கிறார்கள் என்பது ஒரு புறமிருந்தாலும் தொடர்ந்து பாதிப்புக்கு ஆளாகியிருக்கின்ற வடகிழக்கு முஸ்லிம்கள் மிகவும் நொந்து கொதிப்படைந்து வருகின்றார்கள். தாம்தான் முஸ்லிம்களின் ஏக தலைவர்கள் என்று கூறிக் கொள்ளும் சில அரசியல்வாதிகள் இந்த சமுதாயத்தின் தேவைகளை மறந்து அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய கட்சியின் கொள்கைக் கோட்பாடுகளையும் மறந்து தம்மை அரசாங்க கதிரைகளில் அமர்த்திய மக்களையும் நட்டாற்றில் கைவிட்டு தம் பாராளுமன்றக் கதிரைகளே தஞ்சம் என்றும் யார் எள்ளி நகையாடினும் கவலையில்லை சமூகமோ, கட்சியோ, தாமே இகழ்ந்துரைக்கப்பட்டாலும் தான் பாதுகாவலனாக உள்ள தலைவனின் அரசு கேவலமடையக் கூடாது என்பதிலேயே அக்கறையாக உள்ளனர்.

நம்மவர்களில் ஒரு சிலர் அரசுக்கட்சி, இன்னும் ஒரு சாரார் பிரதான எதிர்க் கட்சியிலும் அதன் தோழமைக் கட்சி யான ஜே. வி. பி. யிலும், அதேநேரம் சமூகத்தினால் சமூகத்திற்காக என்று வாக்குப் பெற்ற தம் சமூகக் கட்சியோ அழிந்து அல்லோலகல்லோலமாகிய நிலையில் நுஆ என்றும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்றும், அஷ்ரஃப் காங்கிரஸ் என்றும் ஆளுக்கொரு கட்சியாகி சுயலாப அரசியலே செய்து வருகின்றனர். இந்த சமயத்தில் ஏனைய அரசியற் கட்சிகள் அமைத்து வரும் அரசியல் வியூகம் கூட இவர்கள் அறிவுக்கு எட்டவில்லையோ தெரியவில்லை. ஒவ்வொரு சமூகமும் கட்சி ரீதியில் ஒன்றுபட்டு தமது அரசியல் நிலைப்பாடுகளில் கருத்தொற்றுமை பெறவே விரும்புகின்றனர். ஆனால் நம் சமூகத்தின் கட்சி மட்டும் ஆளுக்கொரு கொடி பிடிக்கவே விரும்புவது அவர்களின் அரசியல் வங்கு றோத்தா? கற்றுக் குட்டித்தனமா? அறியாமையா என்பதைத் தீர்மானிப்பதில் மக்களுக்கு தர்ம சங்கடமாய் உள்ளது. ஏனெனில் அவர்களில் சிலர் சில பொது நிகழ்ச்சிகளில் நடந்துகொள்ளும் நடைமுறைகள் ஊடகங்களில் தெரிவிக்கும் அல்லது நடந்தகொள்ளும் நடை முறை சிறுபிள்ளைத்தனமாக உள்ளதையும் இது நிரூபித்து வருகின்றது. இந்த நிலையில் முஸ்லிம் சமூகத்திலும் உள்ள அரசியல்வாதிகள் ஒன்றுபட்டு ஒருகொடியின் கீழ் செயலாற்ற வேண்டும் என்பதே சமுதாயத்தைப்பற்றிச் சிந்திக்கும் புத்தி ஜீவிகளுடைய கருத் தென்பதில் சந்தேகமில்லை. இந்நிலையில் முஸ்லிம் சமூகத்திற்கென உண்மையாக உழைக்க விரும்புவோர், தம் உள்ளங்களை தூயதாக்கி நடந்தவைகளை மறந்து ஒன்று சேர்த்து சிந்தித்து செயலாற்ற முன்வரவேண்டும். ஆனால் இது சாத்தியமா? அல்லது இது எப்போது சாத்தியமாகும்? என்பதை சிந்தித்தோமானால் பல கசப்பான உண்மைகளை முஸ்லிம் சமூகம் ஜீரணிக்க வேண்டும்.

பத்திரிகைச் செய்திகளைப் பார்த்தால் தலைப்புக்களில் மூதூர் அசம்பாவி தங்களுக்கு முஸ்லிம் காங்கிரஸே பொறுப்பு என்று மூதூர் பாராளுமன்ற உறுப்பினர் மஃரூபும், தலைமைத்துவ மாற்றத்திற்கான இறுதி சமிக்ஞையே மூதூர் கலவரமாகும் என்றும், இன்னும் வடக்கு கிழக்கு தனியாகவும் அவற்றுக்கு வெளியே வேறாகவும் முஸ்லிம் காங்கிரஸ் தலைமையைப் பிரிக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் சேகு இஸ்ஸதீனும், அமைதியை விரும்பாதோரோ முஸ்லீம்களைக் குழப்பி குளிர் காய நினைக்கின்றனர் என்று பாராளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லாவும், நாங்கள் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் என்பதிலல்ல தலைமைத்துவம் யார் என்பதிலேயே பிரச்சினை என்று அமைச்சர் அதாவுல்லாவும் கூறுகின்றனர். அமைச்சர் ஹக்கீமோ, பிரதமர் எவ்வழியோ அவ்வழியே நம்வழி என்றும் அதுவே நல்வழி என்றும் தலையாட்டுகிறார். தொலைக்காட்சி ஊடகங்களில் பார்த்தால் பாராளுமன்ற உறுப்பினர்கள் எலியும் பூனையும்போல சிறுபிள்ளைத் தனமாகக் கேலிக் கூத்துக்கள் நிகழ்த்தி தம் சமூகங்களின் முகங்களிலும் தம் முகங்களிலும் தாமே உமிழ்ந்து கொள்கின்றனர். ஆனால் அதே நேரம் இன்னும் சிலர் சமுதாயப் பிரச்சினைகளை சொல்லவும் தெரியாமல் செய்வதும் அறியாமல் ஏதோ இருதலைக் கொல்லிகள் போல நடமாடுகின்றனர். வடக்கு கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியம் என்றும், பாராளுமன்ற முஸ்லிம் உறுப்பினர் என்றும் எதேதோ செய்தும் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு முஸ்லிம் மக்கள் கண்ட பலன் ஒன்றுமில்லை. இவையெல்லாம் தலைமைத்துவங்களை தமதாக்கும் நடவடிக்கையே தவிர சமூக நலனுக்காக எடுக்கும் நடவடிக்கைகளாகத் தெரியவில்லை.

இந்த இரண்டும் கெட்டான் இழி நிலையிலிருந்து நம் சமூகம் அரசியல் வானில் மீண்டும் சரியான நிலைப்பாட்டுக்கு வரவேண்டுமாயின் உடனடியாக நாம் என்ன செய்யலாம் என்பதை காலம் தாழ்த்தாது சிந்திக்க நாட்டு முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் கடமைப்பட்டுள்ளனர். முஸ்லிம்களுக்கு தலைமைதாங்க விரும்பும், முஸ்லிம்களின் வாக்குகளில் இலாபமடைய விரும்பும் அரசியல் வாதிகளும் தீவிரமாகவும், அவசரமாகவும் சிந்திக்க கடமைப்பட்டுள்ளனர். இப்பொழுது ஒரு மறைக்க முடியாத உண்மை ஒன்றை கிழக்கு மாகாண மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர். மறைந்த மாமேதை மர்ஹூம் அஷ்ரஃப் அவர்கள் மிகுந்த பிரயத்தனங்களோடும் பல சிரமங்கள் போராட்டங்கள் தடைகள் எல்லாவற்றையும் தம் சீரிய சிந்தனையாலும், அயராத உழைப்பினாலும் வென்று முஸ்லிம் சமூகத்திற்கு அரசியல் முகவரியைத் தேடித்தந்து மறைந்தார். இது வராலாற்று உண்மை. ஆனால் இன்று முகவரியையும் கிழித்து முகத்தையும் அடகு வைக்கின்றனர் இன்றைய அரசியல்வாதிகள். தீரமும், விவேகமும், தூர நோக்கும் நேர்கொண்ட நெஞ்சுரமும் இல்லாமல் உள்ள ஒரு தலைவனைக் கொண்ட ஒரு கட்சி முஸ்லிம்களுக்கான கட்சியாக இருந்தால் முழு சமூக முமே நஷ்டமடையும் என்பதும் கடந்த கால வரலாறாகும். இரண்டு தலைமையும் நமது மக்களுக்கு உதவாது என்பதை அனுபவ பூர்வமாக நாமே கண்டோம். நம் சமூக அரசியல் வாதிகள் கற்றறிந்த சான்றோர், புத்திஜீவிகள், மேதைகள், உலமாப் பெருமக்கள் யாவரும் ஒன்று கூடி ஆராய்ந்து ஒரே கட்சியின் கீழ் அணி திரள வேண்டும். அது மறைந்த மாமனிதர் மர்ஹூம் அவர்கள் காட்டிய பாதையான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகவும் அதுவே முஸ்லிம்களின் ஏகோபித்த குரலாகவும் ஒலிக்கவேண்டும். இதற்கு ஒரே தலைமை வேண்டும். தனக்கென எதையும் விரும்பாத பொது நலவாதியாகவும் தலைமைப் பொறுப்பை மட்டுமே செய்யக் கூடியவ ராகவும் வேறு எந்தப் பட்டம் பதவி யையோ விரும்பாத நபராகவும் இருக்க வேண்டும். அது மட்டுமல்ல பாராளுமன்றக் கதிரைகளுக்கோ அல்லது அமைச்சர் பதவிக்கோ அடிபணியாமல் ஆனால் தலைமைத்துவ ஆளுமை மிக்கவராகவும் மற்ற யாருடைய தயவும் வேண்டாத தன்னலம் கருதாத சமுதாயத்திற்காக தன்னை அர்ப்பணிக்கும் ஒருவராக அத்தலைமை அமைய வேண்டும். இதுபோன்ற ஒரு தலைவர் அமைந்து நல்ல புத்தி ஜீவிகளைக் கொண்ட உயர் பீடமும் அமைந்து சின்னத்திற்கு மட்டுமே வாக்களிக்கும் நிலையை உருவாக்க வேண்டும். கட்சி பெறும் வெற்றி களுக்கு அமைய அரசியல் ஆசனங்களுக்கு அரசியல் உயர் பீடமும், தலைவரும் அங்கத்தினரை தேர்வு செய்யும் நடைமுறை வந்தால்தான் நமது சமூகத்திற்கு எல்லாப் பிரச்சனைகளையும் தீர்க்கக்கூடிய நிலை ஏற்படும். நம்மிடையே உள்ள காலத்திற்கு ஒவ்வாத போக்குடைய அரசியல்வாதிகள் திருந்துவார்கள் என்பதோடு எமது சமூகமும் அரசியல் விழிப்புணர்வு பெற்று சுதந்திரமாக வாழக்கூடிய நிலை ஏற்படும். எனவே சிலர் கூறுவதைப்போல ஸ்ரீ.ல.மு.காங்கிரஸை, முஸ்லிம் லீக்கைப்போல் ஆக்கிவிடாமல் அமரர் மர்ஹூம் அஷ்ரஃப் அவர்கள் காட்டிய பாதையிலமைந்த அந்த மகான் கண்ட கனவுகளை நனவாக்கக் கூடியவாறு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸை கட்டி எழுப்ப அனைவரும் திடசங்கற்பம் பூண்டிடுவோம்.

**இப்னு ஜமாலியான்**
*முஸ்லிம் காங்கிரஸ் போராளி*
*திருகோணமலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்வுகள்

—சிராஜ் மஷ்ஹூர்

## விடைகளைத் தேடிச்செல்லும் கேள்விகள்

முஸ்லிம்களது அரசியல் குறித்து மிக நீண்ட வாதப்பிரதிவாதங்கள் நடந்தேறிவிட்டன. வரலாற்று அழுத்தங்களையெல்லாம் மீறி புதிய இயங்குதிசையில் நகர்ந்தேயாக வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு நாம் ஆளாகியிருக்கின்றோம். நமது நடைமுறை அரசியல் குறித்து நமக்குள் தீவிரமான கருத்துப்பரிமாறல்கள் நிகழ்ந்துள்ளன. இன்னும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. எமது சமகால அரசியலானது நமக்கு அருவருப்பூட்டுகிற ஒன்றாகவே வளர்ச்சியுற்று வருகின்றது. பேரினவாதக் கட்சிகள் பற்றிப் பேசினால் என்ன? அல்லது தனித்துவக்கட்சி பற்றிப் பேசினால் என்ன? என்ற எல்லாமே இன்றிருக்கிற நிலை. நாம் கனவு கண்ட நிலையல்ல.

நாம் எங்கோ கனவுகளின் எல்லைகளில் உலவுகையில் நடைமுறை அரசியல் வெறும் சந்தர்ப்பவாதக் கொச்சைத் தனங்களுக்குள் ஊறிக்கிடக்கின்றது. சந்தர்ப்பவாதம் மீண்டும் தன் புத்தியைக் காட்டுகின்ற போது நமக்கு வயிற்றைக் குமட்டுகிறது.

முஸ்லிம் அரசியல் இன்று அடைந்துள்ள நிலையை வெறுமனே பரிதாபகரமானது என்று கூறிவிட்டு நாம் ஒதுங்கிக் கொள்ளலாமா? ஏன் எம்மைச் சூழ்ந்திருக்கின்ற இந்த அரசியலானது கோமாளித் தனங்களாலும் அரைவேக்காட்டு அறிவாளிகளாலும் நிறைந்து நாறிக்கிடக்கிறது. இந்தக் கேள்விகள் உறுத்துகின்ற எவருமே வெறும் பார்வையாளர்களாக ஒதுங்கி நிற்க முடியாத அவலத்தை உணருகின்றனர்.

இது எதிர்பார்த்துக் காத்திருக்கும் அந்த இலட்சிய உலகம் வெறும் கனவு என்று நாம் நம்பியிருக்கின்ற நண்பர்கள் கூடப் பேசிக் கொள்கின்றனர். எழுதி எழுதி எதுவுமே கிழிக்க முடியாது என்பதில் அவர்கள் உறுதியாக இருக்கின்றனர். நமது நடைமுறை அரசியல் ஏற்கனவே தான் தீர்மானித்த வழியில் சிறிதும் பிசகாமல் முன்செல்லத்தான் போகிறது. இடையில் நின்று கூப்பாடு போடும் சிலரால் அதனது வழித்தடத்தின் திசைகளில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது என்பதே அவர்களது கருத்தாக இருக்கிறது. இத்தனைக்கும் அந்த நண்பர்கள் நடைமுறை சந்தர்ப்பவாத அரசியலின் அனுதாபிகளல்ல. மாறாக அதன் தீவிர எதிரிகள். இருந்த போதிலும் இந்தக் கோமாளித்தன அரசியலில் தம்மால் எந்தப் பாதிப்பையும் சலனத்தையும் ஏற்படுத்த முடியாதென்ற அவர்களது அத்தகைய ஒதுங்கு மனோநிலைதான் எல்லாவற்றையும்விட மிகப்பெரிய அச்சுறுத்தலாயிருக்கிறது. இது அந்த நண்ர்களது குரல் மட்டுமல்ல ஒட்டுமொத்தமான ஒரு சமூகத்தின் சிந்திக்கத் தெரிந்தவர்களது பலவீன நிலையின் வெளிப்பாடே இது எனலாம்.

தார்மீக நியாயங்களைப் பேசி சமூகத்தைத் திருத்த முடியும் என்று நம்புவது எவ்வளவு பெரிய முட்டாள் தனம் தெரியுமா? திருத்தமுடியாதளவுக்கு நமது சமூக ஒழுங்கு சிதைந்து சின்னாபின்னமாகிப் போயிருக்கிறது. இவ்வளவு நேர்மையான உண்மையை அப்பட்டமாகச் சொல்வது நமக்கு ஆபத்தில் போய் முடிவதோடு எதிரிகளைச் சம்பாதிக்க உதவுமே தவிர வேறெந்த லாபத்தையம் தராது என்று வேறு சிலர் சொல்கின்றனர். இவர்களைப் பொறுத்தவரை எழுதுவதையே நிறுத்திவிடுவதுதான் மிகப் பொருத்தமான தீர்வு. ஆனால் எழுதாமல் இருப்பது எப்படி என்பது இன்னும் புரியாத விடயமாகவே இருக்கின்றது. இது சில தனி நபர்களது குரல்களல்ல ஒரு சமூகத்தின் வேறுபட்ட தளங்களிலிருந்து எழும் இந்தக் குரல்கள் நசுங்கி மெலிதாய் ஒலிப்பது ஏமாற்றம் தருவதாய் உள்ளது.

எதையும் ஒரு தட்டையான நேர்கோட்டுத்தளத்தில் நின்று பார்த்துப் பழகிவிட்ட ஒரு சமூகத்தின் எதிர் வினைகள் இப்படித்தான் அமையும் என்று மேலெழுந்த வாரியாகச் சமாதானம் கூறிவிடமுடியும். ஆனால் எளிதில் புறக்கணிக்கும்படி அவர்களது பேச்சுகள் இல்லாமலிருப்பதுதான் மிகவும் துயரமானது. ஒரு சமூகத்தின் ஆன்மாவே இப்படிக் காயப்பட்டுக்கிடப்பது எவ்வளவு பெரிய ஏமாற்றம்.

இந்தச் சூழ்நிலையில் போதாமைக்குள்ளும் நம்மைச் சூழ்ந்திருக்கும் அரசியல் சுழிக்குள் சிக்காத மனித ஆளுமைகளை சில குறிப்பிடத்தக்க மீறல்களை அடையாளம் காண வேண்டும் என்கிற தாகம் தான் அடிமனதில் ஆழம் பெறுகிறது. நாம் இந்த உலகத்தைப் பார்க்க விரும்புகிற கோணம் பலருக்கு அதிர்ச்சியூட்டுவதாக இருப்பது ஏன்? சிலபோது அது ஆத்திரமூட்டுகிற அளவுக்கு வளர்ச்சியுற்றிருப்பதும் ஏன்? இந்த மனிதர்கள் இறுகிப்போன தங்களது வரையறைக்குள்ளேயே இன்னமும் நின்று சுழல்கிறார்கள்.

சமூக மாற்றம் என்பது நம் கண்முன்னே நிகழ்ந்துவிடுகிற ஒரு மெஜிக் அல்ல. அது படிமுறை நகர்வுகளின் ஊடாக அடையப்படுவது என்ற பொது உண்மை இங்கு எல்லோருக்குமே தெரிந்த ஒன்றுதான். ஆனாலும் அந்த உண்மைகளை உணர முடியாது பலரது மனக்கண்களை மாயத்திரைகள் மூடியிருக்கின்றன.

எந்த சமூகமும் இயக்கமுறாது தேங்கி நின்று விடுவதில்லை. அது காலத்தின் திசைவழியே மாற்றங்களை ஏந்தி நகர்ந்து கொண்டே இருக்கின்றது. பல ஆண்டுகளுக்கு முன் நமது முன்னோர்கள் விதைத்த, அவாவி நின்ற எத்தனையோ மாற்றங்களை இன்று நாம் நிகழ்த்துகின்றோம். இதுபோன்ற ஒரு மாற்றத்தையே இன்று நாம் விரும்பி நிற்கிறோம். இது நமது வரலாற்றில் இயங்கு விதிகளினூடாக என்றோ ஒருநாள் நடைபெறலாம். நடைபெறும் என்ற நம்பிக்கைதான் நமக்கு ஆதாரம். நிகழ்காலத்தில் நின்றுகொண்டு எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கிறவன்தான் மனிதன். அவன் வெறுமனே நிகழ்காலத்தின் கைதியல்ல.

துரதிஷ்ட வசமாக நமது சூழலின் இறுக்கங்கள் நமக்கு ஆரோக்கியமான எதிர் வினைகளைத் தருவதாயில்லை. இது நமது தலைவிதி மட்டுமல்ல. வரலாறு நெடுகிலும் நாம் வாழுகின்ற சமூகத்திலிருந்து வேறுபட்டுச் சிந்தித்த எல்லோருக்குமே இதுதான் நிகழ்ந்தது. இந்த எதிர் விளைவுகளை மீறிச் செயற்படுவதில்தான் வெற்றி தங்கியிருக்கின்றது. பண்பாட்டுச் சூழலின் தேக்கம், சூழ்நிலையின் நிர்ப்பந்தம் போன்ற வேறுபட்ட பரிமாணங்களுள் எம்மை அமுக்கிவிடுவதற்கும் நமது சிந்தனை நிலைகளை விரிவடைய விடாது தடுப்பதற்குமாய் நமக்க வெளியே ஓர் உலகம் காத்திருக்கின்றது. இந்த சூழலை வென்று நாம் எழ வேண்டும். நம்பிக்கை வறண்ட இப்பாலை வனத்திற்குள்ளும் நம்பிக்கையின் விளக்கை ஏந்திய சிறு புல்லாய்த் துளிர்விட வேண்டும்.

வரையறைகளுக்கு வெளியே சிந்தித்து தமது உலகங்களை விரித்தவர்களால்தான் அதிசயிக்கத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. வரலாற்றை மிக உன்னிப்பாக அவதானித்தால் சில தனி நபர்களது முயற்சிகள் மட்டுமே சமூகங்க்ளினதும் கொள்கை கோட்பாடுகளினதும் வீழ்ச்சியை பல நூற்றாண்டுகளுக்குப் பிற்போட்டிருப்பதை உணர முடியும். இவை எளிதில் புறக்கணிக்கக் கூடிய விடயமா?

நமது எல்லைகளுக்கு வெளியே உள்ள உலகம் கற்பனைகளின் உலகம் என்ற சிந்தனைப் போக்கு நமக்குள் ஆழமாக வேரூன்றி நிற்கின்றது. கால ஓட்டத்தினூடே அள்ளுண்டு செல்லும் சருகுகளாய் நாமும் அலைக்கழிவதெனில் இந்த மண்ணில் நாம் மனிதர்களாய் வாழ்வதில் அர்த்தமில்லை.

நமக்குள்ளே உன்னதமான நோக்கங்கள் இருக்கவேண்டும். உலகமெங்கும் வியாபித்த சிந்தனை நமக்கு வேண்டும். நமது கருத்துக்களை கவனத்தில் எடுக்கின்ற அறிவு பூர்வமான நியாயங்களுக்காக நம்முள் முரண்படுகின்ற மனிதர்கள் தான் நமக்குத் தேவை. இந்த மனித உள்ளங்களை சம்பாதிக்கும் பணியிலேனும் நமது வாழ்க்கை முடிந்துபோனால் அதுவும் ஒருவகையில் திருப்திதான்.

இலங்கை முஸ்லிம் சமூகத்தை எந்த திசையில் நோக்கினாலும் செய்யப்பட நிறையப்பணிகள் உள்ளன. ஆனால் இந்தப்பணிகளைச் செய்வதற்குப் பெருமளவில் யாரும் முன்வருகிறார்கள் இல்லை. தயக்கமும், சோர்வும் நமக்கு ஏற்படவே செய்கின்றது. ஆயினும் இதைப்பற்றி சிந்திப்பதற்காயினும் சில மனிதர்கள் இருக்கின்றனர் என்பதே ஒரு ஆறுதலான செய்திதான். நமது சமூகத்திற்குள்ளே ஊடுருவி நிற்கும் இடைவெளிகளை நிரப்ப எந்த தேவ தூதரும் வானத்திலிருந்து வந்து குதிக்கப்போவதில்லை. நாம்தான் செயற்பட வேண்டும். செயல் செயலொன்றே நமக்குத் தேவை. இளமைக்கேயுரிய வேகமும், முதுமைக்குரிய பக்குவமும் கலந்த ஒரு கலவையைத் தேடித் தேடியே நாம் பயணிப்போம். இந்தத் தேசத்தின் எந்த மூலையிலேனும் போராடுவதற்கான மனிதர்கள் காத்திருப்பார்கள். அவர்களது முகங்களில் படிந்திருக்கிற தூசுகளை நாம்தான் தட்டிவிட வேண்டும். அவர்களில் படிந்துபோயிருக்கும் புழுதி மண்டலங்களை அகற்றும் துடைப்பான்கள் நம்மிடமே உள்ளன.

நமக்கு முன்னே எழுப்பப்பட்டிருக்கும் கேள்விகளே நமக்கு மகிழ்ச்சி தருவனதான். ஏனெனில் எந்த சமூகத்தின் கேள்விகள் கேட்கப்படுகின்றனவோ அந்த சமூகம் சிந்திக்கத் தொடங்கியிருக்கின்றது என்று அர்த்தம். கேள்விகள் கேட்கப்படுவதன் மூலம்தான் நாம் பதில்களைத் தேட நிர்ப்பந்திக்கப்படுவோம். அந்த வகையில் நமக்குள்ளும் கேள்விகள் எழுப்பப்படுவது மனதுக்குப் பெரும் ஆறுதலாயிருக்கின்றது.

## ஹரீஸ் எம். பி. யின் ஊடகச் செயலாளரின் மறுப்பு!

முஸ்லிம் குரலின் சுவடு 11ல் முன் பக்கச் செய்தியாக எழுதப்பட்டு இருந்த "முஸ்லிம் அரசியல் சூடு பிடிக்கின்றது" என்ற செய்தி, கடந்த டிசம்பரில் ஹரீஸ்- அன்வர் இஸ்மாயில் ஆகியோர் ஆரம்பித்த பாராளுமன்ற பகிஸ்கரிப்பு முஸ்லிம்களை மிக மோசமாக ஏமாற்றியதுடன் பலத்த அரசியல் தோல்வியையும் சந்தித்தது என்று செய்தியாளர் எழுதியிருப்பது பகிஸ்கரிப்பின் அந்தரங்கமான தாக்கங்களையும் வெற்றிகளையும் புரிந்து கொள்ளாமல் எழுதப்பட்டதாகும்.

ஹரீஸ்- அன்வர் ஆகியோர் உட்பட ஒன்பது பாராளுமன்ற உறுப்பினர்கள் மேற்கொண்ட பாராளுமன்ற பகிஸ்கரிப்பின் தாக்கமே இன்று முஸ்லிம்கள் வடக்கு கிழக்கில் ஓரளவாயினும் நிம்மதியாக வாழ முடிவதுடன் தங்களுக்கு நடந்த அநீதிகளைப் பற்றி தைரியமக பேசவும் வழி சமைத்தது என்பதை யாரும் மறந்து விட முடியாது.

குறித்த பாராளுமன்ற பகிஸ்கரிப்பு நடைபெற்று இருக்காவிட்டால் பொது ஜன ஐக்கிய முன்னணியிலிருந்து சுமார் பதினைந்துக்கும் மேற்பட்ட எம். பி க்கள் ஐக்கிய தேசிய முன்னணிக்கு கட்சி தாவி ஐ.தே முன்னணியை பலப்படுத்தி இந்நாட்டின் ஜனாதிபதியை நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றினைக் கொண்டுவந்து அரசியலில் இருந்து ஓரங்கட்டியிருப்பார்கள். அத்துடன் சிறுபான்மைக் கட்சிகளின் அரசியல் பலத்தையும் சிதைத்திருப்பார்கள் .

இப்பகிஸ்கரிப்பினால் முஸ்லிம்கள் கோரி நிற்கும் இடைக்கால நிருவாக சபையை புறக்கணித்து விட்டு புலிகள் கோரிய இடைக்கால நிருவாக சபையை வழங்க நடவடிக்கை எடுத்த அரசு நிலை குழம்பியதுடன் புலிகள் இடைக்கால நிருவாக சபையை கைவிட்டதும் நாம் அறிந்ததே.

அது மட்டுமல்லாது மனச்சாட்சிக் கேற்ப வாக்களித்தல், கட்சி தாவல் ஆகியவற்றைக்கொண்ட 18,19 ஆவது திருத்தச்சட்ட மூலத்தை பாராளுமன்றத்துக்கு கொண்டு வராமல் தடுத்ததும் இந்த பாராளுமன்ற பகிஸ்கரிப்பே என்பதை யாரும் மறுக்க முடியாது.

குறித்த சட்ட மூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு இருந்தால் இந்நாட்டில் இருக்கின்ற சிறுபான்மைக் கட்சிகள் சிதைந்து முஸ்லிம்களின் பேரம் பேசும் சக்தியும் இழக்கப்பட்டு இருக்கும்.

இவ்வாறான துரதிஸ்டவசமான சம்பவங்கள் நடந்து முஸ்லிம்களின் தேசிய இருப்புக்கு அச்சுறுத்தல் வந்து விடக் கூடாது. என்ற தூய நோக்குடன் ஆரம்பித்து வெற்றிகரமாக முடிவடைந்ததே ஹரீஸ்-அன்வர் ஆகியோர் மேற்கொண்ட பாராளுமன்ற பகிஸ்கரிப்பாகும்.

இப்பகிஸ்கரிப்பின் கதாநாயகர்களான ஹரீஸ்- அன்வர் இஸ்மாயில் ஆகியோருக்கு சமூகம் என்றும் நன்றிக்கடன் பட்டிருக்கிறது.

**சமீம் அப்துல் ஜப்பார் ஜே.பி.**
**கல்முனை.**



### சிவப்பு அதிஷ்ட நிறம்!

பச்சையை நாம் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்கிறோம்.
ஒரு நாடு சிவப்பை விடாமல் பிடித்துக் கொண்டிருக்கிறது!
ரஷ்யா என்பீர்கள்.
தவறு! ஜப்பான் சிவப்பு நிறத்தை அதிஷ்ட நிறமாகப் போற்றுகிறது!
அதன் கொடியைப் பாருங்கள்.

### கேடு கெட்ட நாடுகள்!

இன்றைய உலகத்தின் கேடு கெட்ட முஸ்லிம் நாடுகள் எவை என உங்களிடம் கேட்டால் பதில் சொல்வீர்களா?

சொல்லத்தான் செய்வீர்கள். உங்கள் பதிலில் இந்த நாடுகள் உண்டா என்று பாருங்கள்.

#. சவூதி #. குவைத் #. கட்டார்
#. துருக்கி #. ஜோர்தான்

### பாஜபா பதூவோ பாரத் பாச்சாவோ!
### புஷ் பகாவோ துனியா பச்சாவோ!

புரியுமே, கொஞ்சம் கொஞ்சம்!

பாரத் - புஷ் - துனியா - எல்லாம் நீங்கள் தெரிந்த வார்த்தைகள் தான்.

பாரதத்தின் பீகார் மாநில முதல்வராக இருந்த லல்லு பிரசாத் யாதவ் ஒரு விசித்திரமான அரசியல்வாதி!

நம்ம அரசியல் ஆசாமிகளைப்போல் யாரை எந்த நேரத்தில் ஆதரிப்பார் என்று சொல்லமுடியாது.

இப்பொழுது பாரதிய ஜனதாக் கட்சியையும் (பிரதமர் வாஜ்பேயிற்குச் சொந்தம்) அமெரிக்க புஷ்ஷையும் சுற்றி வளைத்து 'கீதம் இசைக்கிறார்'.


அதைத்தான் மேலே தலைப்பாகப் பார்த்திருக்கிறீர்கள்.

அர்த்தம் என்ன தெரியுமா?

☐. பாஜக வைத் துரத்துங்கள், பாரதத்தைக் காப்பாற்றுங்கள்.
☐. புஷ்ஷைத் துரத்துங்கள், புவியை (உலகை) க் காப்பாற்றுங்கள்.


பரவாயில்லை நல்ல சுலோகம்தான்.

### ஒரு விளையாட்டு வினை ஆகிறது



### உலக அமைதி வேண்டி

உலக அமைதி வேண்டி இந்தியாவில் மிகப் பெரிய பள்ளிவாசல்களில் ஒன்றான போபால் .... ஜும்ஆ மஸ்ஜிதில் இறைஞ்சும் மக்கள் கூட்டம். இதனை உலக முஸ்லிம் காங்கிரஸ் ஏற்பாடு செய்திருந்தது.



### டாக்டர் யூசுஃப் அல் ஹர்ளாவி

தெரியவேண்டிய ஒரு பெயர்!

வயது 85

உலகப் புகழ் பெற்ற இஸ்லாமியச் சிந்தனையாளர்.

இவர் சமீபத்தில் (மார்ச் -01) கேரளா சாந்த புரத்தில் ஆரம்பிக்கப்பட்ட இஸ்லாமியப் பல்கலைக்கழகத் திறப்பு விழாவில் ஒரு லட்சம் மக்கள் கூடிய கூட்டத்தில் ஒரு மணி நேரம் சிறப்புரையாற்றி அனைவர் நெஞ்சங்களிலும் நிறைந்து போனார்!

இவர் இங்கு வர ஒரு வாய்ப்பு ? யாரால், எப்பொழுது?

### முனாபிகூன்

நயவஞ்சகர்கள் ஒவ்வொரு சமூகத்திலும், சமுதாயத்திலும், நிறுவனத்திலும், இயக்கத்திலும் காணப்படுகிறார்கள். முஸ்லிம்கள் அதிக சகிப்புத் தன்மையும் இரக்கமும் உடையவர்களாதலால் மற்றைய சமூகங்களைவிட இஸ்லாமிய சமுதாயத்தில் பெருந்தொகையான முனாபிக்குகள் காணப்படுகிறார்கள். வெளியிலுள்ள அழுக்கைவிட வீட்டுக்குள் இருக்கிற அழுக்கு மிகவும் மோசமானது என்பதை நாம் மனதிற்கொள்ள வேண்டும். நயவஞ்சகர்கள் இஸ்லாத்தின் வெளிப்படையான எதிரிகளைவிட மிகவும் ஆபத்தானவர்கள். "தூது காலாண்டு சஞ்சிகையில் கண்டது. யான் பெற்ற "துன்பம்" பெறுக இவ்வையகம்.



### வைத்தியராகுங்கள்!

**சிறு நீரின் நிறங்கள**

*அஜீரணம்* - மழையில் ஊறிய வைக்கோல் நீர்.

*உடல் சூடு* - சிவப்பும் மஞ்சளும் கலந்த நிறம்.

*அதிக சூடு* - நெருப்பு நிறம்.

*நீர் இரத்தப்பெருக்கு* - சிவப்பும் கறுப்பும் கலந்துவரும்.

*அதிக இரத்தக் கொதிப்பு* - சிவப்பு நிறம்.

*சீதள நோய்* - கறுப்பும் பச்சையும் கலந்த நிறம்.

*விஷப் பூச்சி தீண்டுதல்* - பச்சை நிறம்.

### துண்டிக்கப்பட்டவனின் சாபம்



தடித்த குரலுயர்த்திப்பேசிலேன்
பிறர் அஞ்சுதற்குரிய
கொடூரனுமல்ல நான்.
எனினும்
நடு நிசியில்
வஞ்சித்தென் கழுத்தை
ஏனறுத்தீர்?

என் துவிச்சக்கர வண்டியே
சந்துக்கானது.
முன்னர் எரித்தவரின்
அபயக்குரல் அடங்குமுன்
என் கழுத்தை
ஏனறுத்தீர் ?

பொங்கலுக்கா பலியெடுத்தீர்
ஈழத்தர்ச்சனைக்கா எனையெடுத்தீர்?
கத்தியை செருகியென்
பிடரியை அறுக்கையில்
கதறிய என் ஓலத்தை
தேசிய கீதமாக்கவா
திட்டமிட்டீர்?

எழுபத்திரெண்டு வருசங்கள்
வாழ்ந்தவொரு கிழவன் நான்

ஒரு கோழியைக்கூட
திருகத்தெரியா வயோதிபனை
கதறக்கதற அறுத்தனையோ
வீரர்காள்!

இளம் பிறையை எரித்துண்ட
கல்மடுக்கிராமமே
இனி உன்னில் யுகாந்திரமாய்
அலையுமென் அபயக்குரல்.

அது உன் பிச்சலத்தின் ஆணிவேரை
உசுப்புமொரு நாள்.
அப்போதுணர்வாய்
துண்டிக்கப்படுகையில்
ஓலமிட்ட என் வலியை!

**—ஓட்டமாவடி அறபாத்.**

முஸ்லிம் குரல் பதினொரு இதழ்கள் வெளிவந்துள்ளன. அவைகளில் ஒரிரு இதழ்களைத்தவிர ஏனைய எல்லாவற்றையும் வாசித்துள்ளேன். முஸ்லிம் குரல் தினசரியாக வெளிவரவேண்டும் என்பது தான் எனது விருப்பம். நாங்கள் இது காலவரையும் மாற்று மதத்தவர்களால் நடாத்தப்படும் பத்திரிகைகளையே வாசித்தோம். (ஒரு சிலதைத் தவிர) இந்நிலை மாறி முஸ்லிம்களுக்கென தனியான ஒரு பத்திரிகை வெளி வந்தால் அது எமக்கு பூரண திருப்தியாக இருக்கும்.

—எம்.எஸ்.எம் றாஸீக் ஹாஜி, நாபாவெளை, அவிசாவளை.

நமக்காகப் பேசும் பத்திரிகை ஒன்றை ஆரம்பித்ததன் பின்னரும் கூட இன்னும் எத்தனையோ பேர் தூங்கிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களை நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது.

நமது உரையாடல்களின் முழுப்பலத்தையும் கடந்து வந்த 11 சுவடுகளின் ஊடாகவும் திறன்படவே கண்டு கொண்டோம். இன்ஸா அல்லாஹ் தொடர்ந்தும் இப்பணி விரிவடைய வேண்டும்! இயங்க வேண்டும்! எமது துணிவுகள் மற்ற இனங்களிடையே தூசு போலிருப்பதை நமது சமூகம் என்றுதான் உணரும் ?

லைட் ரீடிங் பகுதி தெளிவு குறைவாக உள்ளது. மாதர் பகுதி, கவிதைகள், மாணவர் பகுதி, அடுத்து வரும் சுவடுகளின் ஊடாக வெளி வருமென நினைக்கிறேன். நமது பத்திரிகையை இனம் காணாத முஸ்லிம்கள் இன்னும் நிறையவே உள்ளார்கள்.

—எம்.ஐ சித்தி றபீக்கா, சம்மாந்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் தேசம் X தமிழ் பாசிஸ்டுகளின் கருத்தியல் தளம்

**முஸ்லிம்கள் பற்றிய அதிக தப்பெண்ணங்கள் பரப்பப்பட்டு வரும் இச்சூழலில் – பிரான்சிலிருந்து வெளிவரும் 'எக்ஸில்' சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்ட ஸ்டாலினின் கட்டுரையை நமது மக்களின் வாசிப்புக்காக மீள் பிரசுரம் செய்கிறோம் .**

Exil - August 2001

மேற்கத்திய நாடுகள் தங்களது காலனித்துவ ஆக்கிரமிப்புகளை நியாயப்படுத்துவதற்காக குடியேற்ற நாடுகள் மீது பல நவீனமயப்படுத்தல் கருத்துக்களை முன்வைத்து செயற்பட்டன. மத உணர்வுகளில் இருந்து மனிதன் உறங்குவதுவரை வளர்ச்சி, முன்னேற்றம், நாகரீகம், அறிவு என்ற வாறாக எல்லோரையும் நாகரீகப்படுத்துகிறோம் அல்லது நவீனமயப்படுத்துகிறோம் என்ற கோசங்கள் முன்வைக்கப்பட்டன.

இந்த முன்னேற்ற நாகரீக செயற்பாடுகளின் பெயரில் வெள்ளை மனிதன் என்பவன் கறுப்பர்களை விட உயர்ந்தவன் என்கிற கருத்துருவம் பரப்பப்பட்டது. ஒரு நவீன மனிதன் என்பவன் எப்படி உண்ண உடுக்க செயற்பட பழகிக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்துகின்ற நவீனத்துவத்தின் பணிகள் மீது ஒரு மதிப்புமிகு புனிதம் கட்டமைக்கப்பட்டது. இதுபோன்றுதான் தேசிய எழுச்சிகளின் போதும் இன விடுதலைப் போராட்டங்களின் போதும் உலகின் அநேகமான ஒவ்வொரு நாடுகளும் ஒவ்வொரு இனங்களும் ஒவ்வொரு மொழிபேசும் சமூகக் குழுக்களும் தங்களை மட்டுமே உயர்ந்தவர்களாக நாகரீகம் மிக்கவர்களாக கட்டமைக்கும் பணியை மேற்கொண்டு வந்தன. இந்திய உபகண்டத்திலும் மன்னராட்சிகளைத் தொடர்ந்து சேர, சோழ, பாண்டிய பொற்காலக் கனவுகளும் அதன் நீட்சியாக கட்ட பொம்மனின் தமிழ் வீரச் சொல்லாடல்களும் தமிழினத்தின் மீதும் தமிழ் மொழியின் மீதும் ஒரு புனிதத்தைக் கட்டமைத்தது. இவ்வாறாக உருவான "மறத்தமிழன்" மீதான மாண்பின் வாரிசாகவே இலங்கைத் தமிழ்த் தேசியமும் சிங்கள பேரினவாத அரசுக்கெதிரான போராட்டப் பாதையில் தனது பூர்வீகக் கோட்பாட்டை உயர்த்திப் பிடித்தது.

தமிழரசுக் கட்சிக்காலத்தில் இருந்து இந்தப் பூர்வீகக் கோட்பாடு ஊட்டி வளர்க்கப்பட்டது. "ஆண்ட பரம்பரை மீண்டுமொரு முறை ஆள நினைப்பதில் என்ன குறை?" என்று உணர்ச்சிக்கவிஞன் காசி ஆனந்தன் வடகிழக்கின் மூலை முடுக்கெல்லாம் முழங்கினான். எப்போதும் ஒன்றின் வளர்ச்சிக்கு மற்றவற்றின் மீதான ஒப்பீடும், மற்றவற்றை எதிரியாகக் கட்டமைத்தலும் அவசியமாகின்ற காரணத்தால் இலங்கைத் தமிழ்த் தேசியமும் தன் ஒப்பீட்டையும், எதிரியைக் கட்டமைக்கும் பணியையும் செய்யத் தவறவில்லை. சிங்களவர்களை முரடர்களாகவும், சிங்களத்தை முரட்டு மொழியாகவும் உருவகித்து தனது எதிரியை எவ்வளவு தூரம் கீழ்நிலைப்படுத்தியதோ அதேபோன்றே தன் தேச எல்லைக்குட்பட்ட பகுதிகளில் முஸ்லிம்களை எதிரியாகத் தேர்ந்து கொண்டது. முஸ்லிம்களின் அன்றாட செயற்பாடுகள் ஒவ்வொன்றும், கீழ்த்தரமானவையாக, துரோகம் நிறைந்தவையாக கதைகள் பரப்பப்பட்டன. தமிழனும், சைவனுமே என்றுமே மேலானவன் என்பதை தொடர்ந்து பேண இஸ்லாமியர்கள் மாட்டிறைச்சி தின்பவன், தொப்பி பிரட்டுபவன், தனது வியாபாரத் தந்திரத்தால் ஏமாற்றிப் பிழைப்பவன், அசுத்தமானவன் இவை எல்லாவற்றுக்கும் மேலாக எங்கிருந்தோ வந்து குடியேறியவன் என்றவாறான பழிச் சொற்கள் கருத்தாடல்களாக முன்வைக்கப்பட்டன. ஆறுமுகநாவலரால் 19 ஆம் நூற்றாண்டில் தொடங்கப்பட்ட சித்தாந்த இயக்கமானது சைவம் என்றால் தமிழ், தமிழ் என்றால் சைவம் என்று தமிழ் தேசிய சைவ புனிதத்தைக் கட்டமைத்தது நாம் அறிந்ததே. இந்த சித்தாந்த இயக்கத்துக்கு அரசியல் வடிவம் கொடுத்தது சோ. பொன். இராமநாதனின் அரசியல் செயற்பாடுகளேயாகும். "இந்தியாவில் மதம் மாறிய இழிந்தசாதி இந்துக்களின் பரம்பரையினரே இலங்கை முஸ்லிம்கள்" என்றவாறாக இலங்கை முஸ்லிம்கள் குறித்து கீழ்த்தரமான எண்ணங்களை ஏற்படுத்தும் நோக்கோடு அவரது செயற்பாடுகள் அமைந்தன. இப்படியான தமிழர்களை தூய்மைப்படுத்தும் நோக்கில் சைவம் அல்லாத இஸ்லாமியத் தமிழர்கள் இழிந்த எதிரியாக உருவகிக்கப்பட்டனர். "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்தகுடியென தமிழ்க்குடி" மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டது.

தமிழனின் பாரம்பரிய புனிதத்துவத்துக்கு எதிரானதாக ஒவ்வொரு இஸ்லாமியனும் முன் நிறுத்தப்பட்டான். தமிழன் x சோனி (சோனகர்களை கொச்சையாக அழைக்கின்ற மொழி) என்கின்ற முரண்பாடுகள் கூர்மையாக்கப்பட்டன. தமிழ்த் தேசியம் தனது கற்பிதங்களாக



பலவகைக் கதையாடல்களை தமிழன் மீது இனிய சுமையாகக் குவித்தது. தமிழ்மொழி கன்னித் தமிழாகவும், தமிழினம் புறநானூற்று மறவர் குலமாகவும் தனது அடையாளங்களை முன்னிறுத்திய போது தமிழர்களின் மதமாக இலங்கை பெரும்பான்மைத் தமிழர்கள் பின்பற்றும் மதமாகிய சைவத்தை தனது மத அடையாளமாக்கியது. இவ்வேளையில் கிறிஸ்தவ, முஸ்லிம் என்கின்ற பல மதங்களைப் பின்பற்றும் தமிழர்களை மறுதலித்து தமிழன் என்பவன் சைவனே என்கின்ற ஒற்றை அடையாளத்தை தமிழ்த்தேசியம் மறைமுகமாகப் பிரேரித்தது. இலங்கையின் வடகிழக்குச் சூழலில் கல்வி, பொருளாதார, சமூக, அரசியல் ரீதியாக மேட்டிமைச் சக்திகளான யாழ்ப்பாணத்து சைவர்களே இதனூடாக தமிழ்த் தேசியத்தின் பிரதிநிதிகளாக முன்நிறுத்தப்பட்டனர். அதிலும் குறிப்பாக சாதிய ரீதியாக பிளவுண்டு கிடந்த / கிடக்கின்ற யாழ்ப்பாணச் சூழலில் அங்கு ஆதிக்க சக்திகளான சைவ வேளாளர்களிடையே தமிழ்த் தேசியம் தனது வேர்களைத் தேடியது. இதற்கான அரசியற் செயற்பாடுகளில் தமிழரசுக் கட்சியும் அதைத் தொடர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியும் நிறைந்த பங்கு வகித்தன.

தனது சொந்தத் தொகுதியிலேயே தோல்விகண்ட யாழ். வேளாளரான அமிர்தலிங்கம் தொடர்ந்து த.வி.கூட்டணியின் தலைமைப் பொறுப்பை தன்னிடம் தக்கவைப்பதற்கு வசதியாக 25 வருட காலமாக கிழக்கு மக்களின் ஏகோபித்த தலைவனாய் இருந்து வந்த செ.இராஜதுரையை தோற்கடிக்க வைக்கும் முயற்சியில் காசி ஆனந்தனையும் இராஜதுரையையும் ஒரே தொகுதியில் மோதவிட்டார். கிழக்குத் தலைமைகளை சின்னாபின்னமாக்கும் இம்முயற்சி 1977 ஆம் ஆண்டுத் தேர்தலில் நடந்தது. அல்பேட் துரையப்பாவினால் நிர்மாணிக்கப்பட்ட யாழ். பல்கலைக்கழகத்தினை வெறும் கௌரவப் பிரச்சினைக்காகவே முழு மூச்சாய் எதிர்த்த தமிழரசுக் கட்சியினர் தங்களது எதிர்ப்புக் கூட்டங்களில் "இது சங்கிலியனின் வாள்" என்று ஒருவாளைக் காட்டி உணர்ச்சிமிகு பிரச்சாரங்களை தளபதி அமிர்தலிங்கம் மூலம் செய்தனர். சங்கிலியன் மதம் மாறிய 1000 க்கு கணக்கான கிறிஸ்தவத் தலித்துகளை கொன்று குவித்தது அந்த வாளினால்தான் என்பதில் எவ்வித வெட்கமும் படவில்லை. காரணம் தமிழன் என்பவன் சைவவேளாளனே என்பது இயல்பாகவே அவர்களது மனதில் நிறைந்திருந்தது.

பல வழிகளிலும் ஒரு தலைநகருக்குரிய அம்சங்களைக் கொண்டிருந்த கிழக்கிலங்கை திருகோணமலை எதிர்காலத் தமிழீழத்தின் தலைநகர் என்பதை தமிழரசுக் கட்சி ஒப்புக்கு ஏற்றுக் கொண்ட போதிலும் யாழ். நல்லூரில் உள்ள சங்கிலியன் தோப்பே தமிழீழப் பாராளுமன்றமாகும் என த.வி.கூட்டணியினர் சூளுரைத்து வந்தமையையும் நாம் இவ்வகையில்தான் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. இப்படி எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக தமிழ்த் தேசியம் தமது பூர்வீகத்தை யாழ். சைவ வேளாளரிடையே மையப்படுத்தி தூய்மையானதாக முன்நிறுத்தியதோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக பாசிசக் கூறுகளை தமிழன் உளவியலில் பதித்தது என்பதுதான் உண்மை.

இந்தப் புனிதப்படுத்தப்பட்ட பெருமை மிகு அடையாளங்கள்தான் கடந்த 20 வருட வரலாற்றில் வடகிழக்கு முஸ்லிம்கள் மீது ஏராளமான கொடுமைகளைச் செய்து முடிக்க தமிழ் தேசியத்தின் பெயரால் தூக்கப்பட்ட துப்பாக்கிகளுக்கு உளவியல் ரீதியான பலத்தை அள்ளிக் கொடுத்தது.

போராளிகள் என்போர் தங்கள் சொந்த பந்தங்களை விட்டு விட்டு நாட்டுக்காகப் போராடப் புறப்பட்டார்கள். அவர்கள் எது செய்தாலும் அது விடுதலையின் பெயரால் கேள்வி கேட்க முடியாததாக விமர்சிக்க முடியாததாக ஆக்கப்பட்டது. அதையும் தாண்டி போராளிகள் ஹீரோக்கள் ஆக்கப்பட்டு சமூகத்தின் மீது நீதி செலுத்துவோராக சட்ட ஒழுங்கைப் பேணுபவர்களாக அதிகாரங்களைக் கையில் எடுத்துக் கொண்டனர். இந்நிலையில் தமிழ்ச் சமூகத்தின் ஒவ்வொரு தனிமனிதனும் விரும்பியோ விரும்பாமலோ அரசிடம் இருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்களை விடுதலை இயக்கங்கள் கையகப்படுத்திக் கொண்டதை ஏற்றுக் கொண்டு மௌனமானான். விடுதலை இயக்கங்கள் என்ற நிலையில் இருந்து இறங்கி உருமாறிப் போன அதிகார அமைப்புகளில் அங்கமாக செயற்படத் தொடங்கினான். இது காலப் போக்கில் ஆயுதம் தூக்கியோரின் எதேச்சையதிகாரத்துக்கும் அத்துமீறல்களுக்கும் வழிதிறந்துவிட்டது. சக இயக்கப் போராளிகளை அழித்தொழிக்க மேற்படி எதேச்சையதிகாரம் எப்படி வசதியானதோ அதுபோன்றே சிறுபான்மை முஸ்லிம்கள் மீதும் இன அழிப்பை மேற்கொள்ள ஏதுவாயிற்று. இவ்வாறுதான் தனது சிறுபான்மைச் சமூகம் ஒன்றின் மீது இன அழிப்புக்கு அடிகோலிட்ட தமிழ்த் தேசியத்தின் சித்தாந்தத் தளம் அதன் அடையாளங்கள் என்பவற்றோடு இவ்வகை தமிழ் பாசிச செயற்பாடுகளுக்கு துணைபோகும் கருத்தாடல்களை முன்மொழிவோரும் அதனைப் பேணிக்காக்க முயல்வோரும் குறித்து எச்சரிக்கையாய் இருக்க வேண்டியது அவசியமாகும். அவ்வகையில் மிகவும் தந்திரோபாயமாக தமிழ் பாசிசக் கருத்தாடல்கள் சிறுபத்திரிகைச் சூழல்களிலும் நடமாடத் தொடங்கியுள்ளன. இவர்கள் அடையாளம் காணப்பட வேண்டும்.

இலங்கை முஸ்லிம்கள் மீதான தமிழ்ப் பாசிஸ்டுகளின் ஒடுக்குமுறையும் அதனைத் தொடர்ந்து முஸ்லிம் தேசியம் ஒன்றை கட்டியெழுப்புவதற்கான தேவையும் ஏற்பட்ட சூழ்நிலைகள் நாம் கடந்து வந்தவையே.

பல்விதப் பிற்போக்கு அம்சங்களையும் கொண்டு வெறும் இராணுவத் தலைமையின் கரங்களில் இறுகிப் போய் நிற்கும் தமிழ்த் தேசியத்தின் பாசிசப் போக்கை தொடர்ந்து பாதுகாக்கவும் முஸ்லிம்களின் எழுச்சிகளை அவசியமற்றதாகவும் காட்டமுனையும் கருத்தாடல்கள் தமிழ் புத்திஜீவித் தரப்பில் இருந்து இன்றும் வெளிக்காட்டப்பட்டு வருகின்றமை மிக வேதனை அளிக்கும் விடயங்களாகும். இந்தக் கருத்தியல் ஆதரவுத்தளமே மிக அபாயகரமானது.

இஸ்லாமியர் எனும் ஒரே காரணத்துக்காக தங்கள் மீது இழைக்கப்பட்ட பாரிய மனித உரிமை மீறல்களைத் தொடர்ந்து தங்களை ஒரு சிறுபான்மைத் தேசிய இனமாக முன்நிறுத்திப் போராடும் இலங்கை முஸ்லிம்களின் உணர்வுகளை அவசியமற்றதாகவும், அபாயகரமானதாகவும் காட்டுகின்ற புத்திஜீவித உளறல்கள் தமிழ்ப் பாசிஸ்டுகளுக்கு மென்மேலும் ஊக்கமளிப்பதேயாகும். இவ்விதமாக அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் புலிகளைப் பாதுக்காக்கவும் முஸ்லிம்களின் நியாயமான தேசிய உணர்வுகளை பலவீனப்படுத்தவும் சேவைசெய்து வருகின்ற தமிழ்ப் புத்திஜீவிகளின் வரிசையில் அண்மைக் கால சில வெளிப்பாடுகளின் ஊடாக நான் இருவரது குரல்களை அடையாளம் காண்கின்றேன்.

மோச் நிறுவனத்தின் சார்பில் நடத்தப்பட்ட (27,28. மார்ச் 1999) "இலங்கை முஸ்லிம்களின் தேசிய அடையாளங்களும் அரசியல் தலைவீடும்" எனும் கருத்தரங்கில் வி.ரி.தமிழ்மாறன் தெரிவித்த கருத்துக்கள் மிகவும் கண்டிக்கத்தக்கவை. போதாக்குறைக்கு அப்போதைய சரிநிகரின் 177 இதழ் அழகூன படங்களுடன் இவரது பேச்சை பிரசுரித்திருந்தது.

அவர் முன்வைக்கும் கருத்துக்களாவன:

* தமிழ் – முஸ்லிம் ஒற்றுமை என்பது அவர்களை ஒரே அரசியல் ஆளுமைக்கு உட்பட்டவர்களாக மட்டும் இருக்கும் வரையில் நன்றாகத்தானிருந்தது.

* தமிழ் மக்களின் அபிலாசைகள் ஒன்று திரண்டு அவை (crystallized) அவை தமிழ் தேசிய இனத்தின் அடிப்படைக் கோட்பாடுகளாக மாறிய போது முஸ்லிம்கள் அந்த அடையாளத்துக்குள் தங்களைக் கொண்டு வர மறுத்துவிட்டார்கள். மொழியால் ஒன்றுபட்டவர்கள் நாங்கள் சகோதரர்கள் என்று இதுகாறும் வலியுறுத்தி வந்தவர்கள் திடீரென்று மொழியால் ஒன்று இனத்தால் வேறு என்று குரல் எழுப்பினார்கள்.

இப்படியான கேள்விகள் தமிழ் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் முஸ்லிம்களின் தனித்துவத்தையும் ஒற்றுமையான பங்களிப்பையும் இருட்டடிப்பு செய்யும் நோக்கத்தில் இருந்து எழுபவைதான். ஆயிரக்கணக்கான முஸ்லிம் இளைஞர்கள் தமிழீழ விடுதலை இயக்கங்களில் சேர்ந்திருந்த வரலாறு எல்லாவற்றையும் மறக்கடிக்கவைக்கும் முயற்சியின்றி இது வேறென்ன?

மேலும் அவர் :

* முஸ்லிம்கள் தங்களை ஓர் இனமென்று அடையாளப்படுத்தி – அதனையே அரசியல் சக்தியாகவும் மாற்ற வேண்டிய அவசரமும் ஏற்பட்டு விட்டது.

* முஸ்லிம் காங்கிரஸின் தோற்றம் அவசியமற்றது என்று தென்னிலங்கை முஸ்லிம்கள் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

* மொழியைப் பொறுத்தளவில் அதனை தங்களது அடையாளத்தின் ஓர் அம்சமாக அவர்கள் கருதியிருந்தால் மொழிப் போராட்டத்தின், போது முஸ்லிம்களின் பங்களிப்பு எப்படி இருந்தது என ஆராய வேண்டியதவசியம். இனிப் பிரதேசமும் தங்கள் அடையாளத்தின் ஓர் அம்சமெனக் கருதினார்களாயின் அதற்கான போராட்டமும் அவசியத்தையும் தவிர்த்து மத ரீதியில் மட்டும் தங்களை முதலில் அடையாளப்படுத்தியவர்கள் பின்பு இனரீதியில் அடையாளப்படுத்த எடுத்த முயற்சிதான் அதிக எதிர்ப்புகளைக் கொண்டு வந்தது. இதுவே பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்களுக்குக் காரணமாகலாம்.

மேற்படி கருத்துக்களின் ஊடாக தமிழ்த் தேசியத்தின் தூய்மையை அழகாகக் காப்பாற்றி அதேவேளை முஸ்லிம்களின் உரிமைக்கோரிக்கை மீதும் தனித்துவத்தின் வளர்ச்சி மீதும் சேறு பூசும் நோக்கம் அப்பட்டமாகத் தெரிகிறது. முஸ்லிம்களின் தனித்துவம் காலாகாலமாக பேரளவிற்கேனும் நிலைநாட்டப்பட்டு வந்த வரலாற்றுச் சம்பவங்கள் குழிதோண்டிப் புதைக்கப்படுகின்றன.

அ. 1965ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சி தீர்மானம்

ஆ. 1976 வட்டுக்கோட்டைத் தீர்மானம்

இ. 1988 ஆம் ஆண்டு முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி புலிகள் ஒப்பந்தம்.

ஈ. ஈ.பி.ஆர்.எல்.எப். அரசியல் அறிக்கை

உ. பி.எல்.ஓ.ரி. இன் பொலிட் பிறோ உறுப்பினர் ஒதுக்கீடு.

என்று முஸ்லிம்களின் தனித்துவமான ஒவ்வொருகட்டத்திலும் குறைந்தபட்சமேனும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்துள்ளது. இங்கு புதிதாக ஒன்றும் தனித்துவக் குரல் எழும்பவில்லையே. அது மட்டுமன்றி கிழக்கில் நடந்தேறிய பள்ளிவாசல் படுகொலைகளுக்கு தத்துவார்த்த விளக்கம் கொடுக்கும் அளவிற்கு புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமே முன்வரவில்லை. இங்கே தமிழ்மாறன் எவ்வளவு தூரம் பாஸிஸ்ட்டுகளின் தத்துவ ஆசிரியனாக தன்னை தயார்படுத்தியிருக்கிறார் என்பதை புரிய முடிகிறது. சிலவேளை தமிழ்மாறன் போன்றோர் இப்படியும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

* முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அஸ்ரப் 1976 ஆம் ஆண்டு தமிழீழ கோரிக்கைக்கு வித்திட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானத்தில் கலந்து கொண்டது எதற்காக?

* வித்தியாசமான மதகலாச்சாரப் பண்பாட்டு அம்சங்களை கொண்டிருந்த போதும் தமிழ்த் தேசியத்துடன் பின்னிப் பிணைந்திருந்த முஸ்லிம்களை உதாசீனப்படுத்தி அவர்களின் தனித்துவத்தை மறுதலித்து ஒற்றுமை உணர்வை சீர்குலைத்தது விடுதலை இயக்கங்கள் அன்றி வேறு யார்?

என்பன குறித்து மௌனம் சாதித்து இவர் சொல்ல வருவது என்னவென்றால், தமிழ்த் தேசியமானது தேவையின் அடிப்படையில் எழுந்தது. முஸ்லிம் தேசியமானதோ தேவையற்றது. இதற்காக அவர் முன்வைக்கும் கேள்விகள் பின்வருமாறு: "இலங்கை முஸ்லிம் என்ற அடையாளத்தின் கீழ் தமிழ் மொழியின் நிலைமை என்ன?" இக்கேள்வியை வலுப்படுத்த அவர் ராசிக் பரிட் என்ற (இறந்துபோன) தென்னிலங்கை முஸ்லிம் அரசியல்வாதி ஒருவரை சாட்சிக்கு அழைக்கிறார். காரணம் அந்த ராசிக் பரிட் இலங்கை சிங்கள தேசியக் கட்சிகளின் சார்பில் செயற்பட்டவர். ஆனால் அவர் முழுக்க முழுக்க பிரதிநிதித்துவப்படுத்தியது தென்னிலங்கை முஸ்லிம்களையே என்பதையும் அப்போதெல்லாம் வடகிழக்கின் பெரும்பான்மையான முஸ்லிம்கள் தமிழரசுக் கட்சியுடனே

→ 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முஸ்லிம் தேசம் X தமிழ் பாசிஸ்டுகளின் ....

ஒன்றித்து இருந்தனர் என்பதையும் ஏனோ கவனத்தில் எடுக்கவில்லை. போட்டியின்றியே யாழ். மாநாகர முதல்வராக ஒரு முஸ்லிம் தெரிவு செய்யப்படும் அளவிற்கு வடகிழக்கு முஸ்லிம்கள் தமிழர்களாகவே தங்களை அடையாளப்படுத்தியிருந்தனரேயன்றி ராசிக் பரிட் போன்ற தென்னிலங்கை முஸ்லிம் தலைமைகளின் கீழ் அணிதிரண்டிருக்கவில்லை. அந்தக் காலத்துக்கும் சமகாலத்துக்கும் இடையே இலங்கை முஸ்லிம்களின் அரசியல் அபிலாசைகளையும் அவற்றை நெருக்கடிக்குள்ளாக்கக் கூடிய புற அரசியற் செயற்பாடுகளையும் கண்டுகொள்ளாது கடந்த கால முஸ்லிம் தலைமையொன்றின் அரசியல் வரலாற்றை மாறாத ஒற்றைப் போக்காக பார்ப்பதும், இலங்கை எங்கும் பரந்து வாழும் எல்லா முஸ்லிம்களுக்கும் பொதுமைப்படுத்துவதும் எப்படிச் சரியானதாய் இருக்க முடியும்? இன்று ஒரு லட்சம் முஸ்லிம்கள் குடிபெயாக்கப்பட்டு தென்னிலங்கை எங்கும் அகதிகளாக அலைந்து திரியும் நிலையில் கிழக்குப் பள்ளிவாசல்கள் மீது நூற்றுக்கணக்கான படுகொலைகள் நிகழ்த்தப்பட்ட பின்பும் இவை அனைத்துக்கும் தமிழ்த் தேசியமே காரணமாய் இருக்கின்ற நிலையிலும் கிழக்கு முஸ்லிம்களுக்கென ஒரு பலமிக்க தலைமையாக முஸ்லிம் காங்கிரஸின் உருவாக்கம் அவசரமானது என்றும், "இலங்கை முஸ்லிம்கள்" என்ற அடையாளத்தில் தமிழ் மொழியின் நிலைமை என்னவென்றும் குத்தகை மனப்பான்மையில் பேசும் தமிழ் மாறன் சிலவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். தனிச் சிங்களச் சட்டத்துக்கு எதிராக 1956 இல் கடும் கண்டனங்களை வெளியிட்டு தனது கட்சியில் இருந்தே வெளியேறிய ஏ.எம்.ஏ.அஸீஸ் போன்றோர் முஸ்லிம்கள் இன்றி வேறுயார்?

குறித்தவொரு மொழியின் ஊடாகத்தான் ஒரு தேசிய இனம் தன்னை அடையாளப்படுத்த முனையவேண்டும் என்பது அன்றைய சோவியத் சூழ்நிலைகளுக்கேற்ப ஸ்ராலின் சொன்ன வரையறைகளே தவிர இது எக்காலத்துக்கும், உலகின் எந்த மூலைக்கும் பொருந்தக்கூடிய பொன்மொழியல்ல. இப்படியான தேசிய இன அடையாளங்கள் குறித்து நிரந்தரக் கோட்பாடுகளை கார்ல்மார்க்சோ, லெனினோ எக்காலத்திலும் முன்வைக்கவில்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இன்று இலங்கை முஸ்லிம்களின் தேசியக் குரலுக்கு ஒரு மொழிமட்டும்தான் அடையாளம் தருவதாக இருக்க வேண்டும் என்று யாரும் நிர்ப்பந்திக்க முடியாது. அதேவேளை தமிழ்த் தேசியப் பெருங்கதையாடல்களுக்குள் அடங்க மறுத்து தன் மதத்தினூடு அடையாளம் கொள்ளும் முஸ்லிம் தேசியமானது தமிழைத் தனது மொழி அடையாளமாகக் கொள்ளக்கூடாது என்றும் யாரும் வற்புறுத்த முடியாது. ஏதோ ஓர் அடையாளம் அவர்களின் அரசியல் வெளிப்பாடுகளினூடாகத்தன்னை முன்னிறுத்தும் போது ஓர் சமூகக் குழுவானது அவ்வடையாளத்தின் பெயராலே இனம் காணப்படுகிறது. அல்லது எந்த ஒரு அடையாளத்தின் பேரில் குறித்த சமூகக் குழுவொன்றின் மீது ஆதிக்கம் செலுத்தும் வண்ணம் அரசினாலோ அன்றி, அதிகாரக் குழுக்களினாலோ அடையாளம் காணப்படுகின்றதோ அந்த அடையாளத்தின் ஊடே அச்சமூகத்தை ஓர் தேசிய இனமாக நாம் இனம்காண வேண்டும்.

இவ்வகையில்தான் இலங்கை முஸ்லிம்களை தமிழ்த் தேசியம் தன்னிலிருந்து வேறுபடுத்த, தமிழினத்தை சுத்திகரிக்க எதை முன்னிறுத்தியது என்றால் அது அவர்களது மதத்தையேயாகும். (வடக்கு முஸ்லிம்கள்) குறிப்பாக 1000 ஆண்டு வரலாற்றைக் கொண்ட தமிழையே தாய்மொழி யாக, தமிழையே மூச்சாக கொண்டிருந்த போதும் அவர்கள் பின்பற்றியது இஸ்லாம் என்கின்ற ஒரே காரணத்துக்காக 24 மணிநேர அவகாசத்தில் உடுத்த துணியோடு வடக்கை விட்டுத் துரத்தப்பட்டனர். அப்படியிருக்க இந்தியாவில் இருந்து வெளியாகும் ஆறாந்திணை என்கிற இன்ரநெட் சஞ்சிகையில் வ.ஐ.ச.ஜெயபாலன் சொல்லியுள்ளதை கீழே பார்க்கலாம்.

இலக்கியச் சந்திப்புக்களில்தான் அழுது புலம்புகிறார் என்றால், பேட்டியிலும் இப்படி அறளை பேர்ந்து புலம்பியிருக்கிறாரே.

* "மாநிலத்தின் விடுதலைக்காகப் போராடுபவர்கள் தமிழர்களையும் முஸ்லிம்களையும் வென்றெடுக்க வேண்டும்."

* "ஆனால் அத்தகைய இணைந்த போராட்டத்தை முன்வைப்பதில் தமிழ் அமைப்புகள் தோல்வி கண்டிருக்கின்றன."

தமிழ் அமைப்புகளின் தோல்விக்காக அழும் தமிழ்த் தேசியவாதி ஜெயபாலன் முஸ்லிம்களுக்கு நடந்த எத்தனையோ மனித உரிமை மீறல்கள் குறித்து இப்போட்டியில் வாய்திறக்கவில்லை. ஆனால் முஸ்லிம்களின் தலைமை குறித்து இப்படிச் சொல்கிறார்...

ஒற்றுமை என்பது ஒன்றில் ஒன்றைக் கரைத்து விடுவதல்ல. ஒவ்வொரு இன சமூகக் குழுக்களினதும் தனித்துவங்களை மதித்து ஒன்று சேர்வது. அது தங்கள் உயிர்களுக்கே பாதுகாப்பற்ற நிலையில் இருப்பு என்பதே.

* "முஸ்லிம்கள் சிதறியிருக்கிறார்கள். அவர்களுக்குள்ளே இணைப்பை ஏற்படுத்துவது சாதாரண முஸ்லிம்களின் கையில் இல்லை. அதற்கான அமைப்பும் அவர்களிடத்தில் இல்லை."

இங்கேதான் காலாகாலமாக முஸ்லிம்களையும் கிழக்குத் தமிழர்களையும் தொடர்ந்து ஏமாற்றி வருகின்ற யாழ். வேளாள மேட்டுக்குடி சித்தாந்தத்தின் நீட்சியாக வ.ஐ.ச.ஆஜராகின்றார். தங்களைத் தவிர யாராலும் தலைமை என்கின்ற பொறுப்பை ஏற்க முடியாது. நானே விடுதலை, நானே ஒளி, நானே சொர்க்கம் அனைத்துக்கும் வழிகாட்டி நானே என்கிற சுவிசேஷ பாணியில் கடை விரிகின்றார். ஏன் முஸ்லிம்களுக்கான ஓர் தேசிய குரலாக முஸ்லிம் காங்கிரஸையும் இன்னும் பல முஸ்லிம் அமைப்புக்களையும் தமிழ்மாறனைப் போல் இருட்டிப்புச் செய்ய வேண்டும். 1986 இல் இருந்து முஸ்லிம் காங்கிரஸின் உதவியுடன் தேசிய ரீதியில் அணிதிரண்டிருக்கும் லட்சக்கணக்கான முஸ்லிம்களை அவமதிப்பதன் நோக்கம் என்ன? முஸ்லிம்களின் அரசியல் செயற்பாடு குறித்து மௌனம் சாதிப்பது அன்றி மட்டம் தட்டுவது என்றவாறாக செயற்பட்ட சே. பொன். இராமநாதன் செய்ததற்கும் இன்று தமிழ்மாறன், ஜெயபாலன் போன்றவர்களின் செயற்பாட்டுக்கும் என்ன வித்தியாசம், தொடர்ந்து அது சிறு பிரச்சினை சமாளிக்கலாம் என்றவாறு கூறிச் செல்வது நீங்கள் தமிழர்கள் அல்ல தமிழர் என்பது சைவர்கள் மட்டுமே என்று செயலில் காட்டிய புலிகளின் கொடூரங்களை மறைத்து அதன் பின்பு தங்களை ஓர் முஸ்லிம்கள் என்ற அடையாளத்தின் கீழ் தனித்துவம் மிக்க ஓர் சமூகக் குழுவாக, சிறுபான்மைத் தேசிய இனமாக உணரத் தொடங்கிய முஸ்லிம்களை, அவர்களின் நியாயமான தேசியக் கோரிக்கைகளை மறுத்து மீண்டும் ஒருமித்த தமிழீழக் கதையாடல்களுக்குள் பயன்படுத்தத் துடிக்கும் பிற்போக்கான தமிழ்த் தேசியத்தின் புத்திஜீவியப் பணியைத்தான் இவர்கள் செய்து வருகிறார்கள். தங்களது அடையாளங்களை காப்பாற்றிக் கொள்ளத் துடிக்கும் ஓர் சிறுபான்மை இனத்தின் கோரிக்கைகளையும் அபிலாசைகளையும் அங்கீகரித்தவாறு உருவாகும் ஒற்றுமை வேறு, அச்சிறுபான்மை இனத்தினரை மூன்றாம்தரப் பிரஜைகளாக, எடுப்பார் கைபிள்ளைகளாகப் பாவித்து தமது தமிழ் தேசிய முகமூடிக்குள் அமிழ்த்தி உருவாகும் ஒற்றுமை வேறு என்பதை நான் ஜெயபாலனுக்கு சொல்லித் தரவேண்டியிருப்பது இன்றைய காலத்தின் கட்டாயம்.

இவர் சொல்ல வருகின்ற இன ஒற்றுமை என்பது அவர்கள் கருத்தில் ஒடுக்கப்பட்ட முஸ்லிம் சிறுபான்மை தேசிய இனத்தின் மீது இழைக்கப்பட்ட கொடுமைகளை மறைத்து விட்டு அல்லது மறக்கச் செய்து விட்டு மீண்டும் ஒரு படிநிலை ஏற்றத் தாழ்வுகளை ஏற்றுக் கொண்ட ஒற்றுமையாகத்தான் இருக்கிறது. மாறாக முஸ்லிம்கள் மீது நடாத்தப்பட்ட அநீதிகளுக்கு மன்னிப்புக் கோரலோ, சுய விமர்சனமோ இன்றி இப்படியான புத்திஜீவிகளால் கட்டியமைக்கப்படும் ஒற்றுமை யாழ்ப்பாணத்து சைவ, வேளாள மேலாதிக்கத்தை தமிழ்மொழி பேசும் மற்றய சமூகக் குழுக்கள் மீது தொடர்ந்து மேலாட்சி செலுத்த வழிபண்ணுகின்ற ஒற்றுமைதான். இல்லாவிடின் இஸ்லாமியர் என்கின்ற முஸ்லிம்களின் தனித்துவங்களை அங்கீகரிக்க வழிபண்ணுவதே ஜனநாயகத்தின் அடிப்படையாக இருக்க முடியும். நட்ட ஈடுவழங்குவதிலும் என்றவாறாக மனந்திரும்புதல்களின் அடையாளங்களை செயற்படுத்த வேண்டுமேயன்றி நடந்தவற்றை மறைத்து விட்டு அல்லது சிறுபிரச்சினையாக்கிவிட்டு இனங்களை ஒன்றாக்க முயல்வது இது தமிழர்களை நோக்கி சிங்கள இனவாதிகள் பேசுகின்ற "இலங்கை மக்கள்" என்கின்ற ஒற்றுமைதான். இது மென்மேலும் அடக்குமுறைக்கும், இன மேலாதிக்கத்துக்கும் மட்டுமே வழிவகுக்கும்.

புலிகள் நாளை இல்லாமல் போகலாம். ஆனால், இவ்வித தமிழ்ப் பாசிச கருத்துக்களை சுமந்து திரியும் மனிதர்களால் நிரம்பியிருக்கின்ற தமிழ் தேசியத்தின் இன்றைய சூழல் இன்னும் இன்னும் அதிகமாக பல பாசிஸ்ட்டுகளை உருவாக்கி விடும் அளவிற்கு ஆபத்து நிரம்பியதாய் உள்ளது.

ஜெயபாலன் தனது பேட்டியில் அடிக்கடி சிங்கள அரசை மட்டுமே எதிரியாக நிலை நிறுத்துகின்ற போலி அரசியலானது தமிழர்களிடையே ஒடுக்கப்பட்ட முஸ்லிம்களை ஏமாற்றி இன்று தமிழ் தேசியம் மையம் கொண்டிருக்கின்ற யாழ்ப்பாணிய சைவ வேளாள ஆதிக்கப் பிரிவினரின் கரங்களிலே மீண்டும் மீண்டும் அதிகாரத்தைக் குவிப்பதற்கு வழிகோலும்.

இது மற்றையவற்றின் அதாவது சிறுபான்மை முஸ்லிம்களின் அடையாளங்களை மறுதலிக்கின்ற போக்கு. இவ்வகையில் மதஸ்தலங்களை தாக்கி ஓர் சமூகத்தையே பிய்த்தெறிந்து அதன் எதிர்காலத்தையே சூனியமாக்கிவிட்ட நிலையில் அவற்றை மறைத்துவிடுவதும் மறக்கச் செய்வதும் அல்லது நியாயப்படுத்துவதுமான செயற்பாடுகள் புத்திஜீவித மட்டத்தில் இன்னும் இருப்பதானது, முஸ்லிம் தேசத்தின் குரலை அங்கீகரிக்க மறுப்பதோடு தமிழ்த் தேசியத்தின் பாசிசக் கூறுகளுக்கு ஒருவகை செவ்வியல் நெறிப்படுத்தலையே கட்டியமைக்கும் செயலைச் செய்து வருகிறது. ஆனால் இவை அனைத்தையும் மீறி தமிழ் பாசிஸத்தின் பிடியில் இருந்து முஸ்லிம் சமூகம் தன்னை விடுவிக்கும் காலம்வரும். அன்று முஸ்லிம் தேசம் தனது தலைவிதியை தானே தீர்மானிக்கும். அது காலத்தின் கட்டாயம்.

# முஸ்லிம் குரலின் முதலாவது ஆசிரியர் தலையங்கம்!

*நமக்கான பத்திரிகைகளின் அவசியம் குறித்தும், பத்திரிகைகளின் தொடர் வருகை குறித்தும் மீள நமது சமூக சக்திகளுக்கு ஞாபகமூட்டவே முதலாவது ஆசிரியர் தலையங்கத்தை மீள் பிரசுரம் செய்கிறோம்.*

## நமது மக்களுடன் பேசுகிறோம்!

*பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர் ரஹீம்*
*"எல்லாப் புகழும் இறைவனுக்கே"*

இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் "முஸ்லிம்களுக்கான" பத்திரிகைகளின் அவசியம் அன்று தொட்டு இன்று வரை எல்லோராலும் உணரப்பட்டே வருகின்றது. 1832 இல் அறிஞர் சித்திலெப்பையின் "முஸ்லிம் நேசன்" பத்திரிகையுடன் நமது முஸ்லிம்களுக்கான பத்திரிகையின் வரலாறு செம்மையாக ஆரம்பிக்கின்றது.

சைபுல் இஸ்லாம் (1890 - அ.அப்துர் ரகுமான்) இஸ்லாம் மித்திரன் (1893 - எல். எம். உதுமான்), முஸ்லிம் பாதுகாவலன் (1900 - ஐ. வே. ம. அப்துல் அசீஸ்) மிஸ்பாருள் இஸ்லாம் (1906 - முகம்மது காசிம் ஆலிம்) முஸ்லிம் (1908 - ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ்), இஸ்லாம் (1920 - யூஸுப் ஆலிம்), தினத் தபால் (1928 - க.அ.மீராமுகையதீன்) ஆகியனவும், இன்னும் முஸ்லிம்களுக்கான சில பத்திரிகைகளும் சுதந்திரத்திற்கு முந்திய இலங்கையில் நமது பத்திரிகை வரலாற்றில் வெளிவந்துள்ளன.

இப்பத்திரிகைகளின் பிரதான நோக்காக முஸ்லிம்களின் கல்வியும், மத, கலாசார மறுமலர்ச்சியுமே அன்று இருந்துள்ளது. இலங்கையின் ஆரம்பகாலப் பத்திரகைகளின் வரலாறும், மத, கலாசார மேம்பாட்டை நோக்காகக் கொண்டதாகவே இருந்துமுள்ளன. இதனையொட்டியே முஸ்லிம்களுக்கான பத்திரிகைகள் வெளிவந்துமுள்ளன.

சுதந்திரத்திற்கு அண்மிய காலப்பகுதியில் இலங்கை மக்களிடையே ஏற்பட்ட அரசியல், சமூக, விழிப்புணர்ச்சியின் காரணமாக, அந்தந்த சமூகங்களின் அரசியல் பொருளாதார, கலாசார பண்பாட்டு அடையாளங்களை நிலை நிறுத்துவதற்காகவும் அத்தளங்களில் எதிர்நோக்கும் சவால்களை எதிர்கொள்வதற்காகவும் சமூகப் பொருளாதார கலாசாரத் தளங்களில் பத்திரிகைகள் புதிய வடிவம் பெற்று வெளிவரத் தொடங்குகின்றன.

முஸ்லிம் நேசனில் தொடங்கி இன்று வரை, முஸ்லிம்களுக்குள் காலத்துக்குக் காலம் பத்திரிகைகள் வார, இருவார, மாத இதழ்களாக வெளிவருவதும் சொற்ப ஆயுளில் மறைந்து விடுவனவாகவுமுள்ளன. முஸ்லிம் நேசன் பத்திரிகை மட்டுமே தொடர்ச்சியாக 1832 இல் தொடங்கி 1898 வரையான 66 ஆண்டுகள் வெளிவந்துள்ளன. இவ் அறுபத்தி ஆறு ஆண்டுகால முஸ்லிம் நேசனின் சாதனைகளில் மிகப் பிரதானமானது அன்றைய சட்ட நிருபண சபையில் முஸ்லிம்களை, முஸ்லிம்கள் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட அரசியல் முயற்சியாகும் என ஆய்வாளர்கள் மதிப்பிடுகின்றனர்.

இந்த உண்மையையும் பணியையும் பங்களிப்பையும் நமது "முஸ்லிம் குரலின்" முதலாவது ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடுவதற்கு சமகால முக்கியத்துவமிக்க காரணமுள்ளது. மக்களுக்கும் பத்திரிகைகளுக்குமிடையிலான உறவும், மக்களின் வாழ்நிலை இருப்பில் பத்திரிகைகளின் பாத்திரம் குறித்த இன்றியமையாத் தேவையையும் நாமனைவரும் நன்கு அறிந்துள்ளோம். இந்நிலையில் முஸ்லிம்களின் பத்திரிகை வரலாற்றையும் அதற்கான பாத்திரத்தையும் இன்று நமக்கான தொடர்ச்சியான வருகைத் தளத்தில் பத்திரிகைகள் இல்லாத நிலையையும் தொட்டுக் காட்டத்தான் இவ்விடயத்தை இங்கு குறித்துரைக்கின்றோம்.

இலங்கையில் இன்று தமிழில் வெளியாகும் பத்திரிகைகள் - முஸ்லிம்களின் பத்திரிகை வரலாற்றின் 100 ஆண்டுகளின் பின்தான் தோற்றம் பெற்றுள்ளன. வீரகேசரிப் பத்திரிகை 1930 களிலும், தினகரன் பத்திரிகை 1932 களிலும் தொடங்கப்பட்டுள்ளன. இப்பத்திரிகைகள் இன்றுவரை வெளிவந்து கொண்டிருக்கின்றன. இலங்கையின் தமிழ்ப் பத்திரிகை உலகுக்கே முன்மாதிரியாக இருந்த முஸ்லிம்களின் பத்திரிகை வரலாறு, இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின், மிக மோசமான பின்னடைவைக் கண்டுள்ளதைக் காண்கிறோம்.

தமிழ் மொழியை தாய் மொழியாகவும், கல்வி மொழியாகவும் கொண்டுள்ள கணிசமான முஸ்லிம் மக்கள் மத்தியில் முஸ்லிம்களுக்கான பத்திரிகைகளின் அவசியம் குறித்து முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள், செயற்பாடுகள் பெருமளவில் தோல்வியில்தான் முடிந்திருக்கின்றன. நமது மக்களின் சமூக, அரசியல், பொருளாதார, கலாசார பிரச்சினைகளையும் நமது மக்கள் மீதான நெருக்கடிகளையும் நமது ஆன்மாவாக நின்று பிரதிபலிக்கும் பத்திரிகைகளை தொடர்ச்சியாக வெளிக் கொண்டு வருவதில் நமது சமூக சக்திகள் பல்வேறு தடவைகள் முயற்சிகள் எடுத்த போதும் அவை செம்மையாக கைகூடவில்லை.

முன்னெப்போதுமில்லாத வகையில் சமகாலத்தில் - இலங்கை வாழ் முஸ்லிம்கள் பெரும் சவால்கள், அடக்குமுறைகள், நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். அரசியல் அதிகாரம், நிர்வாக அதிகாரம், தகவல் தொடர்புச் சாதனத் துறை போன்றவற்றில் காணப்படும் பிற இன மேலாதிக்கம், முஸ்லிம்களுக்கு எதிரான திட்டமிட்ட திரிபுவாதம் நமது மக்களை மிக மோசமாக நசுக்கி வருகிறது. பொய்களையும் புனைவுகளையும் உண்மைகளாகக் காட்டி, நமது மக்களை கைசேதத்துக்குள் தள்ளும் திட்டமிட்ட செயற்பாடுகள் நீண்ட காலமாய் அரங்கேற்றப்பட்டு வருகின்றன.

முஸ்லிம்களுக்கு இந்த நாட்டில் நியாயமாக உரித்தாக வேண்டிய நியமங்கள் மீது பெரும் புறக்கணிப்புகள் காட்டப்படுகின்றன. எடுப்பார் கைப்பிள்ளைகளாகவும் கறிவேப்பிலைக ளாகவும் பயன்படுத்தப்படும் நிலை தொடர்கிறது. நமது மக்களுக்கு இழைக்கப்படும் பெரும் அநீதிகளை தட்டிக் கேட்பதற்கான உரித்தையும் பல்வேறு வழிகளில் தடுத்தும் - திசை மாற்றியும் விடுவதற்கான கபடத்தனம் அரங்கேற்றப்படுகிறது. இவைகள் புறச் செயற்பாடுகளாக நமது சமூகத்தை நசுக்கும் அதேவேளை நமது சமூக அகநிலையில் மிக மோசமான நிலைமைகளை நாம் எதிர்கொள்ள வேண்டியுமுள்ளது.

ஊழல், அதிகார துஷ்பிரயோகம், மக்களை தொடர்ச்சியாக ஏமாற்றும் அரசியல் தலைமைகள், திட்டமிடப்படாத நிர்வாகம், பதவிகளுக்கான போட்டா போட்டியும் சீரழிவும், கற்றவர்கள் புத்திஜீவிகள் மத்தியில் உறைந்து போயுள்ள மௌனம், எதிரே நம்மைச் சூழ்ந்திருக்கும் ஆபத்தை உணரத் தவறும் அவலம், கட்டி இறுகிப் போயுள்ள பிரதேசவாதம், மிக மோசான அரசியல் வங்குரோத்துத்தனம், தவறுகளுக்கும் காட்டிக் கொடுப்புக்கும் துணை போகும் இரண்டக நிலை, ஆளுமைமிக்க தலைமைத்துவமின்மை, இத்தியாதி... என நமது சமூக நிலை இன்று உள்ளது.

வெளியிலிருந்தும் நமக்குள்ளும் நாம் முகம் கொள்ளும் இச்சவால்களை எதிர்கொள்வதற்கு நமது மக்களை, நமது சமூக சக்திகளை உடனடியாகத் தயார் பண்ண வேண்டியுள்ளது. இப்பாரிய பணியினை முன்னெடுப்பதற்கான உந்துதலை நமது மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கு நமக்கான பத்திரிகைகள், மக்களின் அணிதிரட்டல்கள், கலந்துரையா டல்கள், விவாதங்கள், அமைப்பாக்கம் பெறல், மாற்றுக் கருத்துக்களின் உருவாக்கம், சமூக நலன் நின்ற விமர்சனம் என பல்வேறு செயற்பாடுகள் நடைபெற வேண்டியுள்ளன.

இப்பெரும் பணியின் ஒரு சிறு துளியைச் செய்வதுதான் "முஸ்லிம் குரலின்" பிரதான நோக்கமாக உள்ளது. இப்பணிகளைச் செய்ய முன்வருவோர்களை நாம் ஆதரித்துப் பலப்படுத்தத் தயாராக இருக்கின்றோம். நமது மக்களைத் தொடர்ந்தும் அடிமைச் சகதிக்குள்ளும் இருட்டினிலும் வைத்துக் கொண்டிருக்கும் சக்திகளுடன் நமது சமூகத் தளத்தில் நின்று விவாதங்களைத் தொடரவும்; மக்கள் நலனுக்காக உழைப்பதற்கு அவர்களைத் தயார்படுத்தவும் வேண்டியுள்ளது. தனி நபர்களை - அமைப்புகளை, கட்சிகளை ஆதரிப்பது என்பதை விட சமூக நலனில் நின்று அவர்களது கருத்துக்களையும் அவர்களது செயற்பாடுகளையும் ஆதரித்து பலப்படுத்துவதும், தவறுகளை நியாயமிக்கதும் சிநேகபூர்வமான விமர்சனங்களுடன் திருத்திக் கொள்வதற்கான மக்கள் அழுத்தங்களை ஏற்படுத்துவதும் இன்று செய்யப்பட வேண்டிய முக்கிய பணிகளாக உள்ளன.

"முஸ்லிம் குரல்" நமக்கான பத்திரிகை என்பதை நீங்கள் அனைவரும் உணர்வீர்கள். இப்பத்திரிகையை வெளியிடுவதற்கான உந்துதலை நமது மக்களிடமிருந்துதான் நாம் பெற்றுள்ளோம்.

நமது மக்களின் நீண்டகால அபிலாசை, தவிப்பு, எதிர்பார்ப்பு என இதுகாலவரை நமக்கான பத்திரிகை மீது குவிந்திருந்த மன உணர்வுகளின் வெளிப்பாடே "முஸ்லிம் குரலின்" பிரசவமாகும். நாம் எந்தக் கட்சிக்காகவும், எந்த அமைச்சர்களுக்காகவும், அவர்களின் அதிகாரத்திற்காகவும் செல்வாக்குகளுக்காகவும் முண்டு கொடுத்து எழுதமாட்டோம் அது எமது பணியுமல்ல நாம் எமது மக்களுக்காகவே எழுதுவோம்!
ஆகவே நமது மக்களே! நீங்கள் உங்கள் கருத்துக்களை, சிந்தனைகளை சுதந்திரமாகவும், அரசியல் தெளிவுடனும் நமது மக்கள் முன் எழுதுங்கள். நாம் எதிர்கொள்ளும் அனைத்து சவால்களையும் முகம் கொள்வதற்கான மனோதிடமும் வல்லமையும் மக்களாகிய உங்களிடமே உள்ளது. அந்த வல்லமையை ஒன்று திரட்டி மக்கள் கருத்தாக வெளிப்படுத்துவதே நமது இலக்காகும்.

நாம் இந்த இலக்கை நோக்கி பயணிப்பதற்கு எல்லாம் வல்ல இறைவன் துணைபுரிவானாக! ஆமீன்!

*தோழமையுடன்*
*பிரதம ஆசிரியர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணமாகி 15 தினங்களில் பிணமான மணப்பெண்



திருமணம் முடித்து ஊர் சென்ற கணவன் திரும்பிவரவில்லை என்று தேடிச் சென்ற மனைவி கணவனால் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். புத்தளம் குறிஞ்சிபிட்டியவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கஷூர்ஜமான் பதிலா உம்மா (வயது 23) என்ற பெண் புத்தளம் - கற்பிட்டி குறிஞ்சிபிட்டி பகுதியைச் சேர்ந்த ஜெயினுலாப்தீன் முகம்மது நவ்பி என்பவரை கடந்த 2003.04.15 ஆம் திகதி திருமணம் செய்துள்ளார்.

மூன்று ஆண்களையும் மூன்று பெண்களையும் கொண்ட இக்குடும்பத்தில் ஆறாவது பெண் இவர். ஏனையோர் யாவரும் ஏற்கனவே திருமணமாகி விட்டனா.

சிறு வயதில் தந்தை குடும்பத்தை விட்டு பிரிந்ததால் தன் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை தானே தேடிக்கொள்ள வேண்டிய நிலையில், பல தடவைகள் வெளிநாடு சென்று திரும்பிய இப்பெண், இறுதியாக ஏப்ரல் 10ஆம் திகதி மூதூர் வரும்போது மேற்படி நபரையும் கூடவே அழைத்து வந்து அவரையே திருமணம் செய்து தருமாறும் இல்லை என்றால் அவருடனே சென்று விடப் போவதாகவும் அவரது தூண்டுதலுடன் வற்புறுத்தியதை அடுத்து, குடும்பத்தினர் எவருடைய விருப்பமுமின்றி இளைய சகோதரனால் திருமணம் முடித்துக் கொடுக்கப் பட்டுள்ளாா.

திருமணம் செய்து சில தினங்களில் மீண்டும் வெளிநாடு செல்ல கடவுச் சீட்டுப் பெற கொழும்பு சென்ற தம்பதியினர் ஏப்ரல் 25 ஆம் வீடுதிரும்பினர். மறுநாள் நவ்பி புத்தளம் சென்றுள்ளார். மறுநாளே திரும்பி வருவதாகச் சென்ற கணவர் நாட்கள் பல ஆகியும் திரும்பாததால் மே முதலாம் திகதி புத்தளத்திற்கு கணவரைத் தேடி சென்றுள்ளார் மனைவி. காலையில் மூதூரில் இருந்து புறப்பட்ட இப்பெண் புத்தளம் குறிஞ்சிப்பிட்டியிலுள்ள தனது கணவரின் வீட்டை சென்றடைய இரவு பதினொரு மணியாகி விட்டது. புத்தளம் கற்பிட்டியில் இருந்து குறிஞ்சி பிட்டியவுக்கு முச்சக்கர வண்டியில் செல்லுகையில், துணையேதுமின்றி தனியாக வந்த இப்பெண்ணின் பயண நோக்கம் பற்றிக் கேட்டறிந்த சாரதி இவ்வேளையில் அவ்வீட்டுக்குச் செல்ல வேண்டாம் எனவும் அவனும் அவனது குடும்பத்தினரும் நல்லவர்களில்லை எனவும் கூறியதைப் பொருட்படுத்தாது அவர் தனது கணவர்தான் எனக் கூறி, தான் அங்கேயேதான் செல்லப் போவதாகவும் உறுதியாகச் சொன்னதை அடுத்து, அப்பெண்ணின் மூதூர் முகவரி தொலைபேசி இலக்கம் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொண்டு நவ்பியின் வீட்டில் கொண்டுபோய் சேர்த்துள்ளார் அச்சாரதி.

அங்கு அவ்வேளை எதிர்பாராத விதமாக மூதூர் மனைவியைக்கண்ட கணவருக்கும் ஏற்கனவே திருமணம் செய்து பிள்ளைகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் நவ்பியைக் கண்ட பதிலா உம்மாவுக்கும் இடையில் வார்த்தைகளால் ஆரம்பமான தாக்கம் கொலையில் முடிந்துள்ளது. பெண்ணின் அலறல் சத்தம்கேட்டு பார்க்கச்சென்ற அருகிலுள்ளவர்கள், அது எமது குடும்பச் சண்டை அதில் தலையிட வேண்டாம் என்று எச்சரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

கணவருடன் குடும்பத்திலுள்ள அனைவரும் சேர்ந்து தாக்கி அணிந்திருந்த ஆடை ஒன்றினால் கழுத்தை இறுக்கி கொலை செய்துள்ளனர். கொலை செய்தபின் சடலத்தை புதைத்து - சம்பவத்தை மறைக்க தோண்டிய குழியில் நீர் வர மற்றொரு குழி தோண்டி முடிக்கமுன் பொழுது புலர அருகிலுள்ள வாவியில் வீசிவிட்டு, கற்பிட்டி பொலிஸ் நிலையம் சென்று "மூதூரிலிருந்து வந்த எனது மனைவியை முச்சக்கரவண்டிச் சாரதி கொலை செய்து விட்டு வாவியில் போட்டுள்ளார். இன்று சடலம் மிதக்கிறது. என்றும் முறைப்பாடு செய்துள்ளனர். மே 02 ஆம் திகதி 10 மணிக்கும், 1 மணிக்கும் பெண்ணின் இரு சகோதரர்களிடமும் நேற்று வீட்டுக்கு வந்த மனைவி காலையிலேயே மூதூர் திரும்பிவிட்டதாகத் தொலை பேசியில் தெரிவித்துள்ளார்.

இதே வேளை முச்சக்கர வண்டிச் சாரதியை விசாரித்த பொலிஸார் பெற்றுக் கொண்ட தகவல்களை ஆதாரமாக கொண்டு நவ்பியையும் குடும்பத்தினரையும் கைது செய்ததுடன் சடலத்தையும் மீட்டனர். மாலை 5 மணிக்கு மூதூருக்கு சகோதரனுக்கு சகோதரி இறந்துவிட்டார் தேவையான ஆவணங்களுடன் வரும்படி தகவலும் கொடுத்துள்ளனர்.

பொலிஸாரின் தகவலை அறிந்த சகோதரன் விவாகப்பதிவு மற்றும் தேவையான ஆவணங்களுடன் 3ம் திகதி புத்தளம் சென்று 4 ஆம் திகதி காலை கற்பிட்டி பெலிஸாரை சந்தித்ததுடன் சிலாவத்துறை வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த சகோதரியின் ஜனாஸாவையும் அடையாளம் காட்டியுள்ளார். பின்னர் அவ்வூர்மக்களின் ஆலோசனையுடன். ஜனாஸாவைக் கையேற்று அங்கேயே அடக்கம் செய்துள்ளார்.

தொடர்ந்து விசேட பொலிஸ் குழு ஒன்றின் மூலம் மேற்கொண்ட தீவிர விசாரணையை அடுத்து நவ்பி குற்றத்தை ஒப்புக்கொள்ள ஏனையோர் விடுவிக்கப்பட்டுள்ளனர். கைது செய்து கொலைக்குற்றம் சாட்டப்பட்டுள்ள நவ்பி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸ் மற்றும் நீதிமன்ற விசாரணைகளும் தொடர்கின்றன.

நவ்பி பொய், ஏமாற்று என்பவற்றின் மூலம் அப்பாவிப் பெண்களை ஏமாற்றி தவறான வழிகளில் பணம் சம்பாதிப்பவா. இவ்வாறு ஏமாந்த பல பெண்களைத் திருமணம் செய்து தேவையின் பின் கைவிட்டவா. தற்போதைய மனைவி கடத்திக் கொண்டுவரப்பட்டவா என்றும், பொலிஸ்காரர் ஒருவரின் முன்னாள் மனைவி என்றும், பதிலா உம்மாவுடன் நவ்பிக்கு பல வருடத் தொடர்புகள் இருந்துள்ளதாகவும் முன்னர் வெளிநாட்டில் இருக்கும் போது பெருந் தொகைப் பணம் அவருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் இப்பணத் தொடர்பே திருமணம், கொலை என்பவற்றிற்கு காரணம் எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

பதிலா உம்மாவின் குடும்பம் பரம ஏழை. திருமணம் நடந்த திகதி மூதூரில் கலவரம் நிலவிய காலம். நவ்பி அவற்றை தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு தன்னை பற்றிய எந்த உண்மைத் தகவலும் கொடுக்காது, தான் ஏற்கனவே திருமணம் செய்யாதவர் எனக்கூறி பதிலா உம்மவைத் திருமணம் செய்து சில நாட்கள் மத்ரஸா அகதிமுகாமிலும் புதுமணத் தம்பதிகளாகக் காலம் கடத்தியுள்ளனர்.

முன்பின் அறியாதவர்களை திருமணம் செய்துகொடுக்கும் பெற்றோர் மற்றும் மௌலவிகள் போன்றவர்களின் செயல் வன்மையாக கண்டிக்கத் தக்கது. முஸ்லிம் சமூகத்தில் இத்தகைய நிகழ்வுகள் இனிமேல் இடம் பெறாதிருக்க கதீப்மார்கள் சம்மேளனம் பள்ளிவாயல் என்பன முழுமையான கவனம் செலுத்த வேண்டும்.

**-இப்னு மன்சூர்-**

---

# பள்ளிமுனைக் கிராமத்தின் கதை

3 குறுநாவல்

-என்.ஏ.தீரன்-

## அத்தியாயம் 2

அடுத்த நாள் மாலை முத்து முஹம்மது மைமுனாவின் வீட்டுக்கு வந்த போது, சப்புச் சுல்தானும் மாமியும் பேசிக் கொண்டிருந்தனர். மைமுனா கதவருகில் பாதி மறைந்திருந்தாள். அவளது கையில் சப்புச் சுல்தான் கொணர்ந்திருந்த கடவுச் சீட்டு இருந்தது. அவளது மூன்று தங்கைகளும் முற்றத்தில் ஓடிப்பிடித்துக் கொண்டிருந்தனர். அங்கிருந்த ஒரே ஒரு நாற்காலியில் சப்புச் சுல்தான் மிகப் பந்தாவாக உட்கார்ந்திருந்தான். தம்பி யாசீன், அவனது இலக்ரோனிக் கைக்கடிகாரத்தை பார்த்து வாய் பிளந்திருந்தான். மாமி சொல்லிக் கொண்டிருந்தாள்.

"நா என்னய்ற? நாலு கொம்புளப்புள்ள.. நாலு ஊடு வளவு வேணும். புரிசன் ல்ல, ரெண்டு புள்ள கொமரு, என்னய்யச் செல்றாய்? மூத்தவள வெளிவ போக்காட்டி ஒரு ரெண்டு வரிசம் இருந்தாத்தான் ஒரு வளவாச்சிம் வாங்கி ஊட்டக் கீட்டக் கட்டிரலாம்... ஙா, வா! முத்துவம்மது! இப்பிடி இரிண்டாலும் கொமர வெளிநாட்டுக்கு அனுப்பினா... சனம் என்ன கதைக்கும்? காசிக்கி மானத்த விக்கிறாள் ண்டு..."

மைமுனா முத்த முஹம்மதுக்கு பாய் விரித்துக் கொடுத்தாள். பொங்கி வந்த கோபத்துடன் அமர்ந்த முத்து முஹம்மது. -

"சனம் என்ன கதைக்கிற? ஊர்ல காறித் துப்பும்." என்றான். உடன் சப்புச் சுல்தான் குறுக்கிட்டு -

"லெக்கா மாமி! எந்தப் பேயன் சென்ன வெளிநாட்டுக்குப் போனா மானம் போறண்டு? நீயும் ஒருக்கா சவ்திக்குப் போய் வந்தான. என்னயும் நடந்திச்சா? - நல்ல கௌரவமான ஊடுகள்ள "அவுஸ்மைட்டா" போனா நெல்ல காசி! நெல்ல வாசி!! நாணூறு றியால் சம்பளந் தருவான். சாப்பாடு, தங்குமிடம் "பிரீ". எலங்கக் காசி பத்தாயிரம் மட்டுக்கு வெரும்" சப்புச் சுல்தானின் வர்ணணையில் மாமி சபலப்பட்டுக் கொண்டிருப்பது முத்து முஹம்மதுக்குப் புரிந்து எரிச்சலாக இருந்தது. உடனே -

"மாமி! காசிக்கி சோட்டப்பட்டு பாள் கெணத்துல உழுந்துராத" என்றான் மைமுனாவுக்கும் சேர்த்து. சட்டென சப்புச் சுல்தான் குறுக்கிட்டு-

"லெக்கா மாமி! செல மாளிர மக்களுக்கு ஒரு மைரும் தெரியா. கதைக்கிற நாயள் ஒரு ஊடு கட்டித் தெருவாஹளா? ல்ல, ஒரு வளவுத் துண்டாச்சும் வாங்கித் தெருவாஹளா? பள்ளிமுனய உட்டா வேற ஒரு எடமும் தெரியாத கெணத்து தவளட மக்கள்ள கதய உடு! ஙா .... முத்து ம்மது! வந்துட்டியா! ப்பிடி இரி! என்றாப்பா ஒங்குட இசிலாங்கட்சி வெல்லுமா? பெரிசா நிண்டியே மேடையில.. நாரைய தக்பீர் செய்யச் சென்னியே... தக்பீர் பண்ணிட்டீங்களா?"

"சிங்களக் கட்சில ஊம்புர நாய்களுக்கு தனித்துவம் தெரியுமா?.. அத உடு! மாமி, மைமுனாவ அனுப்பிராத! கரச்சல்! ந்தச் சப்புமார நம்பாதகா! ஏமாத்துவானுகள். நொக்குத் தெரியா, நம்முட முட உதுமான்ட வெண்டி சல்மாவையும் வெளிய அனுப்புளுண்டு கொழும்புக்குக் கூட்டிட்டுப் போய் ......."

"போடா கொறுக்காப்புளி! கொளும்பு தெரியாத பேயா! அவனும் வேனும் கதக்கிறத்தக் கேட்டுட்டு நொக்கு மூள கொளம்புது." செரி, மாமி நான் போறன். செரியா! எல்லாம் "ரெடி" பண்ணு. எல்லாஞ் செரிண்டா வாற கௌம "பிளய்ட்டு"! உஷ் ... ஸ்.. ஸ்.." சப்புச் சுல்தான் கையால் காற்றில் விமானம் பறந்து காட்டினான்.

"செர்ராப்பா! நீ போ! இன்னம் கொஞ்சம் ஓசிப்பம்"

சப்புச் சுல்தான் போய்விட்டான் உடன் மாமி -

"முத்தும்மது! அவன் சப்புச் சுலுத்தானோட எந்நரமும் கொளுவாத. அவன் பொறுப்பு. "எக்குல" தோக்கும் வச்சிருக்கான். டியே மைமுனா மச்சானுக்கு தேயில ஊத்திக் குடு..."

முத்து முஹம்மது பேயறைந்தாற் போலிருந்து விட்டு-

"மா..மி! மெய்யா மெய்யா மைமுனாவ வெளியில அனுப்பப் போறியா?"

"அனுப்பாட்டி ...? எப்பிடி ஊடுகட்ற? வாள்ற? காசி? ஒண்டா ரெண்டா? நாலு கொமருக்கு என்ன இரிக்கி?"

மாமியின் கேள்வியில் நிலை குலைந்தான் முத்து முஹம்மது.

"மாமி! மைமுனா வெளில போனா நான் பாரமெடுக்க மாட்டன்"

"அப்ப அவளோட சேத்து இந்த மூணு கொமரையும் பாரமெடுப்பியா... ஒழப்பியா... ஊடு கட்டுவியா... செல்லன்"

என்ன மாமி இது?

"அப்ப என்னய்யச் செல்றாய் என்ன... ரெண்டு வரிசம் போனா எப்பிடியும் கொஞ்சக் காசோட வெருவாள்.. ஒரு ஊட்டக் கீட்டக் கட்டலாந்தான..."

முத்து முஹம்மதால் பதிலளிக்க முடியவில்லை. மைமுனாவா வெளிநாட்டுக்கா..? அதுவும் சப்புச் சுல்தானுடனா..? அவனுக்குள் ஒரு நரகம் கொதித்தது. மைமுனா இதுக்கு என்ன சொல்கிறாள்...

"மைமுனா, வெளிய போக ஓம்பட்டுட்டாளா மாமி?"

"அவள் என்னத்த ஓம்பர்ர? பாசிப் பொட்டும் எடுத்தாச்சி.. நீயான் செல்லு, நீ சொன்னாக் கேப்பா!"

"நானா... நானா அவள வெளில போகச் செல்ற.. கடசி மட்டும் செல்ல மாட்டன்"

"அப்ப எல்லாத்தையும் பாரமெடு"

மேற்கொண்டு பேச விரும்பாமல் மாமி கடைக்குப் போய் விட்டாள்.

மைமுனா செத்தைக் குடிலுக்குள் நெருப்பு மூட்டினாள். முத்து முஹம்மது பரிதாபமாக அவளைப்பார்த்தான். மைமுனா அடுப்பை ஊதி கரியாயிருந்தாள். கண்களில் கண்ணீர்... அழுகிறாளா என்ன... யாசின் மைமுனாவின் கடவுச் சீட்டை வியப்புடன் பார்த்து-

"லாத்தாட போட்டோவு என்ன வடிவாரிக்கிடி .." என்றான்.

"டேய் சில்லித்தலையா .. தூக்கெறிரா அந்த மைர! .. மைமுனா ... மெய்யா மெய்யா நீ வெளியில போவியா கிளி!"

"......................"

"போக விருப்பமா நொக்கு? "

"ம்மா செல்லிட்டா நான் என்னய்ற மச்சான்.." குரல் விம்மியது..

"அப்ப நான்? என்ன உட்டுட்டுப் போவியா... ?"

"........................"

"மைமுனா நான் சாகுவன் நீ போனா.. அதுவும் ந்தச் சப்புச் சுலுத்தான் நாயோட நீ போனா நான் வெசம் குடிப்பன் ல்லாட்டி புலிப்படையில சேருவன் ... ஓம்!"

"பேக்கத கதயாதங்க மச்சான்.. ந்தாங்க தேத்தண்ணி குடிங்க..?"

"ஒரு மைரும் வேணா!"

முத்து முஹம்மது கோபித்து வீடுதிரும்பவும் மனமின்றி சைக்கிளை மிதித்து கோபமாகப் பூமரச்சந்திக்கு வந்தான். நேற்றைய தோரணங்கள் பிரிக்கப்பட்டிருந்தன.. சுவரொட்டிகள் இருந்தன. நெய்னாரின் "ராவுத்தர் ஹோட்டலில்" ஒரு பிளேன்டி குடித்தான். ஆத்திரம் அடங்கவில்லை. கடைக்குள் பனிஸ் பெட்டியில் தலைவர். கடிகாரத்தில் தலைவர்.. கல்லாப் பெட்டியில் தலைவர்... தலைவர் மீது நாட்டம் செல்லவில்லை....

"வெத்தி சுவர்! ஆறு எடமும் நம்முட கச்சிதான் வெல்லும் சுவர்"

என்று நெய்னார் கட்சிக்கதை ஆரம்பித்தான்... முத்து முஹம்மது



பேசவில்லை.. மைமுனா ..? வெளிநாட்டுக்கு ... அப்ப... நான்... சப்புச் சுல்தான் கொழும்புக்கு மைமுனாவைக் கூட்டிப்போய் ... ச்சிக்! சட்டென்று முத்து முஹம்மது தேனீர் கிளாசை தரையில் எறிந்தான்.!

நெய்னார் திடுக்கிட்டு -

"என்னடாது.. முத்தும்மது ... கௌாஸ ஒடச்சிட்டாய்?"

"கௌாஸூம் மண்டையும்! எவ்வளவ்வு டா கெல்லாசிக்கு.. பெரிய தங்கக் கெல்லாசி ... பே நாயே... "

"என்னடா முத்தும்மது நொக்கென்ன பைத்தியமா..."

"பொத்துரா வாய, பொட்ட நெய்னாரு புட்ரா காச ... நாய .. "

"வெறியாடா நொக்கு .. டேய்.. ! டேய்..!"

பத்து ரூபாய்த் தாளையும் எறிந்த முத்து முஹம்மது சடாரென சைக்கிளில் தாவி இரும்புப் பாலத்தை நோக்கி வேகமாகச் சென்றான். என்ன செய்வதென்றே விளங்கவில்லை.

இரும்புப் பாலத்தில் ஆள் நடமாட்டமில்லை. குளிர் காற்று வீசியது. சைக்கிளை சாத்திவிட்டு முத்து முஹம்மது பாலத்தின் கைப்பிடியில் சாய்ந்து உட்கார்ந்தான். யோசனையில் ஆழ்ந்தான். இருள் கவிழ்ந்தது. பாலத்தின் நிழல் தண்ணீரில் ஆடி பயமுறுத்தியது. தண்ணீரின் சளக் சளக் சத்தம் கேட்டது. வயல் வெளிகளிலிருந்து மட்டற்ற பூச்சிகள் நியோன் ஒளி தேடி வந்தன. விநோத இரா ஜந்துகள் வெளியேற ஆரம்பித்தன. முக்கால் மணி நேரம் கடந்திருக்கும்.

பாலத்தின் மறுபக்கமிருந்து சைக்கிளில் இருவர் வருவது புலனாகியது. முத்து முஹம்மதின் அருகே வந்ததும் சைக்கிள் நின்றது. ஒருத்தன் மக்கத்து வலைத் தொப்பி அணிந்திருந்தான். மற்றவன் இஸ்லாமியக் கட்சித் தொப்பி அணிந்திருந்தான். இரு வாலிபர்களும் முத்து முஹம்மதை நெருங்கினர்.

"நீ பள்ளிமுனையா? " - ஒருத்தன் கேட்டான்.

"நீ எந்த ஊரு?" என்ற முத்து முஹம்மது கோபத்துடன் கேட்டான்.

"நாங்க அக்கரைப்பத்து .. சப்பு வேல பாக்கற சுல்தான்ட வீட்ட ஒருக்கா காட்ட ஏலுமா .... அவர அவசரமா சந்திக்கணும்..."

"சப்புச் சுல்தானா..?"

முத்து முஹம்மது அவர்கள் இருவரையும் மங்கலான வெளிச்சத்தினூடே உற்றுப் பார்த்தான். அவர்களது பேச்சில் அக்கரைப்பற்று வாடையே இல்லை.... சிலவேளை... முத்து முஹம்மதுக்கு சந்தேகம் எட்டிப் பார்த்தது.

"நெக்கி சப்புச் சுல்தாண்ட ஊடு தெரியாதே ..." என்றான். இருவரில் ஒருவன் திடீரென முத்த முஹம்மதின் சேர்ட்டைப் பிடித்து இழுத்தான். முத்து முஹம்மது பாலத்திலிருந்து நழுவி வீதியில் விழுந்து ஆத்திரமாய் எழுந்தான். மற்றவன் சட்டென்று தனது சோட்டை விலக்கிக் காட்ட - இடுப்பினுள் ஒரு பிஸ்டல் துப்பாக்கி மினுமினுத்தது.

"இதப்பாரு! ஆரெண்டு விளங்குதே..? இந்தா இந்தக் கடிதத்த அவன் சப்பு ஏஜென்சி சுல்தானுட்டக் கொடுத்துவிடு. நாங்கள் தேடி வந்தனா். கண்டு சொல்லிரு சரியே..?"

மற்றவன் ஒரு கடிதத்தை முத்து முஹம்மதின் சேர்ட் பைக்குள் வைத்தான். முத்து முஹம்மது பயந்துபோய்-

"செரி அண்ணேய்! ப்ப. போய்க் குடுப்பன் ணேய்!" என்றான்

"சரி ஓடு!" என்றவனின் முகத்தில் பெரிய தையலிட்ட காயத்தழும்பு இருந்தது. அவர்கள் சைக்கிளில் ஏறி திருவில் பக்கமாக மெதுவாகச் சென்றனர். முத்து முஹம்மது பதட்டமாக தன் சைக்கிளை எடுத்து விரைவாக மிதித்து நெய்னாரின் ஹோட்டலுக்கு மறுபடி வந்தான்.

"டேய் நெய்னாரு! ஒரு கடிதம் படிக்கனும். வெளி லைட்டப்போடு"

"முத்தும்மதா... டேய், வெளில லைட்டையும் ஒடச்சிறியிரதரோ..."

வெளிவிறாந்தையின் சோக வெளிச்சத்தில் முத்து முஹம்மது அந்தக் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தான். துணுக்குற்றான். கடிதத்தின் தலைப்பில் ஒரு புலித்தலை. இரு துப்பாக்கிகள்.. கீழே. "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்..."

அதன் கீழே எழுதப்பட்டிருந்த வரிகள்.....

மு. ம. சுல்தான் (சப்-ஏஜென்ட்) அவர்கட்கு,

உமக்கு எதிராக உதுமான் என்பவரால் செய்யப்பட்டுள்ள சில முறைப்பாடுகள் காரணமாக எதிர்வரும் 1994-06-09 சனிக்கிழமை விசாரணை ஒன்றுக்கு வருமாறு வேண்டுகிறோம். தவறும் பட்சத்தில் மோசமான நடவடிக்கை எடுக்கப்படும்..!"

*பொறுப்பாளர்*
*அம்பாறை மாவட்டம்.*
*தமிழீழம்*

"என்டேய், என்னடா முத்தும்மது புலிப்படம் இரிக்கே .. "எலுட்டிட்டி" நோட்டீசா"

முத்து முஹம்மது சட்டென கடிதத்தை மடித்து சேர்ட்டுக்குள் வைத்தான்.

"ல்ல நெய்னாரு! இது வேற கடிதம்"

"ல்லல்ல! புலிர கடிதம்!! புலித்தலப்படம் இரிக்கி. கண்ணால கண்ட!"

"ஒன்ட பொட்டக் கண்ணால மைரத்தான் கண்ட!"

முத்து முஹம்மது விரைந்து சைக்கிளில் ஏறி வீடு வந்து சேர்ந்தான். கண்பார்வை மங்கிய தாய்க்கிழவி காத்திருந்தாள்.

"எங்கடா கெடந்து வாறாய்? ராவையில வெளியில திரியாதடா.. "எலக்சன் டைமுல கொளப்பம் வரை. இசிலாங் கட்சிக் காரணுக் புலி சுர்றானாம்.. டேய், நீயும் இசிலாங் கட்சியாடா ... செல்லண்டா!"

"கத்தாதஹா எக்கோவ்! நெக்கிச் சோறு வேணா. படு"

"மைன் ஆண்டவரே ... வேனுக்கு நல்ல புத்தியக் குடு வாப்பா!"

"படுஹா .... படுஹா..."

மைமுனாவை சப்புச் சுல்தான் கொழும்புக்குக் கூட்டிப் போய்... மைமுனா ஓட.. ஓட.. சுல்தான் துரத்துகிறான். மைமுனா கத்துகிறாள்... போடா..போடா... என்கிறாள். முத்து மச்சான் சப்பு நாயப் புடிங்க மச்சோ..ன் .. என்கிறாள். உடனே தலைவர் வந்து மைமுனாவுடன் சிரிக்கிறார்.. உடனே முகத்தில் தையலிட்ட தழும்புக்காரன் "பிஸ்டலை" உருவி தலைவரைச் ....

கனவு பாதி நினைவு பாதியாய் முத்து முஹம்மது நித்திரையில் அலைக்கழிந்து எப்போது தூங்கினானோ....

தாய்க்கிழவி அதிரடிச் செய்தி ஒன்றுடன் பரபரப்பாக அவனை அரட்டிய போது விடிந்திருந்தது.

"எழும்புடா டேய்! முத்த ம்மதோவ்!! சலுமா மௌத்தாப் போய்த்தாள்ளோ"

"ஆருஹா.. என்னஹா?"

"மொட உடுமான்ட பொஞ்சாதி சல்மா நஞ்சி குடிச்சி மௌத்தான யாம்டா... எழும்புடா சொறுக்கா!"

அதிர்ச்சியுடன் எழுந்தான் முத்து முஹம்மது.

*(இன்னும் வரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாளரம்

- இப்னு அஸூமத்

*1951ம் ஆண்டு முதல் இன்றுவரை 1,206 ஊடகவியலாளர்கள் உலகம் முழுவதிலுமாக கொலை செய்யப்பட்டுள்ளனர். இதில் 1992-2002 காலப்பகுதியில் மாத்திரம் 374 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் ஊடகவியலாளர்கள் என அடையாளம் காணப்பட்டதன் பின்னரே கொலை செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அதே நேரம் 2003ம் வருடம் ஏப்ரல் மாத இடைப்பகுதிக்குள் மாத்திரம் ஈராக் யுத்தத்தின்போது கொல்லப்பட்ட 9 பேர் உட்பட 15 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

*லக்ஜன*

## லதாவின் டயரியிலிருந்து ....

ஏப்ரல் 06.

பிரதமர் மூதூர் வரும்வரை ஹக்கீம் கொழும்புக்கு வரமாட்டாராம். அவர் என்ன கூறுகின்றார் என எனக்கு எதுவுமே புரியவில்லை. "பிரதமர்" திருகோண மலைக்குச் சென்றாரேயொழிய மூதூருக்குச் செல்லவில்லையே!... மூதூர் வராவிடில் ஹக்கீம் அரசுக்கு அளித்துவரும் ஆதரவை நிறுத்தி விடுவாராம். ஆக நிறுத்திவிட்டாரா? வெறுமனே அநியாயமாக கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் புலிகளால் கொல்லப்படுகின்றனர். இது பற்றி எவருமே பேசுவதில்லை. பேசினாலும் பலனுண்டா? செயற்பாடுகள் இல்லாத போது ...

*வடக்கு - கிழக்குப் பகுதிகளிலிருந்து முஸ்லிம் மக்களை விரட்டிவிட்டு அப்பகுதிகளில் அதிகாரங்களைக் கைப்பற்றுவதே புலிகளது தேவையாகவுள்ளது. ரவூப் ஹக்கீம்களும், அதாவுல்லாக்களும் இதற்கு உடன் படுகின்றனரா? தத்தம் அமைச்சுப் பொறுப்புக்களுக்கு முக்கியத்துவம் வழங்குவார்களா? அல்லது தனது இனத்தவர்களைப் பாதுகாப்பார்களா?

*தினகர*

*அமெரிக்காவின் வாதப்படி பார்க்கப்போனால் கண்ணுக்குத் தெரியாத ஆயுதங்கள் இருப்பதாகச் சந்தேகித்தால் அந்த நாட்டைத் தாக்க இயலும். (ஆயுதங்கள்) இருப்பது அல்ல. கண்ணுக்குப் புலப்படாமையே தாக்குதலுக்குப் போதுமான காரணியாகும். பின்லாடன் ஒரு நாட்டில் இருக்கின்றார் என சந்தேகித்தால் அந்த நாட்டைத் தாக்க வேண்டும். சந்தேகம் மட்டுமே போதுமானதாகும். ஏதாவதொரு நாட்டின் தலைவருக்கு பைத்தியம் என்றால் அப்போதும் அந்த நாட்டைத் தாக்க வேண்டும்.

*பலய*

*மூதூர் பகுதில் ஏற்பட்ட மோதல் நிலை சம்பவங்கள் தொடர்பில் பாதுகாப்புத் தப்பினர் நடந்துகொண்ட விதம் குறித்து நாங்கள் திருப்தியடையப்போவதில்லை. பாதுகாப்புப் படையினரும் பொலிஸாரும் உகந்தமுறையில் செயற்பட்டிருந்தால் இந்த மோதல்கள் இடம் பெற்றிருக்காது என்பது எனது எண்ணமாகும்.

ரவூப் ஹக்கீம் பிரபாகரனைச் சந்தித்தார். அச்சந்திப்பின் பின்னர்தான் இந்த மோதல்கள் இடம்பெற்றன. எனினும் எமது பிரச்சினைகளை நாமே பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றுதான் நான் நினைக்கின்றேன்.

நாங்கள் எப்போதுமே நெருங்கிப்பழகி வாழ்ந்து வந்தவர்கள் என்றுதான் தமிழ் மக்கள் கூறிவருகின்றனர். எனினும் கடந்த காலங்களில் நினைத்துப் பார்க்க முடியாத வகையிலான பிரச்சினைகள் தோன்றியுள்ளன. இதனால் இப்போது இரு பக்கமும் அச்சம் ஏற்பட்டுள்ளது. பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதாயின் தமிழ் மக்கள் முன்வர வேண்டும். அது மட்டுமல்ல, எமக்குள் நம்பிக்கை ஏற்படும் அளவுக்கு அவர்கள் நடந்து கொள்ள வேண்டும்.

*மூதூர் பள்ளிவாசல் நிர்வாகி*
*மௌலவி அப்துல் கரீம் - லக்ஜன*

*"அரசாங்கம் கூறியதைப் போன்று எந்த சம்பவமும் மூதூரில் இடம்பெறவில்லை. அதைவிட மீறிய சம்பவங்களே அங்கு இடம்பெற்றுள்ளன. 1990 களில் வடபகுதியில் வாழ்ந்து வந்த முஸ்லிம்கள் 24 மணித்தியாலங்களில் அப்பகுதியை விட்டு வெளியேறுமாறு புலிகள் உத்தரவிட்டனர். அதன் பின்னர் காத்தான்குடிப் பள்ளிவாசலைத் தாக்கி 103 முஸ்லிம்களைக் கொலை செய்தனர்.

அன்றுமுதல் இன்றுவரை முஸ்லிம்களது சொத்துக்களை கைப்பற்றிக் கொள்ள முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதே நோக்கம் இன்னமும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இது முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான மோதல் அல்ல. முஸ்லிம் மக்களை அப்பகுதிகளிலிருந்து சுத்தப்படுத்துவதாகும்"

*ஜே.வி.பி. பா.உ - சந்திரசேகரன் -லக்ஜன*

## உண்மையாளனின் டயரி

2003 மே 08

இஸ்ரேல் இராச்சியம் உருவாக்கப்பட்டு 55 வருடங்கள் பூர்த்தியாகியுள்ளதாக அந்நாட்டு மக்கள் வைபவங்களை நடாத்துகின்றனர். என்றாலும் இது பலஸ்தீனர்களது பூமி. இஸ்ரேலிய கெரில்லாப் படைகள் பலஸ்தீனர்களை இந்த பூமியில் இருந்து விரட்டியடிப்பதானது புலிகள் இயக்கத்தினர் எங்கள் முஸ்லிம் மக்களை அவர்களது சொந்த இடங்களில் இருந்து விரட்டியதைப்போலாகும். வீடுகளுக்குத் தீ வைத்தனர். பெரியவர்களை மாத்திரம் அல்லாது குழந்தைகளையும் கொலை செய்தனர். பிற்காலத்தில் இஸ்ரேலின் தலைவர்களான பலர் இவ்வாறான கெரில்லாத் தலைவர்களேயாவார். இந்தக் கொலைகாரர்களுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கியவர்கள் ஏகாதிபத்திய வாதிகளாவர். இறுதியாக சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் நோர்வேக்காரர்கள். இன்றும் கூட யுத்தம் நின்றபாடில்லை.

*சுனில் மாதவ பிரேமதிலக - லங்கா*

*"இந்த மூட அரசியல் வாதிகள் எதையுமே விளங்கிக் கொள்வதில்லை. பிக்குமார்களுக்கு தமிழும், ஆங்கிலமும் கற்பிக்குமாறு நாம் தொடர்ந்து கூறிவந்துள்ளோம். பௌத்த நூல்களை தமிழில் மொழி பெயர்க்குமாறு கூறினோம். என்றாலும் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

தமிழ் இந்துக்கள், புத்தரையும், பிக்குமார்களையும் நன்றாக மதிக்கின்றனர். எனினும் எங்களது மூடத்தனமான இனவாதம் காரணமாக தமிழ் மக்கள் இப்போது சுத்தோலிக்கவலையில் சிக்குண்டுள்ளனர்.

*பேராசிரியர் மீகொட பஞ்சாலோக்க தேரர் - தினமின*

*மாக்கான் மாக்கார், சேர் ராசிக் பரீட், டொக்டர் எம். சி. எம். கலீல், அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத், ஏ. எச். எம். பௌசி, எம். எச். எம். அஷ்ரஃப் போன்ற தலைவர்கள் முஸ்லிம் மக்களுக்கு தலைமைத்துவத்தை வழங்கியதுடன் அம்மக்களது வரவேற்பையும் பெற்றிருந்தார்கள். இன்றைய இலங்கை முஸ்லிம்கள் தலைவர் ஒருவர் இல்லாத நிலையிலேயே இருந்து வருகின்றனர். மிகப்பிரபலமான முஸ்லிம் மக்கள் தலைவராகக் காணப்பட்ட பௌஸியவர்கள் இன்று கண்டிப்பான மௌனம் சாதித்து வருகின்றார். பேரியல் அஷ்ரஃப் அவர்கள் மிகவும் திறமைமிக்க புத்திகூர்மைமிக்க தலைவியாக இருந்த போதிலும் முஸ்லிம் சமூக கலாச்சார சொரூபத்தின் படி தனது கணவர், தந்தை, சகோதரர்கள் அல்லது மகனோ அருகிலின்றி மக்கள் பணியாற்றும் போது இடையூறுகள் தோன்றுகின்றன. ஹிஸ்புல்லாஹ் வளர்ந்துவரும் இளைய தலைவர் என்ற போதிலும் அவர் இன்னமும் இளையவாரகவே தென்படுகின்றார். அமைச்சர் அதாவுல்லா துணிவான முஸ்லிம் நபராகத் தோன்றினாலும் முஸ்லிம் சமூகம் அவரை அவ்வளவு அக்கறைகொண்டு பார்ப்பதாகத் தெரியவில்லை. அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டுள்ள ரவூப் ஹக்கீம் எந்த வகையிலும் முஸ்லிம்களது தலைவர் இல்லை. இவரைப் போன்ற வஞ்சகமான, பயந்த சுபாவமுள்ள, கொள்கையற்ற ஒருவரால் முஸ்லிம் சமூகத்திற்கான தலைமையை வழங்க முடியாது. இன்றைய முஸ்லிம்களின் தேவை அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் ஒரு தலைவரேயாவார்.

*வஜிர - தினகர*

*இறுதியாக ஒரு சிங்களக் கவிதை

அதியுயர் பாதுகாப்பு வலயங்களில்
இருந்து
அரச இராணுவமும்
ஈ. பி. டி. பி. யும், புளொட்டும்
தமதான, இன. மதம், கொண்டவர்களும்
தமது கருத்துக்களைக் கொண்டிராதவர்களுமான
அனைவரும்
வெளியேற வேண்டும்
தமிழ் ஈழத்தில் இருந்து...

*ஏ. வி. கே. பிரேமதாச*
நாவலப்பிட்டி

# ஏழை அழுத கண்ணீர்

## சிறுகதை

—துல்கர்னைன்—

பின்ன என்னதான் செய்யிற கவலைப்படாமல் களட்டித்தா அட ஏன் செய்னம்பு கண்கலங்குரா"

அதுக்கில்ல நம்மட யாழ்ப்பாணத்து முஸ்லிம்கள்ர நெனப்பு வந்துட்டுது அதுதான் கண் கலங்கிட்டேன். அப்ப களட்டி எடுத்துக்கிட்டு உட்டாங்க இப்ப கொண்டு வந்து தா என்குறாங்க"

"என்னதான் செய்யிறது ரண்டாயிரம் ரூவாய் தராட்டி கொள்ளி எடுக்க விடமாட்டாங்களாம். காடு கடல் கரை எல்லாத்தையும் ஆண்டவன் மனிசனுக்கு பொதுவாகப் படைச்சிருக்க அதெல்லாம் இப்ப அவங்கடயாம் ஆயிரம் காட்டுச்சட்டம்."

இந்தாங்க கொண்டு வித்துப்புட்டு கொடுத்துத் தொலைங்க. இந்த இருபது இருவத்தி அஞ்சி வருசத்துக்கும் இப்படி எத்துனை தாலி எத்துனை காசி கப்பமெண்டு குடுத்தாச்சி. எல்லாத்தையும் அந்த ஆண்டவன் பார்த்துக்கிட்டுத்தான் இருக்கான். அவனொரு தீர்ப்புச் சொல்வான். ஏழை அழுற கண்ணீர் கடவுளுக்கிட்ட போகாமக் காயாது "

காட்டுல மேட்டுல கஷ்டப்பட்டு உழைத்துக்கட்டினவங்களுக்கு ஆசையா வாங்கிக் கொடுத்த காதுப்பூவை களட்டி தாவென்று வாங்க வேண்டிய கை சேதம் வந்ததே என்று கனத்த மனதுடன் ஆதம்பாவா நகைக்கடைக்கு விரைந்தார்

அந்தக்கழிவு இந்தக்கூலி என்று சொல்லி விலையைக் குறைத்துவிட்டு நகையின் பெறுமதியில் மூன்றில் ஒரு பங்கை நகைக்கடைக்காரன் கொடுக்க இஞ்ச இவன் புடுங்கிறான் அங்க அவன் புடுங்குறான் என்று மனதுக்குள் ஏசிக்கொண்டு காசை வாங்கிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தார்.

சமாதானம் வந்து விட்டது இனி சந்தோசமாக தொழிற்செய்யலாம் என விறகு ஏற்றிவர காட்டுக்குப்போன வண்டிக்காறர்களை கப்பம் கட்டிவிட்டு கொள்ளி எடுங்கடா என்று திருப்பி விட்டார்கள் அன்றாடம் காய்ச்சிகளான அவர்கள் தலா ரெண்டாயிரத்துக்கும் எங்கே போவார்கள் எல்லோரும் தத்தம் மனைவிமார்களின் காதிலும் கரத்திலும் மின்னிக் கொண்டு இருந்தவற்றில் கைவைத்து விட்டார்கள்

அடுத்த நாள் தலா ஆளுக்கு ரெண்டாயிரம் ரூபாய்கொடுத்துவிட்டு கொள்ளி ஏற்றிக்கொண்டு வந்தார்கள். எப்படியோ கப்பம் கொடுத்து நாலாவது நாள் கொள்ளி ஏற்றிக்கொண்டு இருந்த போது "டேய் சோனியள் வாங்கடா இங்கால "நிமிர்ந்து பார்த்த போது சுமார் பதினைந்து பேர் துப்பாக்கியால் குறிபார்த்துக் கொண்டிருந்தனர். எல்லாரும் தலைக்கு மேல கையை உயர்த்திக்கொண்டு நடுக்கத்தோடு வந்தனர். "அப்படியே நில்லுங்கடா"என வெய்யிலில் நிறுத்தி விட்டு பாலமரத்து நிழலில் நின்று கொண்டார்கள்.

"யாரைக்கேட்டுடா கொள்ளி



எடுக்கிறீங்க"

"மூனு நாளைக்கு முன்னர்தான் ஆளுக்கு ரெண்டாயிரம் ரூவா கொடுத்தோம் தம்பி "ஆதம்பாவா ஒவ்வொரு வார்த்தையாகப்பேசினார்.காசி கொடுத்தீங்களா யாருக்கிட்ட கொடுத்தீங்க எடுடா பில்ல"

"பில் லெல்லாம் அவங்கள் தரயில்ல தம்பி "

"என்னடா சோனி பொய்யாடா சொல்லுற. இது எங்கட காடு. காசை வைச்சிட்டு கொள்ளி எடு என்ன வெளங்குதா " என்று ஆதம்பாவாவின் கழுத்தை பிடித்து தள்ளினான். துப்பாக்கி கையில் இருக்கும் தைரியத்தில் அறுபதை இருபது தள்ளியது. பின்னால் ஆதம்பாவாவை அருகில் நின்ற மற்றொரு வண்டிக்கார இளைஞ்சன் தாங்கிக் கொண்டான். தாங்கிக் கொண்டே "இந்தக்காடும் வளமும் எங்களுக்கும் சொந்தம். எல்லாரும் இந்தக் காட்டுக்கு வந்தேறு குடிகள்தான். உங்களுக்கு மட்டும்தான் என்று சட்டம் போட இயலாது "என்று அந்த வாலிபன் கூறி முடிக்க முன், என்னடா சொன்னா சோனி என்று உறுமிக்கொண்டு பாய்ந்து வந்து துப்பாக்கி முனையால் வயிற்றில் குத்தினான் என்ட உம்மா என்ட அல்லாஹ் என்று வலி தாங்கமுடியாமல் வயிற்றை பொத்திக் கொண்டு கீழே குந்தினான். மற்றுமொரு துப்பாக்கி முனையால் மண்டையில் அடிக்க ரத்தம் வழிந்து முகத்தை மறைத்தது. மயங்கி விழுந்தவனை இன்னொன்று ஏறி மிதித்தது. டேய் காக்காமார் கேட்டுக்குங்க இனிமேல் கொள்ளி எடுக்கிறண்டா ஆளுக்கு ஐயாயிரம் தந்துப்போட்டு எடுங்க. அது வரைக்கும் மாட்டு வண்டி எல்லாம் இங்க இருக்கட்டும் போங்கடா"

தம்பிமார் சத்தியமாகச் சொல்கிறோம் இருந்ததை வித்துக் கடன் வாங்கித்தான் மூனு நாளைக்கு மொதல்ல ஆளுக்கு ரெண்டாயிரம் கொடுத்தோம் ஆதம்பாவா தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கூறினார்.

பொத்துடா வாய... அதெல்லாந் தெரியாது. அது வேற குரூப்பாக இருக்கும். இப்ப நாங்கதான் இந்த ஏரியாவுக்கு பொறுப்பு. எங்களுக்கு தர வேண்டிய கப்பத்தை தந்து போட்டு கொள்ளி எடுங்க இல்லையெண்டா வண்டியுமில்லை மாடுமில்ல போங்கடா."

காடுமேடெல்லாம் கால்நடையாக நடந்து வந்து வீடு சேர்ந்தனர் வரும் போது ஆதம் பாவாவின்மாடுகளும் ஆதம்பாவாவுடன் வரப் புறப்பட்டதும் அதன்முகத்தில் துப்பாக்கிபிடி அடித்ததும் ஞாபகத்துக்கு வந்ததால் அவர் கண்ணைக் கசக்கிக்கொண்டார்.

நகையையும் ஜீவாதார வண்டில் மாட்டையும் பறி கொடுத்து விட்டு வந்த கணவனை பார்த்த செய்னம்புக்கு வேதனை பொறுக்க முடியவில்லை. சமாதானமென்டாங்க சந்தோசமென்டங்க ஆனா கொள்ளை அடிக்கிறதும் கொலை செய்யிறதும் அப்படியேதான் இருக்கு. அந்த அதம்பம் பிடிச்சவனுகள் அழிவானுகள் ஆண்டவன் பார்த்துக்கொள்வான் கண்களை முந்தானையால் துடைத்துக்கொண்டாள்.

அவனுகள்தான் அப்படியென்றால் நம்மளுக்கிட்ட ஓட்டுவாங்குன பொய்யனுகள் அதவிட மோசம் உரிமைகளை கட்டிக்காப்போம் தட்டிக் கேட்போம் ஓட்டுப்போடுங்கள் என்றான்கள். இப்ப கொழும்பில் ஊடு வாங்கி குடியேறி அறிக்கை விடுறான்கள். உதவாக்கரைகள்" என்று ஆதம்பாவா தன் ஆத்திரத்தைக் கொட்டினார்

அப்போது செய்தி சொல்லப் போவதற்கான ஓசை பக்கத்து வீட்டு ரேடியோவில் ஒலித்தது. ஆதம் பாவா காதை கூர்மைப்படுத்தினார். தலைப்புச் செய்திகள். இலங்கையின் சமாதானத்தை சகல இன மக்களும் சமமாக அனுபவிக்கின்றனர் என்று உள்நாட்டு வெளிநாட்டு தலைவர்கள் திருப்தி தெரிவிக்கின்றனா. இன்று காலை காட்டுக்கு விறகுக்காகச் சென்ற வண்டில்களை இனம் தெரியாத நபர்கள் கடத்தினர்"

செய்னம்பு செய்தியக் கேட்டயா இனந் தெரியாத நபர்களாம் பொய்யனுகள் வாய் புளுத்துப் போக தூ...

ஆதம்பாவாவுக்கு தனது மாடுகளும் தனது கழுத்தை பிடித்து அலறியதும் மனக்கண் முன் தோன்றின கண்கள் குளமாகின. கட்டுப்பாட்டை மீறி கண்ணீர் வழிந்தது.

*(யாவும் யதார்த்தம்)*

---

அபூ பாத்திமா பர்வின்

| | | |
|---|---|---|
| சஞ்சிகை | : | அல் - ஹுதா |
| பிரதம அசிரியர் | : | மௌலவி அல் - ஹாபிஸ் எம். யூ. எம். ஸபீர் |
| வெளியீடு | : | தாருல் குர்ஆன் அல் கரீம், த.பெ.இல 2, மீராவோடை, ஓட்டமாவடி. |
| பக்கம் | : | 40 |



அல் ஹுதா (நேர்வழி) என்னும் நாமத்திற்கேற்றவாறு சஞ்சிகையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆக்கங்களின் கருப்பொருட்கள் அமைந்துள்ளன. அதேநேரம் இன்றைய கால சூழ் நிலையில் இலங்கை முஸ்லிம்கள் எதிர்கொள்கின்ற இடர்களையும் பேசுகின்ற படைப்புக்களையும் இச்சஞ்சிகையின் உள்ளடக்கமாகக் கொண்டிருக்கிறது.

கட்டுரைகள், சிறுகதை, கவிதைகள், துணுக்குகள் என்று பல்வேறு வடிவங்களில் இடம் பெற்றிருக்கும் ஆக்கங்கள் பல்சுவை ததும்பவும், வாசிப்போரை அலுப்புத்தட்டாது தொடர்ந்து வாசித்து முடிக்கும் ஆர்வத்தை கூட்டும் வகையில் விடயங்களை நறுக்கென்று தொட்டுக்காட்டும் பாங்கிலும் அமைந்த ஆக்கங்களை இச்சஞ்சிகை தாங்கி வெளிவந்துள்ளது.

கிழக்கு மாகாண முஸ்லிம்கள் எதிர்கொள்கின்ற அரசியல் நெருக்கடிகளும் முஸ்லிம் விரோத ஆதிக்க சக்திகளின் நசுக்குதல்களையும் கோடிட்டுக்காட்டுவதிலும் சீதனக்கெடுபிடியால் நமது சமூகம் படும் அவஸ்தையையும் அதற்கு மாற்றீட்டுத்திட்டத்தை முன்வைப்பதிலும் பொதுவாக இஸ்லாமிய வாழ்வியல் நோக்குகளை வெளிச்சம் போட்டுக்காட்டுவதிலும் இச்சஞ்சிகையின் வெளிக்கொணர்தலின் இலக்கு விளங்கத்தக்கது.

நமது கலாச்சாரங்களையும் பண்பாடுகளையும் மேற்கத்திய நாகரீக மோகத்தினால் எவ்வாறு காவு கொள்ளப்படுகிறது என்பது பற்றியும் ,அவற்றிலிருந்து விடுதலை பெற்று இஸ்லாமிய அற நெறியில் நமது வாழ்வியல் பண்பாட்டினை மேற்கொள்வது எவ்வாறு என்பதையும் இச்சஞ்சிகை நமக்குப் போதிக்கின்றது.

மனித வாழ்க்கை செவ்வனச்செல்வதற்கு இஸ்லாமிய நெறி முறைகளை பேணுவதே ஒரே வழி என்பதை மையப்பொருளாகக் கொண்டு அதனை பிரச்சாரப்படுத்துவதில் பங்காற்றும் படைப்புக்களை இச்சஞ்சிகை கொண்டிருப்பது அதன் எதிர்காலத்துக்கு கட்டியம் கூறத்தக்கது.

சிற்றேடுகள் மூலம் சமூகத்தில் பாரிய தாக்கங்களை ஏற்படுத முடியும்.அதனை நோக்கிய பயணத்தில் அல் - ஹுதாவும பயணிக்க வேண்டும். பயணிக்கும் என்ற நம்பிக்கையை நமக்கு ஏற்படுத்தும் வகையிலான பல படைப்புக்களை முதல் பிரவேசத்திலேயே அல் - ஹுதா கொண்டிருப்பது அதன் வெற்றிப்படிகளின் ஏற்றத்தையே காட்டுகின்றது.

*நூல் விமர்சனத்திற்காக நூல்களை அனுப்புவோர் கட்டாயம் இரு பிரதிகளை அனுப்பி வைத்தல் வேண்டும்.*
*பிரதம ஆசிரியர்.*

**முக்கிய குறிப்பு**

*கடந்த வார நூல் அறிமுகப்பகுதியில் "வெற்றி" மாத இதழ் தொடர்பாக எழுதப்பட்டிருந்த குறிப்பின் 3 வது பந்தியை "குர்ஆன், ஹதீஸ், இஜ்மாஉ, கியாஸ் என்னும் இஸ்லாமிய அடிப்படை சட்ட மூலாதாரங்களுக்கு முரண்படாத விடயங்களையும் மத்ஹப்களின் வழி நின்று சந்தேகங்களுக்கு சட்ட விளக்கங்களை முன்வைப்பதிலும் வெற்றி இதழின் பங்களிப்பு [illegible] திருத்தி வாசிக்கவும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மையார் ஆட்சியில் அலவி மௌலானா என்ன செய்தார்?

கடந்த ஞாயிற்றுக்கிழமை (25.5.2003) மாலை ஐந்து மணிக்கு, கொழும்பு, மெயின் வீதியிலுள்ள முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத் தலைமையகத்தில் ஒரு வெளியீட்டு விழா நடந்தது. மருதமுனை எம்.எஸ்.எம் முபாறக் எழுதிய "ஒரு முஸ்லிம் நஜீஸாக மாட்டார்" என்ற நூல் வெளியீட்டு விழாவே அது.

பிரஸ்தாப வெளியீட்டு விழா ஆரம்பிக்கும் முன் அதாவது கூட்டம் சேர்வதற்கு முன்னமே மேல்மாகாண ஆளுனர் அல் ஹாஜ் அலவி மௌலானா உரிய நேரத்துக்கு வருகை தந்து மேடையிலிருந்த புரவலர் ஹாஸிம் உமர், சட்டத்தரணி இம்தியாஸ் போன்றோருடன் அளவலாவிக் கொண்டிருந்தார்.

அப்போது சமுதாயத்தின் தற்போதைய நிலை குறித்து மிகவும் வருந்திப் பேசினார். சமூகத்தின் ஒற்றுமை குலைந்து எதையும் ஒருமித்த குரலில் கேட்டுப்பெற முடியாத துர்ப்பாக்கிய நிலை பற்றி மிகவும் ஆதங்கப்பட்டு பேசினார்.

"இன்று அந்த அணி, இந்த அணியென்றும் பிரிந்து நிற்கின்றோம். நமது எதிர்காலத்தை செப்பனிட உரிமைகளை கேட்டுப்பெற முடியாத நிலை இப்போது தோன்றியுள்ளது. அந்த மனுஷன் அஷ்ரப்போடு எல்லாம் போய் விட்டது. அந்த சீதேவி மனுஷன் இருந்தால் இந்த நிலை வந்திருக்காது. தனது கட்சி இப்படி உடைந்து சிதறவும் விட்டிருக்க மாட்டார். எதையேனும் பேசி பெற்றுத்தருவார். அவர் (மௌத்தாகிப்) போனதுடன் எல்லாமே போய் விட்டது". என மிக மிக வருத்தப்பட்டு பேசினார்.

முன்னாள் அமைச்சரும், இந்நாளில் மேல்மாகண சபை ஆளுனருமான அல் ஹாஜ் அலவி மௌலானா இப்படிப்பேசியதை கேட்டுக்கொண்டிருந்த அருகிலிருந்த மனிதன் என் காதுகளில் அழகான-மறுப்புக்கருத்தொன்றினை கிசுகிசுத்தார். இதை வெறும் கிசு கிசு என்று ஒதுக்கித்தள்ள முடியவில்லை. சமூக நலன் கருதி உரத்துச்சொல்ல வேண்டிய கருத்து என்பதால் இங்கு எழுதத்துணிந்தேன்.

"ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகரும் ஆரம்பத்தலைவருமான மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் இப்போது உயிருடன் இருந்தால் ஒற்றுமை குலைந்த இப்படியான நிலைமை ஏற்பட்டிருக்காது. அஷ்ரபின் இழப்பு சமூகத்துக்கு பேரிழப்பாகும் என்ற தோரணையில் ஆளுனர் அலவி மௌலானா கருத்துச் சொல்கிறாரே... இதே அஷ்ரப் அவர்கள் அம்மையாரின் ஆட்சிக்காலத்தில்தானே ஹெலி விபத்தில் மர்மமாக மரணித்தார். இந்த மர்மம் இது நாள் வரை துப்புத்துலக்கப்படாமல் தொடர்ந்தும் மர்மமாகவே இருக்கிறதே! ஆளுனர் அவர்கள் அஷ்ரப் மரணமான அப்போதைய சூழலில் அல்லது சற்று காலம் தாழ்த்தியேனும் அல்லது அம்மையாரின் ஆட்சிக்காலத்தில் என்றேனும் ஒரு நாள் இதே அஷ்ரபின் மரணம் குறித்து அம்மையாரிடம் அல்லது அவர்களது ஆட்சியில் சம்பந்தப்பட்ட எந்த அமைச்சரிடமாவது ஏதேனும் கேட்டாரா? அல்லது மர்ம மரணம் மக்கள் மத்தியில் தெளிவாக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினாரா? பேச வேண்டிய சமயத்தில் எதுவுமே பேசாமல் மௌனமாக இருந்த மௌலானா இப்போது பேசுவது ஏன்?" இந்த வினாவுக்கு யார்தான் விடை தர முடியும்? ஆளுனர் அலவி மௌலானவாவது விடை தருவாரா?

"மாவனெல்ல சம்பவத்தை தொடர்ந்து அம்மாவின் ஆட்சிக்காலத்தில் கெழும்பில் முஸ்லிம் சமுதாய இளைஞர்கள் ஆர்ப்பாட்டம் செய்த போது இதே ஆளுனர் அலவி மௌலானா அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்த இளைஞர்களை பயங்கர வாதிகள் என்று கூறி சிறையில் அடையுங்கள் என்றாரே! யூ .என்.பி ஆட்சியில் இப்படி ஆர்ப்பாட்டம் செய்த இளைஞர்களை போராளிகள் என்றாரே!

நேரத்துக்கு ஏற்றவாறு இரு வேறு கருத்தில் சமூகத்திற்காக போராடுவோரை விழிப்பது சந்தர்ப்பவாத அரசியலா? சாணக்கிய சாமர்த்திய அணுகுமுறையா?" என அடுத்திருந்த இன்னொரு இளைஞரும் கேட்டார்.

ஆளுனா அல் ஹாஜ் அலவி மௌலானா அவர்கள் இவ்விரு வினாக்களுக்கும் விடைதந்தால் அவரது அரசியல் நேர்மையை உணரலாம். விடை தருவாரா?

*தகவல்: அபூ ரியாஸ்*

# மேலதிகாரிகள் செயற்படுவார்களா ?

சட்ட விரோத போதை வஸ்துப்பாவனை, புகை பிடித்தல் போன்ற செயல்களில் இன்று அதிகம் அதிகமாக இளைஞர்களும் பாடசாலை மாணவர்களும் ஈடுபட்டு வருகின்றனர். நாளுக்கு நாள் இவற்றின் பாவனையில் ஈடுபடும் இளசுகளின் சத வீதம் அதிகரித்து வருகிறது. குறிப்பாக பத்து வயதை தாண்டாத சிறுவர்களின் உட்பிரவேசம் கடந்த காலங்களை விட அதிகரித்து செல்கிறது. இந்த தீய பழக்கங்களுக்கு பலியாகும், அடிமையாகும் நிலை இலங்கையை விட ஏனைய ஆசிய நாடுகளில் பல மடங்குகளாக அதிகரித்திருப்பதாக கூறப்படுகிறது. இந்த போதைப்பொருள், புகை பிடித்தல் போன்றவற்றின் பாவனையால் மனித உயிர் அழிவு பல மடங்காக அதிகரித்து வருகிறது. கொலை, கொள்ளை, களவு, கற்பழிப்பு, என்பவற்றுடன் நேரடியாக தொடர்புபடும் ஒரு விடயமாகவே இது காணப்படுகிறது.

அன்றும் இன்றும் இடம் பெற்றுள்ள பல குற்றச்செயல்களுக்கும், போதைப்பொருள் பாவனைக்குமிடையில் நெருங்கிய தொடர்பு இருந்து வருவதனை கண்டு கொள்ள முடியும் சட்ட விரோத போதைப்பொருள் வியாபாரிகள், பாவனையாளர்களுக்கு வழங்கமுடியுமான உச்சக்கட்ட தண்டனை வழங்கப்படுவது அவசியம். இதன் மூலம் பெருமளவு பாதிக்கப்படுபவர்கள் அப்பாவிப் பெண்களும், பிள்ளைகளுமே ஆவார்கள்.

**அன்பார்ந்த 'முஸ்லிம் குரல்' வாசகர்களே!**

**'முஸ்லிம் குரல்' அலுவலக இடமாற்றத்தின் காரணமாக எதிர்வரும் இரண்டு இதழ்கள் வெளிவர மாட்டாது என்பதினை மிக்க மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.**

**இரு வாரங்களின் பின் 'முஸ்லிம் குரல்' தொடர்ந்தும் வெளிவரும்.**

## முஸ்லிம் தேசத்தின் விடுதலையை நோக்கி

நமது
முஸ்லிம் தேசத்தின்
விடுதலையை
நோக்கிய பயணம்
ஆரம்பித்து விட்டது
இது
மலர்களால் தூவப்பட்ட
நந்தவனப்பாதையல்ல
கற்களும்
முற்களும்
காட்டிக்கொடுப்புக்களும்
துரோகமும் நிறைந்த
கடினமான பாதை
முஸ்லிம்கள் நமக்கு
இப்படியான பாதை
புதியதல்ல
இரத்தத்தால் எழுதப்பட்டதே
நமது வரலாறு
ஆனாலும்
ஈமானிய உறுதியும்
திடமான மன வலிமையும்
நமது பயணத்தின்
ஊசுங்கள்
இந்த மண்ணின்
முதல் உரித்தாளன்
நாம்தான்
முதல் மனிதன் ஆதம்
முதலில்
கால் வைத்த பூமியிது
திரவியம் தேடி
திராவிடரும்
நாட்டை இழந்த
விஜயனும்
இந்த மண்ணுக்கு
வரு முன்பே
தென் கிழக்கில்
நமது மூதாதையர்
வாழ்ந்த வரலாற்றை
மறந்திட முடியுமா?
நமது
முஸ்லிம் தேசத்தின்
விடுதலைக்காய்

நமது குரல்கள்
ஓங்கி ஒலிக்கட்டும்
எத்தனை தடைகள்
எகிறி நின்ற போதிலும்
நமது குரல்கள்
ஓங்கியே ஒலிக்கட்டும்

*–கல்முனை முபாரக்*

# வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்ட மனிதாபிமானம்

சப்ரகமுவ, தென்மாண பிரதேசங்கள் இரண்டிலும் பாரிய வெள்ள அநர்த்தம் நிலை கொண்டிருந்த வேளையில் சிறிய படகுகளில் வந்த கொள்ளையர்கள் நீரில் மூழ்கிய வீடுகளுக்குள் நுழைந்து தமது கைவரிசையை காட்டவும் தவறவில்லையாம். இரத்தத்தை உரமாக்கி வியர்வையை நீராக பாய்ச்சி ஓடி ஓடி உழைத்து சேமித்த சொத்துக்களை கொள்ளையிட்ட இக்கயவர்களை நாம் என்னவென்பது. இவர்களை இனங்கண்டு விசாரணையின் பின் தண்டனைகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மரத்திலிருந்து விழுந்த மனிதனை மாடு குத்துவது போன்ற செயலிது. இன்னும் கண்ணீர் வடிக்கும் மக்களை விரைவில் கரை சேரப்பது அவசியம். கொள்ளைக்காறர்களை கைது செய்ய வெகு விரைவில் நடவடிக்கைகள் எடுக்கப்படுமென நம்புகிறோம்.

## வாரமொரு உரைகல் - மருதூர் மெய்யொளி

# மனிதன் ஒரு மிருகமல்ல!

"மனிதன் என்பவன் மிருகம் என்ற நிலையில் இருந்து படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்த ஒரு மிருகம்" என்ற கருத்து ஒரு காலத்தில் நிலவியது. இந்தக் கண்ணோட்ட த்தைக் கொண்டவர்கள், மனிதனின் அடிப்படைத் தேவைகள் உணவு, உறையுள், பாலியல் மாத்திரமே என்று கூறினர்.

உண்மையில் இவை ஒருமிருகத்தின் அடிப் படைத் தேவைகளாகும். இந்த தேவைகளை மாத்திரமே மனிதனும் பெற்றிருக்கின்றான் என்று நாம் அவனைக் கணிக்கும் பொழுது, அவனை மிகவும் இழிவானவனாகக் கணித்து விட்டோம்.

இந்தத் தேவைகளைவிட மிகப் புனிதமான தேவைகளும் அவனுக்கிருக்கின்றன என்ற உயர் ந்த கண்ணோட்டத்தை இவர்கள் மறந்து விடுகி ன்றனர்."

(ஆதாரம் : ழிலாலில்குர்ஆன்)

"மனிதன் ஒரு சமூகப் பிராணி" என்ற கோட்பாட்டை நம்மவர்களில் சிலர் எடுத்தாள் வதுண்டு இக்கோட்பாடு பிழையானதும், நிரா கரிக்கத்தக்கதும் என்பது மேற் சுட்டிக்காட்டிய இஸ்லாமிய கருத்திலிருந்து நன்கறிந்து கொள்ள லாம். மிருகத்திலிருந்து பல மடங்கு மாறுபட்டவ னாகவும், உயாந்தவனாகவும் மனிதன் படைக் கப்பட்டிருக்கின்றான் என்பதே இஸ்லாத்தின் பொதுவான கருத்தாகும்.

மனிதனுக்குரிய பண்புகள் என இஸ்லாம் வரையறுத்துக் கொண்ட எல்லைகளை மீறி, தமது மனோவிச்சையின் பாதையில் தமது வாழ் வைச் செலுத்துவோர்களை "மிருகத்திலும் பாக்க கேவலமானவர்கள்" என்று குர்ஆன் வாணிக்கி ன்றது. உண்மையில், மனிதப் பண்பை மீறி, மிருகத் திற்குரிய தன்மைகளை மனிதன் பேணுகின்ற போதே இவ்வாறான வாணிப்பிற்கு உரித்தாகின் றான். எனினும் "மனிதன் ஒருமிருகம் அல்ல" என்ற கோட்பாட்டையே இஸ்லாம் கொண்டிருக் கின்றது.

# அக்கரைப்பற்று மத்திய சந்தை

நான் படிக்கும் காலத்தில் அக்கரைப்பற்று மத்திய கிராம சங்கத்தை முஸ்லிம்களுக்கும், தமிழர்களுக்குமாக இரண்டாக பிரிக்கும் யோசனையில் பிரிவினை வளர்ச்சியை ஏற்படுத்திய, புதிதாக ஊரில் புகுந்து கொண்ட சிலர் ஏற்படுத்தினர். அப்போது ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. அதில் கல்முனைப் பாராளுமன்ற உறுப்பினர்களான இராச முதலியார், எம். எஸ் காரியப்பர், மஸ்புட்டி வன்னியனார் ஆகியோரும் கலந்து கொண்டனர். அவர்கள் அக்கூட்டத்தில் கேட்ட முதல் கேள்வி மத்திய கிராம சங்கம் பிரிவதில் ஆட்சேபனை இல்லை. பிரிந்தால் பொதுச்சந்தை எப்பகுதியை சாரும் என்பதே ? பதில் வந்தது . அது தமிழ்ப் பிரிவில் இருக்கிறது. தமிழ்ப்பகுதிக்கே சொந்தமாக வரும் என்று.

எம். எஸ் காரியப்பர் சொன்னார். அந்த சந்தை நிலத்தின் உறுதி ஒப்பினையைக்காட்டி இந்த உறுதியின்படி இந்நிலம் அக்கரைப்பற்று பெரியபள்ளிக்குரியது. இந்ந இடம் பொதுவாக இல்லாமல் பிரிவதாக இருந்தால் மீண்டும் பள்ளிக்கே தந்து விட வேண்டும். இதைக்கேட்ட கூட்டம் பிரிவதில்லை என்ற முடிவுக்கு வந்து கலைந்தது.

அக்கரைப்பற்று மத்திய கிராமச் சங்கம் தொடங்கியபோது 6 குறிச்சிகளில் முஸ்லிம்கள் வாழ்ந்தனர். 6 அங்கத்தவர்களே தெரிவு செய்ய இருந்தனர். முஸ்லிம்கள் இதில் தமிழர்களும் இணைய வேண்டும் என்பதற்கு 7 குறிச்சியை உண்டாக்கினர். 7 ஆம் குறிச்சிக்கு மக்கள் பலம் போதாததால், முஸ்லிம்களையும் அக்குறிச்சிக்கு வச்சாப்போட்டு 7 ஆம் குறிச்சி உருவாக்கப்பட்டது.

அக்காலம் முஸ்லிம் தமிழ் இணைப்பு இருந்தது. வடக்கிலிருந்து வந்த சாதிப்பிரிவில் மூழ்கியவர்கள் இங்கு ஊடுருவிய பின்தான் விரிசல்கள் ஏற்பட்டன. எந்த முயற்சிகளும் தற்காலிகமானது தான். தீர்ப்புச் செய்பவர்கள் அவ்விடத்தில் வாழ்பவர்களே. இன்றைய கொந்தளிப்பின் கதையும் இதுதான்.

*ஏ.இக்பால், தர்கா நகர்.*

முஸ்லிம் குரல்
சுவடு 12
30 மே 2003 Muslim Kural صوت المسلم [illegible] 28 ரபீஉல்அவ்வல் - 1424
143, Muhandhiram Road, Colombo - 03. Tel: 0777-389127, Fax: 074-721048, E-mail: mm-s@eol.lk

# முஸ்லிம் சுதந்திர ஊடகவியலாளர்கள் நிறுவனமாக வேண்டும்!

*நமது ஊடகவியலாளர்களுக்கு!*

நமது பணி மகத்தான பணி என்பதை நாமறிவோம். ஊடகத்துறைப் பணிக்கு வருவது என்பது பணம்சார் தொழில்வாய்ப்பு என்று நாம் இத்துறைக்கு வருவதில்லை. தீவிர இலட்சிய தாகத்துடனும் உளத்திருப்தியுடனும் பணி செய்ய வேண்டும் என்ற உன்னத இலட்சியத்திற்காகவும், அதனை மெய்ப்பிப்பதற்காகவும் நாம் ஊடகத்துறையைத் தேர்ந்தெடுத்துள்ளோம். அல்ஹம்துலில்லாஹ்!

இன்று உலகளாவிய மட்டத்தில் முஸ்லிம் எதிர்ப்புச் சக்திகள் முஸ்லிம்களை அடக்கியொடுக்குவதை பிரதான வேலைத்திட்டமாகக் கொண்டு இலக்குத் தவறாது தீவிரமாகச் செயற்பட்டுவருவதை காண்கின்றோம். இவ் ஆதிக்க சக்திகள் முதலில் தங்களுக்கு சார்பான ஊடகங்களைக் கட்டமைக்கின்றன. அதன் பிரச்சாரத் தளத்தினூடாக தங்களது கோர முகத்தை மறைத்து உண்மையைத் திரிபுபடுத்தி புனைவுகளை உண்மைகளாக்குகின்றன. இந்த ஊடகப் பயங்கரவாதத்தை எதிர்கொள்வதே இன்று முஸ்லிம் உம்மாவுக்குப் பெரும் சவாலாக உள்ளது.

இலங்கைச் சூழலில் ஊடகங்கள் முஸ்லிம்களுக்கு எதிராகப் பெரும் யுத்தத்தினையே பிரகடனப்படுத்தி செயற்பட்டு வருகின்றன. இதன் காரணங்கள் குறித்து சிந்திப்போர் நம் மத்தியில் வெகுசிலரே. பெருமளவிலான நமது மக்கள் [illegible] ஊடகங்களின் பொய்ப்பிரச்சாரத்திற்குப் பலியாகிக் கிடக்கின்றனர்.

நமது சமூக அரங்கில் இலங்கையில் முஸ்லிம்களுக்கான மாற்று ஊடகங்கள் அமைப்பது பற்றிய அதிக பிரக்ஞை சம காலத்தில் வலுப்பெற்று வருகின்றது. இதனை நடைமுறைச் சாத்தியமாக்குவதற்கு நமது சமூக சக்திகள் அனைவரும் முன்வந்து உழைக்க வேண்டியுள்ளது. இலங்கையில் நமது இருப்பை எதிர்காலத்தில் தற்காப்புடன் உறுதிப்படுத்துவதற்கு முஸ்லிம் சுதந்திர ஊடகங்கள் இன்றியமையாத தேவையாகிவிட்டன. இந்நிலையில் முஸ்லிம் ஊடகவியலாளர்களாகிய நமக்கு - சவால் மிகு இக்காலத்தில் மிக முக்கியமான பொறுப்புக்களும் பணிகளுமுள்ளன. நமது முஸ்லிம் ஊடகவியலாளர்கள் சுதந்திரமான ஊடகவியல் நிறுவனங்களின்றி தங்களுக்காகவும் மக்களுக்காகவும் போராட முடியாத கைசேத நிலையில் உள்ளனர்.

"முஸ்லிம் ஊடகவியல் நிறுவனங்கள்" என தம்மை நாமம் சூட்டி உலாவருகின்ற நிறுவனங்களின் போலித்தனத்தையும் ஏமாற்றுத்தனத்தையும் கண்முன்னே கண்டுவருகின்றோம். "பொன்னாடை போர்த்துவதும் பாராட்டு விழா நடத்துவதுமா நமது ஊடக நிறுவனங்களின் பணி?

முஸ்லிம்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு இவ்வூடக அமைப்புக்கள் கடந்த காலத்தில் குரல் கொடுக்கவில்லை. அரசியல்வாதிகளின் பைகளுக்குள்ளும், கைகளுக்குள்ளும் இவ் ஊடகவியலாளர் நிறுவனங்கள் முடக்கப்பட்டுக் கிடக்கின்றன. மக்களுக்கு குரல்கொடுக்க முடியாவிட்டாலும்கூட முஸ்லிம் ஊடகவியலாளர்களுக்கு நடைபெறும் அநீதிகளையாவது தட்டிக் கேட்கலாம் அல்லவா? அதுவும் இல்லை. பதவிகளைக் காப்பாற்றிக்கொள்வதற்கு ஊடகவியலாளர் நிறுவனங்கள் தேவையில்லை என்பதை இவ்வூடக நிறுவனங்களின் தலைமைப் பொறுப்பில் விடாப்பிடியாகத் தொங்கிக்கொண்டிருப்போர் உணர்தல் வேண்டும்.

உடனடியாக முஸ்லிம் சுதந்திர ஊடகவியலாளர் நிறுவனங்கள் அமைக்கப்படல் வேண்டும். இது முஸ்லிம் குரலின் அழைப்பும் வேண்டுகோளுமாகும். குறிப்பாக முஸ்லிம் சமூகத் தளத்தில் வெளிவரும் சுயம், மீள்பார்வை, எங்கள் தேசம், அல்ஹஸனாத், நவமணி இன்னும் இன்னுமான பத்திரிகைகளில் எழுதும் சுதந்திர ஊடகவியலாளர்கள் இதுபற்றி சிந்திப்பார்களா?

*தோழமையுடன்*
*பிரதம ஆசிரியர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 143, [illegible] அச்சிட்டு வெளியிடப்படுகிறது.